www.padippakam.com

# காவிரியும் கலைஞரும்

## (விரிவாக்கப்பட்ட இரண்டாம் பதிப்பு)

பூ. அர. குப்புசாமி



தமிழக அரசியலாரின் இரண்டகம். நடுவணரசின் வஞ்சனை. கர்நாடகத்தின் கயமை இம் மூன்றும் தமிழகத்தின் காவிரி மீதான ஆற்றுரிமையை முற்றாக உடைத்தது!



படிப்பகம்

பட்டியல் 2

காவிரியில் கர்நாடக அரசு திட்டம் தீட்டி நிறைவேற்றி வரும் திட்டங்கள்.

| எண் | திட்டத்தின் பெயர் | ஆயக்கட்டு (எக்டேர்களில் 1000களில்) | இறுதியாக பயன்படுத்தும் அளவு |
|---|---|---|---|
| | தற்போதுள்ளதும் நடைபெற்றுக் கொண்டிருப்பதுமான திட்டங்கள் | | |
| 01 | அணைக்கட்டுக் கால்வாய்கள் | | |
| 02 | கிருட்ண இராச சாகர் | 77.1 | 57.7டி.ம.கோ.க.அ |
| 03 | கான்வா | 79.1 | 61.2 |
| 04 | பைர மங்கலா | 2.0 | 1.2 |
| 05 | மார்க்கோனகள்ளி | 1.6 | 1.0 |
| 06 | எப்பஅல்லா | 6.1 | 4.0 |
| 07 | நுபு | 1.2 | 0.4 |
| 08 | சிக்கஓலே | 10.5 | 7.7 |
| 09 | மங்களா | 1.7 | 0.7 |
| 10 | சுவர்ணவதி | 0.8 | 0.6 |
| 11 | குண்டால் | 2.8 | 3.6 |
| 12 | நல்லூர் அமளிக்கரே | 4.0 | 1.4 |
| 13 | காமசமுத்திரா (எல்.ஐ.எஸ்) | 1.3 | 0.3 |
| 14 | அச்சன கோப்பலு (எல்.ஐ.எஸ்) | 3.1 | 0.8 |
| 15 | ஏமாவதி | 2.3 | 0.6 |
| 16 | ஒட்டஓலே | 283.6 | 54.7 |
| 17 | யாஆச்சி | 7.5 | 2.4 |
| 18 | கபினி | 21.5 | 5.7 |
| 19 | ஏறங்கி | 87.9 | 85.0 |
| 20 | சிக்கிடி ஓலே | 54.6 | 18.0 |
| 21 | மஞ்சன பேலே | 1.7 | 0.8 |
| 22 | தரங்கா | 3.8 | 0.8 |
| 23 | அர்க்கவதி | 7.0 | 3.2 |
| 24 | இக்கலூர் | 8.6 | 3.4 |
| 25 | தேவராசு அர்சு வர்ண கால்வாய் | 4.0 | 1.8 |
| 26 | உதுதூரகல்லா | 32.4 | 10.5 |
| 27 | கிருட்ணராச சாகர் நவீனப்படுத்துதல் | 6.3 | 1.2 |
| 28 | சிறு வேளாண் திட்டங்கள் | 2.0 | -- |
| 29 | குடிநீர் வழங்குதல் | 250.6 | 71.3 |
| | | -- | 28.0 |
| | மொத்தம் | 965.3 | 407 |
| | மேலும் கட்டப்பட உள்ள திட்டங்கள் | | |
| 30 | பட்சுபலை தீர்த்தம் | 2.8 | 1.5 |
| 31 | கிருட்ணராச சாகர் விரிவாக்கம் | 45.5 | 8.2 |
| 32 | செங்கவாடி | 2.6 | 1.3 |
| 33 | லோகாபவானி | 3.0 | 2.0 |
| 34 | பூரி கல்லி நதிநீரேற்று வேளாண் திட்டம் | 3.6 | 1.4 |
| 35 | சிறு வேளாண் திட்டங்கள் | -- | 22.0 |
| 36 | மின் எடுத்தல் | | |
| 37 | மின் எடுத்தல் | | |
| 38 | நீர்த்தேக்க சேதாரங்கள் | | 6.0 |
| 39 | நீராதார மின் நிலையங்கள் | | 1.0 |
| | மொத்தம் | 91.2 | 57.3 |
| | இரண்டும் சேர்த்து மொத்தம் | 1056.5 | 465.0 |

காவிரி மற்றும் அதன் கிளை நதிகளிலிருந்து 37 திட்டங்களுக்கு மேலாக வகுத்து 465 கோடிக் கன அடி நீரை முற்றாக கர்நாடகம் பயன்படுத்த விரைவாகச் செயல்பட்டு வருகிறது. இதற்கு ஷஷகாவிரி ஒட்டுமொத்தத் திட்டம்.. எனப் பெயர் வைத்திருக்கிறார்கள். இதில் பெரும்பாலான திட்டங்கள் முற்றுப் பெற்று விட்டன. பங்காரப்பா கர்நாடக மாநிலத்தின் முதல்வராக இருந்தபோதே. இன்னும் மூன்றாண்டுகளில் இத்திட்டங்கள் நிறைவு பெறும் என்று கூறினார். அந்த ஒட்டுமொத்தத் திட்டத்தின் கீழ் பெங்களூரின் குடிநீர் திட்டம் சேராது. சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சிக்குக் கீழே உள்ள நீர் மின் நிலையம் இதில் சேராது. மேக்கே தாட்டு அணைத் திட்டமும் சேராது. இவைகளை நிறைவேற்றுவதற்கு கர்நாடகம் எந்தச் சட்டத்தையும் ஞாயத்தையும் பின்பற்றவில்லை. ஒப்பந்தங்களை மீறியும். தமிழ்நாட்டு அரசின் ஒப்புதலின்றியும். நடுவண் நீர் ஆணையத்தினை மீறியும். நடுவண் நீர்வளத் துறையை மீறியும். நடுவணரசின் ஒப்புதலின்றியும். தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது.

(மேல் குறிப்பிட்டுள்ள இந்த விளத்த(விவர) மெல்லாம் கர்நாடக அரசின் நீர்வேளாண்துறை வெளியிட்டுள்ள காவிரி நீர் தகராறு என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவை. (காண்க பக். 40-42) (வேர்கள் 3:7 தை 1999)

www.padippakam.com

# காவிரியும் கலைஞரும்

பல நாடுகளின் வழியாகச் செல்லும் நதிகள் உலகில் ஏராளம் உண்டு. அவைகள் செல்லும் நாடுகளிடையே பிணக்குகள் தோன்றினால் அதைச் சீர் செய்யச் சட்டங்கள் உண்டு.

'இந்தி'யா - பாக்கிசுத்தான், 'இந்தி'யா - வங்காள தேசம் ஆகிய நாடுகளிடையே ஓடும் ஆறுகளால் பெரிய அளவில் பிணக்குகள் எதுவும் இல்லை. என்றாலும் இருப்பவைகளும் பேசித் தீர்க்கப்பட்டு வருகின்றன. எனவே, ஒரு நாடு தனது நீர் உரிமையைப் போரின்றி மீட்க முடியாது என்ற நிலை இதுவரை எழவில்லை. கடந்த காலத்தில் காவிரியைக் காக்க, அதன் குறுக்கே கர்நாடகம் கட்டிய அணையை உடைக்க தமிழகப் படை சென்றதுண்டு.

தமிழர் நாடும், கேரளமும் 'இந்தி'யத் திருநாட்டில்தான் இருக்கின்றன! கேரளம்கூட, முன்பு தமிழகத்தின் ஒரு பகுதியாக இருந்தது தான். ஆனால், கேரள நதிகள் மேற்கு மலைத் தொடரில் உற்பத்தியாகி, மேற்கு முகமாக ஓடி, அரபிக் கடலில் நீரைக் கொட்டி வீணாக்கி விடுகின்றன. சென்ற நூற்றாண்டிலேயே வெள்ளையரின் அரசு, அந்த நீரை அளவெடுத்து கேரளத்தின் வேளாண்மைக்கும் பிற தேவைகட்கும் போக மீதி நீரைத் தமிழகத்தில் கொண்டு வந்து பாய்ச்சுவதற்கானத் திட்டங்களைத் தீட்டியிருந்தது. அதற்குரிய நில அமைப்பும் உள்ளது. ஆனால் நாளதுவரை 'இந்தி'யத் திருநாட்டின் தேசிய நீரோட்டத் தலைவர்கள், பாரதத் தாயின் மடியில் பால் அருந்தி மகிழ்பவர்கள் யாரும் தமிழகத்திற்கு இந்த வீணாகும் நீரைப் பெற்றுத் தர எண்ணியது இல்லை. மாறாக, காவிரியில் கேரளப் பகுதி கிளைநதி ஒன்று கலப்பதாகக் கூறி, காவிரி நீரில் தங்களுக்கும் பங்கு வேண்டுமென உரத்தும், ஓயாமலும் குரல் கொடுத்துச் செயல்பட்டு வருகிறார்கள் மலையாளிகள்.

### *ஒற்றுமையின்மைக்குக் காரணியம் கலைஞரே!*

ஆனால் தமிழர்களோ தங்களின் ஒரே மூச்சான காவிரி நதி குறித்து முறையாக எண்ணுவதில்லை. ஒன்றுபட்டுச் செயல்படுவதுமில்லை. ஒற்றுமையாகக் குரல் கொடுப்பது பற்றிச் சிந்திப்பதும் இல்லை. அப்படி முறையாகக், கூட்டாகச் செயல்பட தலைவர்கள் அல்லவா வழிகாட்ட வேண்டும்! காட்டினார்களா? 'தமிழினத் தலைவர்' என்று பட்டம் சூட்டிக் கொண்ட கலைஞர், அப்படித் தமிழர் நாட்டுக்கு வழிகாட்டினாரா? இல்லையே! இராசாசி அவர்களும், அண்ணா அவர்களும், ம.பொ.சி. அவர்களும், சீவா அவர்களும் மற்றும் அன்றிருந்த தலைவர்கள் அனைவரும் வட எல்லைப் போராட்டம், தேவிகுளம், பீர்மேடு மீட்புப் போராட்டம் போன்ற ஒற்றுமையானப் போராட்டங்களைத் தேவையான போதெல்லாம் தொடர்ந்து தமிழகத்தில் நடத்தி வந்திருந்தால் தமிழகம் இன்று காவிரியை மட்டுமல்ல தமிழக மண்ணின் ஒரு பகுதியையும் இழந்துவிட்ட நிலை ஏற்பட்டிருக்காது! கடைசியாகத் தமிழர்களின் ஒன்றுபட்டப் போராட்டம் என்பது காலஞ் சென்ற ஜி.டி.நாயுடுவுக்காகத்தான். அதன் பிறகு, பிளவு, பேதம், ஒற்றுமையின்மை ஆகியவை தான். அந்த ஒற்றுமையின்மைக்கு வித்திட்டு வளர்த்த பெருமை கலைஞரையேச் சாரும்.

காவிரிப் பிரச்சனையில் கலைஞர் கடந்த 20 ஆண்டுகளாகச் செய்யக் கூடாதவைகளைச் செய்தும், செய்ய வேண்டியதைச் செய்யாமலும் விட்ட பெருங் குற்றங்களால்தான் நாம் இன்று காவிரியை இழந்து நிற்கிறோம், என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள இயலாது. ஆனால் இன்று சாதி, மத வெறி போல கட்சி வெறியும் கொண்டுள்ளனர் பலர். இதனால் கட்சிகளைக் கடந்து உண்மைகளைக் காணும் ஆற்றலை நாம் இழந்து நிற்கிறோம். ஆனால் காலம் கடந்தாவது காவிரி பற்றிய உண்மைகளை நாம், தமிழர்களுக்கு எடுத்துக்கூறுவது கடமையாகும்.

'இந்தி'யாவில் மாநிலங்களுக்கிடையே ஓடும் நதிகள் குறித்து, அம்மாநிலங்களுக்கு இடையே சிக்கல் எழுந்தால், அது குறித்து முடிவெடுக்க, 'மாநிலங்களுக்கு இடையே எழும் நீர்த் தாவாச் சட்டம்' ஒன்று உள்ளது. அதன்படி அமைக்கப்படும் ஒரு நடுவர் மன்றம் அளிக்கும் தீர்ப்பு, தொடர்புடைய மாநிலங்களைக் கட்டுப்படுத்தும். மாநிலங்களுக் கிடையே பேசித் தீர்க்க இயலாவிட்டால், நடுவணரசும் உடன்பாடு ஏற்படுத்த இயலாவிட்டால், நடுவர் மன்றம் அமைத்துத் தீர்ப்பை நாடுவதே 'இந்தி'யா வில் உள்ள சட்ட வழியான இறுதி வழி.

எனவே, காலாகாலத்தில் நடுவர் மன்றம் கேட்டுப் பெறாவிடில் காரியம் முழுவதும் கெட்டுவிடும். உரிய காலத்தில் மன்றம் அமைத்து ஒரு தீர்ப்பை அது அளித்தாலும், அத் தீர்ப்பை மறும் மாநிலத்தைக் கட்டுப்படுத்த, 'இந்தி'யாவில் ஏற்பாடு ஏதும் இல்லை என்கிற உண்மையை நாம்



படிப்பகம்

www.padippakam.com

மறந்துவிடக் கூடாது. மேற்கண்ட இரண்டு உண்மைகளையும் மனதில் பதிய வைத்துக் கொண்டு, காவிரிப் பிரச்சனையைத் தமிழகத்தின் சார்பில் பார்ப்போம்.

1969 க்கு முன்னரே, கர்நாடகம் ஒப்பந்தத்தை மீறியும், தான்தோன்றித்தனமாகவும் காவிரியிலும் அதன் கிளை நதிகளிலும் தேக்கங்களைக் கட்டவும், நீர் வரத்தைப் பாதிக்கும் பிற செயல்களைச் செய்யவும் தொடங்கிவிட்டது. எனவேதான் தமிழக அரசின் பொறுப்புள்ள அதிகாரிகள், உச்ச நயன்மை மன்றத்தில் காவிரி குறித்து வழக்கு தொடுக்க தமிழக அரசுக்கு அறிவுரை கூறி, அதன்படி தில்லி உச்ச நயன்மை மன்றத்தில் கர்நாடக அரசின் மீது வழக்கு போட்டது.

### *சர்க்காரியாவிடமிருந்து தப்பிக்க, காவிரியைப் பலியிட்டார்!*

அன்றைய பேராயக் (காங்கிரஸ்) கட்சியின் நடுவணரசு; அ) கர்நாடகமும், தமிழகமும் உரையாடல் வழியாகக் காவிரிப் பிரச்சனையைத் தீர்க்க முடியவில்லை எனத் தெரிந்தும், ஆ) கர்நாடக அரசு தொடர்ந்து நீர்த் தேக்கங்களைக் கட்டுகிறது என்பதை அறிந்தும் நடுவர் மன்றம் ஏற்படுத்த முன்வரவில்லை. இது அவர்களுடைய அரசியல் காரணங்களால் ஆகும். அதாவது தமிழகம் பாதிக்கப்படுவது தெரிந்தும் நடுவணரசு உதவ முன்வரவில்லை. எனவேதான் தமிழக அரசு உச்ச நயன்மை மன்றத்தில் வழக்கு தொடுத்தது. ஆனால் தன்னுடைய அரசியல் ஆதாயத்திற்காகக் கலைஞரை வற்புறுத்தி அந்த வழக்கைத் திரும்பப் பெறும்படிச் செய்தார் இந்திரா காந்தி! கலைஞரும் தனது அரசியல் வரும்படிக்காக அதைத் திரும்பப் பெற்றார். இதுதான் காவிரி நதிநீர்ச் சிக்கலில் தமிழகத்திற்கு ஏற்பட்ட மிகப் பெரிய சறுக்கலாகும். தமிழக அரசு போட்ட வழக்கை மட்டுமல்ல, கருப்பையா (மூப்பனாரு)ம், மன்னை நாராயண சாமியும், காவிரித் தீர உழவர்கள் சார்பாகப் போட்டிருந்த வழக்கையும் (அந்த இரு கட்சித் தலைவர்களும் எடுத்த முடிவுக்கேற்ப) உச்ச நயன்மை மன்றத்திலிருந்து திரும்பப் பெற வேண்டியதாயிற்று.

---

**'தமிழினத் தலைவர்' அம்மையாரிடம் ஆள் மேல் ஆள் தூது அனுப்பி தன்னை உசாவ அமைக்கபபட்ட சர்க்காரியா ஆணையத்தைத் திரும்பப் பெறுவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தார்**

---

பிறகு, கலைஞர், இந்திரா காந்தியிடம் மிக நெருங்கி அரசியல் செய்த காலம் முழுவதும் (தில்லியிலிருந்து அவர் இரவோடு இரவாக இவரை வந்து பார்த்துச் சென்றார் என்று பரபரப்பாகப் பேசப்பட்ட காலத்திலெல்லாம்) வழக்கைத் திரும்ப வாங்கச் சொன்ன அம்மாவைப் பார்த்து. "காவிரிப் பிரச்சனைக்கு வழி என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டாரில்லை. 'தமிழினத் தலைவர்' அம்மையாரிடம் ஆள் மேல் ஆள் தூது அனுப்பி தன்னை உசாவ அமைக்கப்பட்ட சர்க்காரியா ஆணையத்தைத் திரும்பப் பெறுவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தார். அதனால், காவிரியை மறந்துவிட்டார். ம.கோ.இரா. (எம்.ஜி.ஆர்.) முதல்வராக இருந்த காலம் முழுவதும்கூட ஒரு தமிழர்நாட்டுத் தலைவன் என்ற முறையில் காவிரிப் பிரச்சனைக்காக ஒரு போராட்டமோ ஒரு கிளர்ச்சியோ செய்தாரில்லை.

உண்மையில் வேறு வழியின்றி ம.கோ.இரா நடுவர் மன்றம் வேண்டும் எனக் கேட்டபோது, அதைக் கலைஞர் எதிர்த்தார். இவர் மீண்டும் ஆட்சிக்கு வருமுன் இருந்த ஆளுனர், "நடுவர் மன்றத்திற்கு இப் பிரச்சனை விடப்பட வேண்டும்!" என்று கூறியதையும் இவர் எதிர்த்தார்.

---

**"நடுவர் மன்றத்தால் கெடுதல்தான்!" என்றும், "பேசியே தீர்க்க முடியும்!" என்றுதான் கலைஞர் சொல்லி வந்தார்.**

---

காலதாமதம் ஆவதாலும், தொடர்ந்து காவிரியிலும் அதன் கிளை நதிகளிலும் கர்நாடகம் அணைகள் கட்டுவதைப் பார்த்துப் பதறிய காவிரிக் கடைமடைப் பகுதி உழவர்கள் மாநாடுகள் பல போட்டு, நடுவர் மன்றம் வேண்டுமென உரத்துக் குரல் கொடுத்தனர். திராவிடர் கழகமும் மாநாடு போட்டு நடுவர் மன்றம் வேண்டுமென அழுத்தம் திருத்தமாகக் கோரியது. அப்போதும் கலைஞர் அவைகளை எதிர்த்தார். வெளிப்படையாக, "நடுவர் மன்றத்தால் கெடுதல்தான்!" என்றும், "பேசியே தீர்க்க முடியும்!" என்றும் சொல்லி வந்தார்.

ஏன்! இரண்டாம் முறையாக அவர் முதல்வராக வந்த பிறகும், தொடர்ந்து "நடுவர் மன்றம் தேவையில்லை!" என்றும், பேசியே தீர்க்க முடியுமென்றும் சொல்லி வந்தார். ஆனால் கர்நாடக அரசு பேசித் தீர்ப்பது என்பதை ஒரு நாடகமாகவே நடத்தி வந்தது என்பதைப் பச்சையாகப் புரிந்தவுடன்தான் இனி வேறு வழியில்லையென, ஏற்கனவே தஞ்சை உழவர்கள் உச்ச நயன்மை மன்றத்தில் தாக்கல்



படிப்பகம்

www.padippakam.com

செய்திருந்த வழக்கில் தமிழக அரசையும் இணைக்கச் சொல்லி வேண்டுதல் செய்தார்.

### மக்களின் கண்களில் மண்ணைத் தூவினார்!

கர்நாடகம் செய்துவந்த இந்த வஞ்சகங்களைத், தமிழர்நாட்டு மக்களுக்குக் கூற வேண்டிய நிலையிலிருக்கிற கலைஞர், தான் கூறி வந்த உரையாடல் வழியாகத் தீர்வு என்பது சாரமற்ற ஒன்று என்பதை மக்கள் கண்டுகொள்ளாமல் இருக்கும் பொருட்டு, வாய்ப்பாக வந்த மறைமலை நகர்ப் பிரச்சனையைப் பூதாகரமாக்கித் தமிழ் மக்களின் கண்ணில் மண்ணைத் தூவினார்.

அப்படிப்பட்ட கீழறுப்பு வேலையில், பேராயக் கட்சிக்காரர்களும் சளைத்தவர்களில்லை. கர்நாடக மாநில பேராயக்கட்சி முதல்வர் தமிழகத்திற்குச் செய்த வஞ்சனைகளைக் கண்டிக்க வக்கில்லாத அதே வேளையில் மறைமலை நகருக்கு காமராசர் பெயரைச் சூட்ட வேண்டுமென்ற கிளர்ச்சியைத் தொடங்கினார்கள் இங்கிருந்த பேராயக் கட்சிக் காரர்கள். இப்படியாக, இந்தியத் தேசியவாதியும், திராவிடத் தேசியவாதியும் சரியான நேரத்தில் தமிழ் மக்களின் கண்களைக் கட்டிப் போட்டுவிட்டு அரசியல் கண்ணாமூச்சி விளையாடினார்கள்.

### திசை திருப்பும் வேலையைச் செய்தார்!

மாநிலங்களுக்கிடையே உள்ள நதிநீர் தகராறு பற்றிய சட்டத்தின் முடிவுகளுக்குக் கட்டுப்படாமல் போகும் மாநிலங்களை யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது. அது கலைஞருக்குத் தெரியும். தெரிந்தும், 1971 இல் உச்ச நயன்மை மன்ற வழக்கை அரசியல் காரணங்களுக்காக திரும்பப் பெற்றார். அப்படித் திரும்பப் பெற்றிராவிட்டால், 1973-74 வாக்கில் நடுவர் மன்றத் தீர்ப்பு வந்திருக்க ஞாயமுண்டு. பிறகு தீர்ப்பை மீறும் கருநாடக அரசு மீதும், கர்நாடகத்திற்கு உடந்தையாக இருக்கும் நடுவணரசு மீதும், தமிழர்கள் போர் தொடுத்திருப்பார்கள். அப்படியொரு நிலைமை வருவதைத் தவிர்க்கும் பொருட்டே காவிரிச் சிக்கலில் எப்போதுமே கலைஞர் திசை திருப்பும் முயற்சியில்தான் ஈடுபட்டு வந்திருக்கிறார்.

உண்மையில், அண்மையில் அமைந்த நடுவர் மன்றத்திற்கு அரசு அளித்த விளக்கக் குறிப்புகள் இடைக்கால ஆணை குறித்த பகுதி தெளிவாகவும், வெளிப்படையாகவும் இல்லாததால், நடுவர் மன்றம் தனக்கு இடைக்காலத் தடை ஆணை பிறப்பிக்க அதிகாரம் தரப்படவில்லை எனக்கூறி, ஒரு போக நெல்லைப் பாதுகாக்க இயலாத நிலை ஏற்பட்டு பெருத்த நட்டத்தைத் தமிழகம் அந்த ஆண்டும் அடைய நேரிட்டது.

இந்தியாவில் நதிநீர்ப் பிரச்சனையில் இறுதியாக முடிவு செய்யும் அதிகாரம், நடுவர் மன்றத்திற்கு மட்டுமே உள்ளது. அதன் தீர்ப்பை நடைமுறைப் படுத்த இயலாது போனதற்கு பல சான்றுகள் உள்ளன. எனவே, ஏற்கனவே தீர்ப்பாகி இருந்ததை நிறைவேற்ற இயலாமல் போனபோது, தமிழக மக்கள் தங்கள் உரிமையை நிலைநாட்ட அரசியல் ரீதியில் என்ன செய்ய வேண்டும் என்பதை முடிவெடுக்க அது ஏதுவாக இருந்திருக்கும். அப்படிப்பட்ட அரசியல் தீர்வுக்கான வழிமுறையைத் திறந்துவிட வாய்ப்பு ஏற்பட்டுவிட்டால் பின்னர் தங்கள் சொகுசு வாழ்க்கை, தங்கள் அரசியல் காலம் கடந்துவிடும் என்பதை அறிந்தே கலைஞர் கருணாநிதி போன்றவர்கள் அச்சிக்கல்களை இறுதிக்கட்டம் அடைய விடுவதில்லை.

### தனக்குப் பதவி இருந்தால் போதும்!

நடுவர் மன்றத் தீர்ப்பு என்பது, கலைஞர் வழக்கை திரும்பப் பெறாமல் இருந்து, 16-17 ஆண்டுகட்கு முன்பு வந்திருந்தால், இதற்குள் தமிழ்நாட்டு காப்புச் சக்திகள் தலையெடுத்து, தமிழ் மக்களைத் தங்கள் உரிமையை நிலைநாட்ட வேண்டிய கிளர்ச்சி அரசியலில் இறங்கி விட்டிருப்பர். அப்படிப்பட்ட கிளர்ச்சி அரசியலைத் தடுப்பதே, கலைஞர் போன்றவர்களின் நோக்கம். பழைமை எதிர்ப்பு ஆகட்டும், இந்தியெதிர்ப்புப் பிரச்சனையாகட்டும், ஈழத்தமிழர் பிரச்சனையாகட்டும்!

- பிரச்சனையின் ஆழமும் உண்மை நிலையும் மக்களுக்குத் தெரியக் கூடாது,
- பிரச்சனைகள் தங்கள் (குளிர்பதன அறை) அரசியலுக்குள்ளேயே இருக்க வைத்துவிட வேண்டும்.
- எது கெட்டாலும் கவலையில்லை; ஆனால் தலைமை தங்களைவிட்டுப் போய்விடக் கூடாது.
- இப்படிப்பட்ட கடைந்தெடுத்த தன்னல அரசியல் மற்றும் பதவி நோக்கத்தால்தான், காவிரியை நாம் இழந்தோம்.

- மேட்டூருக்குக் கீழே, கல்லணை வரையில் பரிசல் துறைகள் இன்றுள்ளனவா? ஆடிப்பெருக்கு ஏற்படுகிறதா?
- முதலில் ஒரு போகம் இழந்தோம். பிறகு இரு போகம் இழந்தோம்.
- தஞ்சையில் குடிநீர்த் தட்டுப்பாடு.



படிப்பகம்

www.padippakam.com

☞ நிலம் பல இடங்களில் வெடிக்கத் தொடங்கி விட்டது. உழவர்கள் கடனில் மூழ்கிவிட்டனர்.
☞ பட்டினிச் சாவு.
☞ அறுவடை நேரங்களில் வெளி மாவட்டங்களில் இருந்து வேலை தேடி தஞ்சைக்கு வருகிற நிலை மாறி தஞ்சையிலிருந்து பிற இடங்களுக்கு வேலை தேடிப் போகும் நிலை!
☞ தஞ்சைமாவட்ட வாக்காளர்கள் எண்ணிக்கை கூட குறைந்துவிட்டது.
☞ ஆண்டுக்கு 140 கோடி உருவா நட்டம். குடிநீருக்கே பஞ்சம்.
☞ நிலத்தடி நீர் மிகவும் கீழே போய்விட்டது.
இப்படிக் குலைநடுங்கும் செய்திகள் வந்தவண்ணமாய் இருக்கின்றன.

எங்கேயோ அர்ச்சென்டினா நாட்டிலிருந்து வரும் செய்தி அல்ல இது! தஞ்சைத் தரணியிலிருந்து வரும் செய்தி இது! ஏன், குளித்தலைக்குக் கிழக்கிலிருந்தே பிரச்சனை முற்றிவிட்டது. எனவேதான் நடுவர் மன்றம் வந்தபோது, "தலைவர்களை" எதிர்பார்க்காது, கட்சிகளைப் பாராது, மக்கள் அனைவரும் ஒன்று திரண்டனர். தலைவர்களை நம்பிப் பயனில்லை என்பதை மக்கள் உணர்ந்துவிட்டனர் என்பதற்கு மாயனூரிலிருந்து மன்னார்குடி வரை மக்கள் திரண்டு நின்றதே சான்று!

இதில் கலைஞரின் பங்கு என்ன? கட்சியினரைத் திரண்டு நிற்கக் கூறினாரா? அல்லது நடுவர் மன்றம் வந்து போகும்வரை காவிரியின் நினைப்பாவது அவருக்கு இருந்ததா? "ஆட்சியைப் பிடுங்கிக் கொண்டாளே, வாங்கித் தா உடன் பிறப்பே!" என நாள் தவறாமல் ஒப்பாரி பாடி வந்தார். செயலலிதா ஏதோ சொல்லப்போய் அதைக் கண்டித்து ஓரிரு நாள் எழுதினார். துரைமுருகனை வைத்துத் திரும்பத் திரும்ப தாக்கப் பணித்தார். "காவிரிப் பெண்ணாள் குடகில் பிறந்தாள் தஞ்சையில் புகுந்தாள்" என தன் பாணியில் வசனம் எழுதினார்.அவ்வளவுதான். அவருடைய மாணக்கன் எல். கணேசன், "தஞ்சைக்கு நீர் வராமல் தரிசாகிவிட்டாலும், கலைஞர் தஞ்சையைத் தொழில் மயமாக்கி விடுவார்." எனப் பேசி, தஞ்சையைக் காய வைத்ததை ஒப்புக் கொள்கிறார். இவர்தான் இப்போது ம.தி.மு.க.வின் அவைத் தலைவர்.

### *தமிழகப் பிரச்சனையை தஞ்சைப் பிரச்சனையாகச் சித்தரித்தார்!*

தமிழ், தமிழன் என்ற உணர்ச்சிகளை வாக்குச்சீட்டாக்கி, பதவி பெற்று, பவிசு பெற்று, பணம் பெற்று, சுகமான வாழ்க்கையைக் கண்டுவிட்ட இவர்கள், தமிழனின் உரிமைகள் அழிக்கப்படுவதையும், இழக்கப்படுவதையும் தமிழர்களுக்கு எடுத்துக் கூறாமல், அமுக்கி வைத்துவிட்டு வாய்ச்சவடால் அரசியல் பேசியே தமிழகத்தைச் சுடுகாடாக்கி விடுகிறார்கள்.

கடந்த 3-4 ஆண்டுகளாகப் பார்த்தீர்களானால், கருணாநிதி காவிரிப் பிரச்சனையைத் தமிழர்நாட்டு உரிமைப் பிரச்சனையாகக் குறிப்பிடுவதை முழுவதுமாகத் தவிர்த்துள்ளதையும், தஞ்சை உழவர்களின் பிரச்சனையாகவே அதைக் குறிப்பிடுவதையும் காணலாம். "தமிழக உரிமை பறி போகும்" உண்மையைக் கூறினால், தமிழ் உணர்வு கொண்ட இளைஞர்கள் கிளர்ந்தெழலாம்! அதைத் தவிர்க்கவே கலைஞர் இப்படிச் சொற்சிலம்பாட்ட அரசியல் நடத்தி, தமிழனின் உரிமையில் கை வைத்து வருகிறார்.

கலைஞருக்கு, கதை எழுத, திரைப்படம் எடுக்க, அரசியல் பண்ண இன்னும் என்னென்னவோ கசமுசா வேலைகளில் ஈடுபட நேரமிருக்கிறது. ஆனால், காவிரி போன்ற உயிர்ப்பிரச்சனையைக் குறித்து யோசிக்கக்கூட அவருக்கு நேரம் இருப்பதில்லை.

அதனால் ப.உ.சண்முகம் அவர்கள் நீர்ப்பாசன அமைச்சராக இருந்தபோது (1974 ஆக இருக்கலாம்) ஒரு முறை இரு மாநிலங்களுக்கு இடையேயும் ஒரு ஒப்பந்தம் எழுதப்பட்டு, மறுநாள் கையெழுத்து இடப்போகும் நாள்!. ஆனால் அதற்கு முந்திய இரவே திடுமென அதை நிறுத்தி வைத்துவிட்டார் கலைஞர். அந்த ஒப்பந்த விளத்தங்(விவரங்)களின் சார்பு, எதிர்ப்பு அம்சங்கள் குறித்து சிந்திக்க அவருக்கு நேரம் இல்லாததால் அப்போது அதை நிறுத்தினார். பிறகு அது நின்றே போய்விட்டது.

இடைக்கால துயரழிப்பு (நிவாரணம்) தரக் காவிரி நடுவர் மன்றத்திற்கு அதிகாரம் தந்தது மத்திய அரசு. "Terms of reference" தரவில்லை என தமிழகத்தின் தலையில் இடி விழுந்தது போல ஒரு தீர்ப்பை அம்மன்றம் தந்தது. காயும் 11 இலக்கம் குறுக்கம் (ஏக்கர்) நிலங்களில் இருந்த நெற் பயிரைக் காக்க, தடுத்து, தேக்கி வைத்திருக்கும் நீரைக் கருநாடகம் தமிழகத்திற்குத் தரவேண்டும் என ஒரு இடைக்கால ஆணையைப் போட, தனக்கு அதிகாரம் தரப்படவில்லை என நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பு பெரும் அதிர்ச்சியைத் தந்தது. அந்தச் செய்தி ஏடுகளில் கொட்டை எழுத்துக்களில் வெளியானது. ஆனால்



படிப்பகம்

www.padippakam.com

கலைஞரின் குடும்ப ஏடு முரசொலி, 'கலைஞரின் தில்லிப்பயணம் வெற்றி' எனச் செய்தி போட்டது!

## இன்னும்கூட ஒரு தி.மு.க. தொண்டன், காவிரி நடுவர் மன்றம் கலைஞரால்தான் வந்தது என்று தவறாக நம்பிக் கொண்டு இருக்கிறான்!

சென்னையில் நடக்கும் திரைப்பட விழாவிற்குத் தலைமையமைச்சர் வர ஏற்றுக் கொண்டது, வெற்றியாம்! ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இம் முறை 250 கோடி அதிகம் ஒதுக்க ஒப்புக் கொண்டது மாபெரும் வெற்றியாம்! காவிரி தொடர்பான தமிழர் எதிர்ப்புச் செய்தியை மக்களிடமிருந்து மறைக்கவும், திசை திருப்பவும் செய்தார். இன்னும்கூட ஒரு தி.மு.க. தொண்டன், "காவிரி நடுவர் மன்றம் கலைஞரால்தான் வந்தது" என்று நம்பிக் கொண்டு இருக்கிறானே தவிர, அவரால்தான் 16-17 ஆண்டுகள் தாமதமாக வருகிறது என்பதை யும் அப்படித் தாமதமானதால்தான் காவிரி காய்ந்து போனது என்பதும் அவனுக்குத் தெரியாது!

## நடுவர் மன்றம் கூடாது என்பதில் கருணாநிதி மிக உறுதியாக இருந்தார்!

"நடுவர் மன்றம் கூடாது" என்பதில் கலைஞர் மிக உறுதியாக இருந்தார். "காவிரி நில உழவர்கள், மன்றம் வேண்டும் என்கிறார்கள். நீங்கள் ஏன் வேண்டாம் என்கிறீர்கள்?" எனக் கேட்டவர்களிடம் எரிந்து விழுந்தார். பலவிதமாக விளக்கங்களைக் கொடுத்துக் குழப்பினார்.

மாநாடு கூட்டி, 'நடுவர் மன்றம் வேண்டும்' எனக் கேட்ட திராவிடர் கழகத்தைச் சாடினார். ஆட்சிக்கு இரண்டாம்முறை வந்த போதும் "உரையாடல்" எனும் பழைய ஒப்பாரியை வைத்தார். பின்னர் கருநாடகத்தின் கழுத்தறுப்பு வேலைகளைத் தாங்க இயலாமல் வெகுநாள் கழித்து அவருக்கு ஞானம் உதித்து, "நடுவர் மன்றம் வேண்டும்", என்றார்.

## எல்லாம் கெட்டபிறகு வந்த ஞானோதயம்!

செய்ய வேண்டியதைச் செய்யாமலும் செய்யக்கூடாததைச் செய்தும் காவிரியைக் காயப்போட்ட கதாநாயகர் அவர். ஆண்டுதோறும், 5 நூறு கோடி கன அடி நீர், 10 நூ.கோ.க. அடி நீர் என்று பிச்சை கேட்டும், மின்சாரத்திற்கு தண்ணீர் தா என்று பேரம் பேசியும், "ஏதோ காவிரி என்பது கருநாடகத்தின் தனிச் சொத்து" என்கிற மாயையை, பொய்யைத் தமிழர்களே ஏற்றுக் கொள்கிற அளவுக்கு மாற்றியவர் இவர்தான்!

கர்நாடகாவைப் பொறுத்தமட்டில் காவிரிப் பிரச்சனையில் அனைத்துக் கட்சிகளும் ஒரே குரலில் பேசி வருகின்றன. ஆனால், அண்ணாவுக்குப் பிறகு கலைஞர் தன் சொந்த அரசியல் நலன்களுக்காக கட்சிகளையும், சாதி ரீதியிலான அமைப்புக்களையும், மத ரீதியான அமைப்புக்களையும் பிளவுபடுத்தினார். ஈழம், காவிரி போன்ற பிரச்சனைகளிலும்கூட அனைத்துத் தமிழர் அமைப்புகளும் ஒன்றுபட இயலாத நிலைகளை உருவாக்கி ஒற்றுமையின்மை என்பதைத் தமிழக அரசியலில் ஆழமாக விதைத்துவிட்டார். கேரளமும் பிறவும் தில்லி அரசிடம் அவர்கள் மாநிலப் பிரச்சனையில் கட்சி வேறுபாடின்றி ஒற்றுமையாய்ப் போராடி, பல நன்மைகளைக் காணப் பெற்றுள்ள போது கலைஞர் செய்த பிளவு வேலைகளால் தமிழகம் பாழாய்ப் போனது. தி.மு.க.வினரும் அ.தி.மு.க.வினரும் அடித்துக் கொள்வதே தில்லி நாடாளுமன்றத்தில் தான்! இரு கட்சிகளையும் மோதவிடுவதில் வடவர் வெற்றி பெற்றனர். அ.தி.மு.க.வைக் கடுமையாகச் சாடிவிட்டு வந்து பாராட்டு பெறவேண்டும் என்ற எண்ணத்தைத்தான் தன் கழகக்காரர்களிடம் வளர்த்துவிட்டார் கலைஞர். அதனால் ஒற்றுமை என்பதையே கானல் நீராக்கிவிட்டார் இவர். விளைவு, தமிழகம் தன் உரிமைகளை இழந்து நிற்கிறது!

ஏன் காவிரி பற்றிய அனைத்துக் கட்சி நிகராளிகள் (பிரதிநிதிகள்) தில்லி சென்று ஒற்றுமையாக நடுவணரசிடம் பேசுவதில்லையே! இம்மாதிரி உச்ச கட்ட வேலைகளை இவரல்லவா தலைமை தாங்கி நடத்த வேண்டும்! இவர் மூப்பனார், வாழப்பாடி போன்ற தமிழகத் தலைவர்களை ஒன்றாக அழைத்துச் சென்றல்லவா வாதிட்டிருக்க வேண்டும்! துரை முருகனை அனுப்பினார். இதர பெரிய தலைவர்களின் ஒத்துழைப்பை இழந்தார்.

இவர்தான் தம்மை உலகத் தமிழினத் தலைவர் என்று தம்பட்டம் அடித்துக் கொள்கிறார். ஆனால் தமிழக நன்மைகளைக் காப்பது குறித்து எண்ணினாரா? செயல்பட்டாரா? தமிழகத் தலைவர்களையும் கட்சிகளையும் இணைத்துத் தமிழகத்தின் வலிவை வடவர்க்கு காட்டினாரா?

தில்லி அரசு மிக வலிமை குன்றியிருந்த போது தமிழக அரசு மிக வலிவுடன் கலைஞர்



படிப்பகம்

www.padippakam.com

தலைமையில் இருந்த போது இவர் நடுவணரசைச் சரியான அழுத்தத்துடன் அணுகிக் காவிரிச் சிக்கலில் கருநாடக அரசைச் சரியாக நடந்து கொள்ளக் கட்டாயப்படுத்தியிருக்கலாம்.

அவருடைய மருமகன் - அவருக்குச் 'சிந்தனைக் களஞ்சியமாக' உள்ள மாறனின் மகனுடைய கன்னட மணமகள் பெயர் காவிரி. அவர்களது திருமண வரவேற்பில் எசு. ஆர். பொம்மையும் கலந்து கொண்டார்.

அந்த நிகழ்ச்சியில் பேசிய தி,மு.க. ஆட்கள், "கலைஞர் காவிரியைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்துவிட்டார்." என, ஒருவர் பின் ஒருவராகப் பேசினர். இறுதியில் பேசிய பொம்மை, "காவிரியைக் கேட்டீர்கள், கொடுத்துவிட்டோம். இனி பிரச்சனை முடிந்தது. இனி யாரும் காவிரி வேண்டும் எனப் பேசக்கூடாது." என்று போட்டாரே ஒரு போடு! அதற்குப் பதில் பேச அங்கே யாருக்கும் (கலைஞர் உட்பட) வாயில்லாமல் போய்விட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால் அந்த பெண்ணின் பெயர் 'கங்கா'. குடகுப் பெண். கலைஞர்தான். திருமணத்திற்கு முன் 'காவிரி' என்று பெயரை (ஏ)மாற்றினார்! தமிழர்களை ஏமாற்றினார்!!

காவிரி, தமிழகத்தின் உயிர்ப் பிரச்சனை, மானப் பிரச்சனை, உணர்வுப் பிரச்சனை. ஆனால் அது தன் அரசியல் ஆதாயத்திற்கு இடைஞ்சல் செய்யாமல் பார்த்துக் கொள்வதிலே கண்ணும் கருத்துமாக இருந்தாரே தவிர, அதைக் காக்க ஒரு நாளும் அவர் உணர்வோடும் உத்வேகத்தோடும் செயல்பட்டதில்லை. அதனால்தான் அவர், "நான் காவிரி நீரைக் குடித்து வளர்ந்தவன். அதை மறப்பேனா?" எனப் புலம்ப வேண்டி வந்தது. பேராயக்கட்சிக்கார வீரேந்திர பாட்டீலும், சனதாதள எசு.ஆர் பொம்மையும், எக்டேயும் தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் தரக் கருநாடகத்தை வற்புறுத்தக்கூடாது என தலைமையமைச்சரைப் பார்த்துக் கூட்டாகச் சென்று பேசுகிறார்கள். அன்று, எசு.ஆர்.பொம்மை தமிழ்நாடு உள்ளிட்ட ஒரு அகில இந்தி(ய) அரசியல் கட்சியின் தலைவர். அவர் கருநாடகாவின் நன்மைகளைத் தான் பார்க்கிறார். எக்டே திட்டக் குழுவின் தலைவர். அந்தப் பதவி நடுவணரசின் ஒரு கேபினட் அமைச்சர் பதவிக்குச் சமமானது. அவரும் 'இந்தி'யாவிலுள்ள எல்லா மாநிலங்களுக்கும் பொதுவானவர். அவர், தமிழகத்தின் நன்மையை நாடவில்லை. வீரேந்திர பாட்டீல் 'அகில இந்தியத் தேசிய நீரோட்டக் கட்சியான பேராயக் கட்சியின் அமைச்சர்' இவர்கள் தமிழ்நாடு இந்தி(யா)வில் இருப்பதாகக் கருதவில்லை!

ஆனால், "தமிழே உயிர் மூச்சி" எனக் கூறித் தமிழர்களை கவர்ந்திழுப்பவரான கலைஞரின் அரசியல் ஆதாயச் செயல்பாடுகள்தான் தமிழ்நாட்டுக்கு பெரிய மோசடியாகக் காவிரியில் அமைந்துவிட்டது.

கலைஞர், காவிரி வழக்கை உச்ச நீதி மன்றத்தில் இருந்து, இந்திரா பேச்சைக் கேட்டுத் திரும்பப் பெறாமல் இருந்திருந்தால், 1975 வாக்கில் நடுவர் மன்றம் அமைக்கப் பட்டிருந்திருக்கும். அவரால் 20 ஆண்டு கால தாமதம் ஏற்பட்டது. அந்த 20 ஆண்டுகளில் தமிழகத்தில் ஒற்றுமையின்மையை ஏற்படுத்திய சிற்பி, அவரேதான். அதே காலக் கட்டத்தில், கருநாடகத்தில் தமிழக எதிர்ப்பு நெருப்பு மூட்டிவிடப்பட்டு, வளர்த்துவிடப் பட்டது. எனவே, ஏற்கெனவே, நடுவர் மன்றம் வந்திருந்தால் மேற்சொன்னத் தாமதம் காரணமாகத் தமிழர்க்கு அங்குக் காவிரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையை அரசிதழில் போட்டதையொட்டி:

- கொடுமைகள் நடந்திருக்காது
- தமிழர்கள் தாக்கப்பட்டிருக்கமாட்டார்கள்.
- ஆயிரக்கணக்கான வீடுகள் கொளுத்தப் பட்டிருக்காது
- நூற்றுக்கணக்கான பேர் கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள்.
- 300 - 400 கோடி உருபா பெறுமான சொத்துக்கள் நாசமாகியிருக்காது.
- பல பல தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகியிருக்க மாட்டார்கள்.
- தமிழ்க் குழந்தைகள் தீயிலே வெந்திருக்க மாட்டார்கள்.
- தமிழர்கள் தங்கள் பெயரைக் கன்னடப் பெயர்களாக மாற்றிக் கொள்ளும் அவலம் இருந்திருக்காது.
- இலக்கக் கணக்கான தமிழர்கள் ஏதிலிகளாக இங்கு வந்திருக்க மாட்டார்கள். தங்கள் சொத்து சுகங்களை இழந்திருக்க மாட்டார்கள்.
- இப்படி எத்தனையோ! பாதிக்கப்பட்ட கருநாடகத் தமிழர்களுக்கு அவர் செய்த உதவிகள் ஏதேனும் உண்டா?

கலைஞர் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த போது, அதன் செயலாளராக இருந்த திரு. இராம்சந்தர், காவிரி தொடர்பான கோப்பில் "கருநாடாகா தனது மாநில எல்லைகளுக்கு உட்பட்ட இடங்களில் ஓடும் காவிரியிலும் அதன் கிளை நதிகளின் குறுக்கிலும் இப்படியே அணைகள் கட்ட அனுமதிக்கப்பட்டால், தமிழகம் விரைவில் பாலைநிலமாக மாறிவிடும்." எனப் பளிச்சென எழுதி வைத்தாரே! அன்றிலிருந்து



படிப்பகம்

www.padippakam.com

இன்றுவரை கலைஞர் அவர்கள் "செய்ததும் செய்யத் தவறியதும்" அல்லவா காவிரியைத் தமிழகம் இழக்குமாறு செய்துவிட்டன.

ஆம், காவிரியைக் காப்பது என்பது அல்ல இன்றைய தமிழகத்தின் பிரச்சனை! எப்படி அதை மீட்பது என்பதே கேள்வி! இடைக்கால ஆணையை இதுவரை நடைமுறைப்படுத்தி வைக்க இயலாத தமிழகமா இனி இறுதித் தீர்ப்பையும் நிறைவேற்றி வைக்கப் போகிறது? நமக்கு நம்பிக்கையில்லை!

## தன்னைக் கடந்து நாட்டு நலனைக் கண்டிருந்தால்...!

அன்றைய முதல்வர் செயலலிதா உண்ணாநோன்பு இருந்த போது அதை ஆதரித்து இவர்களெல்லாம் அந்த தனிப் போராட்டத்தைத் தமிழ்நாட்டின் பொதுப் போராட்டமாக மாற்றியிருந்தால் வரலாறே மாறி இருக்குமே! அதற்குப் பதிலாக அதைப் பல விதத்திலும் கிண்டல் செய்வதில் அல்லவா இவர்கள் ஈடுபட்டார்கள். உண்மையில் அன்றைய முதல்வரின் உண்ணாநோன்புதான் தமிழ்நாட்டிற்கே மறக்கடிக்கப்பட்ட பிரச்சனையை வெளிச்சம் போட்டுக் காட்டி, வெளிக் கொணர்ந்தது. ஆனால், அதற்குப் பிறகு என்ன நடந்து வருகிறது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. தமிழகப் பெரிய கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவரும் காவிரிச் சிக்கலை வெறும் கட்சி அரசியலாக ஆக்கும் அவலத்தை இன்றுவரை கண்டு வருகிறோம்.

காவிரிப் பிரச்சனையில் தமிழ்நாட்டின் தோல்வி தமிழ்நாட்டைச் சுற்றியுள்ள இதர மாநிலங்கள், தமிழ்நாட்டுக்குச் சவால் விடுகின்ற நிலைமையை ஏற்படுத்தி விட்டது. கேரளத்துக்காரர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டி, தமிழகத்திற்கு தண்ணீர் எதுவும் தரமாட்டோம் எனத் தீர்மானித்து விட்டனர். ஆந்திரம், தமிழகக் கடல் எல்லை தாண்டி, ஆந்திரப்பகுதி கடல் எல்லையில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கக் கூடாது எனத் தடுத்து வருகின்றனர். ஏன்? ஆந்திரா, தமிழக ஏரியான பழவேற்காடு ஏரியிலேயே மீன் பிடிக்கும் தமிழ் மீனவர்களைத் தடுத்து வருகின்றனர். இப்படிப் பல.

ஆனால், 'தமிழகத்திற்கு நீர் தரமாட்டோம்!' என கேரளத்தின் அனைத்துக் கட்சித் தீர்மானத்திற்குப் பிறகு காவிரிக்காக உண்ணா நோன்பு இருந்த அதே தமிழக முதல்வர் அவர்கள், அந்த கேரளக்காரர்களின் கையால், "பீமாச்சாரியார்" பட்டம் பெறுவதும்; மைசூர்க் காரர்கள் நடுவணரசின் ஆணையை எதிர்த்து நீர் திறந்து விடுவதை மறியல் செய்தும்; அங்குள்ள தமிழர்களுக்கு தேவ கவுடா கடும் பாதுகாப்புத் தரவேண்டிய கொடிய நிலையை ஏற்படுத்திய பின்பும், மைசூர் தலைப்பாகை அணிந்து, கலைஞர் படத்திற்குக் காட்சியளிப்ப தெல்லாம், தமிழகத்தின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியே ஆக்குகின்றன என்பதில் ஐயம் இல்லை. ஐயப்படக்கூடாது என்பவர்கள், கர்நாடகச் சட்டப்பேரவையில் அதன் ஆளுனர் இவ்வாண்டு காவிரி பற்றி, "இம்முறை காவிரிப் பிரச்சனையின் மீது நாம் (தமிழ்நாட்டின் மீது) வெற்றி கண்டுவிட்டோம்!" என ஆற்றிய உரையைப் படித்துப் பார்ப்பார்களாக!

காவிரிப் பிரச்சனையைப் பற்றிப் பேசாத தமிழக அரசியல் தலைவர்களே இல்லை. இவர்கள் பேசப் பேச, பிரச்சனை பெரிதாகிக் கொண்டே போகிறதே தவிர, கொஞ்சமும் குறைந்தபாடில்லை. தீர்ந்தபாடும் இல்லை. "நீங்கள் இரத்தக் கண்ணீர் வடித்தால்கூட, நாங்கள் சொட்டுத் தண்ணீர் விடப்போவதில்லை!" என்பதில் கர்நாடகாவின் முதலமைச்சர் நாற்காலியில் உட்காரும் ஒவ்வொருவரும் உறுதியாகவே இருக்கிறார்கள். இந்தப் பிரச்சனையைப் பொறுத்தமட்டில் ஆளும்கட்சியும், எதிர்க்கட்சிகளும் அங்கே ஒற்றுமையாகவே இருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டிலோ நிலைமை தலைகீழாக இருக்கிறது. தனக்கும் கர்நாடக முதல்வர் பட்டேலுக்கும் நடந்த பேச்சு விளத்தங்களை கலைஞர் பொத்திப் பொத்தி மூடி வைக்கிறார்.

> **காவிரிப் பிரச்சனையில் ஆளும்கட்சியும், எதிர்க்கட்சிகளும் அங்கே ஒற்றுமையாகவே இருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டிலோ நிலைமை தலைகீழாக இருக்கிறது.**

காவிரிப் பிரச்சனை பற்றிய விவரங்களை அறிந்தவனும், காவிரிக் காப்புக் குழுவின் அமைப்பாளருமான நான் இந்திரா காந்தி காலம் முதல் காவிரிப் பிரச்சனையில் முன்னெடுத்துப் போராடுபவன். எனது தலைமையில் கூடிய பல்வேறு வேளாண்மைக் கழகங்கள் (விவசாயச் சங்கங்கள்), "காவிரியில் நீர் பெற, கர்நாடகத்திடம் ஒப்புதல் பெறாமல், தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்குள் நுழையக் கூடாது" என்று28.5.96ல் தீர்மானம் நிறைவேற்றியது. இந்தத் தீர்மானம் இந்தியா முழுக்க எதிரொலிக்கவே சில தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களும், பல ஆங்கில ஏடுகளும் என்னைச் செவ்வி கண்டன. ஏவுகணை எனும் ஏடும் செவ்வி (பேட்டி) கண்டது. அதன் சாரம் இங்கே தரப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

"தமிழ்நாட்டின் முதன்மையான வேளாண் கழகங்கள் எல்லாம் காவிரி பற்றிய சரியான முடிவு எடுக்காமல் நடுவண் அமைச்சரவையில் சேரக்கூடாது எனத் தீர்மானம் போட்டன. ஆனால் முதல்வரான கலைஞர் கருணாநிதி 'வேதாளம் முருங்கைமரம் ஏறிய கதையாக, மீண்டும் உரையாடல் நடத்துவது என முடிவு செய்து அறிவித்துள்ளார். அப்படி அவர் அறிவித்ததைக் கர்நாடக முதல்வர் வரவேற்ற செய்திதான் முதலில் வெளியே தெரியவந்தது. அதற்கு எதிர்ப்பு வரவே "நான் உரையாட வேண்டும் என்று கூறவில்லை. மன்னார்குடி இரங்கநாதனும், வேளாண் கழகங்களும்தான் கூறுகின்றன" என குட்டிக்கர்ணம் போட்டார்.

மேலும் கலைஞர், மன்னார்குடி இரங்கநாதன் வழியாக வேளாண் கழகங்களைக் கூட்டி உரையாடல் நடத்த ஒப்புதல் தந்து தீர்மானம் போட ஏற்பாடு செய்தார். இரங்கநாதன் 16.06.96 அன்று திருச்சியில் அவ்விதம் ஒரு கூட்டத்தைக் கூட்டினார். அவர் சென்னையிலே பராசரனிடம் உரையாடல் நடத்த உரிய அடிப்படையைக் குறித்துத் தீர்மானம் எழுதிக் கொண்டு வந்தார்.

அதற்கு முன்னரே கலைஞரும் அவரும் கலந்து பேசி உள்ளனர். அந்த விவரத்தை இரங்கநாதன் விவரமாகத் தொலைபேசியில் கூறினார். என்னை அவர் ஏற்பாடு செய்த 16.06.96 வேளாண் கழகக் கூட்டத்திற்கு வருமாறு அழைத்தார். நானும் 'உரையாடல் பிலாக்கணம்' கூடாது என்ற கருத்துள்ள வேளாண் கழக அமைப்புக்களுக்குத் தகவல் கொடுத்து அழைத்துச் சென்றேன். அன்றையக் கூட்டத்தில் இரங்கநாதனின் விருப்பம்போல் தீர்மானம் போட முடியவில்லை. காரணம், நான் கொடுத்த மாற்றுத் தீர்மானம் வெற்றி பெறும் சூழ்நிலையில் இருந்தது. ஆனால் ஏட்டாளர்களும், சில பெரியவர்களும் காவிரி தொடர்பான பிரச்சனையில் நமக்குள் பிளவு கூடாது என்ற அடிப்படையில், இந்தத் தீர்மானத்தின் சில தலையாய அம்சங்களை இரங்கநாதனின் தீர்மானத்தில் இணைத்து அதில் உள்ள தவறான பகுதிகளை நீக்கி, குறிப்பாக காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை நிறைவேற்றத் தேவையான விதிகள் இந்த நாடாளுமன்றத்தில் விரைந்து நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தையும் சேர்த்து அன்று ஒரு சமரசத் தீர்மானத்தை நிறைவேற்றினோம்.

முதல்வர் அலுவலக அழைப்புப்படி 25.06.96 அன்று முதல்வர் அவர்களைக் கோட்டையில் இரங்கநாதன், இராசாராம், நான் மற்றும் நால்வர் கொண்ட வேளாண் கழகப் பகராளிகள் (பிரதிநிதிகள்) கண்டு பேசினோம்.

அதற்கு முன்னரே கர்நாடக அணைகளில் நீர் நிறைந்துள்ள செய்தி தெரிந்து, காவிரி காப்புக்குழுவின் செயற்குழு, உரையாடல் என்பது கூடாது என்றும், போதுமான நீர் கர்நாடக அணைகளில் இருப்பதால், நேரடியாக குறுவைக்கு நீர் திறந்துவிட முதல்வர் முயற்சிக்க வேண்டும் என்றும், நடுவர் மன்ற இடைக்கால தீர்ப்பு முதலியவைகளை நிறைவேற்ற விதிகள் தாமதமின்றி வகுக்கப்படும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றினோம். அவை இதழ்களிலும் வந்தன. வானொலியில் தெளிவாக 24.06.96 அன்று இரண்டு முறை கூறினார்கள்.

25.06.96 அன்று கோட்டையில் முதல்வரைச் சந்திக்கும் முன்னரே, இரங்கநாதன் அவர்களிடம், தற்போது கர்நாடக அணைகளில் நீர் நிறைந்திருப்பதால் நம் முதல்வர், கர்நாடக முதல்வர் அவர்களிடம் பேசி குறுவைக்கு உடனடியாக நீர் பெற ஏற்பாடு செய்யவேண்டும் என்றும், உரையாடல், சமரசம், என்பது மாதிரியான சொற்களைப் பயன்படுத்தக்கூடாது என்றும் கூறி முதல்வரிடம் அழைத்துச் சென்றோம். நான் பேச வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி இரங்கநாதன், நீர் திறந்துவிட கர்நாடக முதல்வரிடம் நம் முதல்வர் பேசவேண்டும், போதுமான நீர் அங்கு உள்ளது எனக் கூறிவிட்டு மற்றவைகளை வழக்கறிஞர் பேசுவார் என்று முடித்துக் கொண்டார். நான் முதல்வரோடு பேசியதை உரையாடல் வடிவிலேயே உங்களுக்குச் சொல்கிறேன்.

நான்: ஐயா, காவிரி நடுவர் மன்றத் தீர்ப்புக்களை நிறைவேற்ற நதிநீர்ப் பிரச்சனைச் சட்டம் விதி 6(ஏ)ன் படி தற்போதுள்ள சூழ்நிலையில் அதைச் செய்துவிடலாமே!

முதல்வர்: நாம் காவிரிக்காகவா ஒன்று சேர்ந்தோம்? பாரதீயச் சனதாக் கட்சி ஆட்சி அமைக்கக் கூடாது என்பதற்காக அல்லவா ஒன்று சேர்ந்தோம்.

நான்: இப்போது நம் அரசு அல்லவா இருக்கிறது மத்தியில்!

முதல்வர்: நமக்கேது மெஜாரிட்டி? கர்நாடகக்காரர்கள் தங்களது உரிமையை விட்டுக்கொடுப்பார்களா?

(குறிப்பு: நடுவர் மன்ற ஆணைகளை நிறைவேற்ற விதிகள் வகுக்கப்படவில்லை என்ற கருத்தை வழக்கறிஞர்கள் கூறுவதை வைத்து முந்தைய முதல்வர் கருத்து வெளியிட்டவுடன், கலைஞர்,



படிப்பகம்

www.padippakam.com

"கன்னடக்காரி கர்நாடகத்திற்கு ஆதரவாக தமிழகத்திற்கு இரண்டகம் செய்வதைப் பாரீர்! உடன்பிறப்புக்களே, இதை ஊரெங்கும் தட்டியில் எழுதி வையுங்கள் என்றார்.)

நான்: ஐயா, நீதியரசர் சர்க்காரியா, மத்திய மாநில உறவுகள் பற்றிய தன் அறிக்கையில், நதிநீர் பிரச்சனை நடுவர் மன்ற ஒதுக்கீடுகளை நிறைவேற்ற இயலாத நிலை உள்ளது. (அதாவது விதிகள் வகுக்கப்படவில்லை) எனவே, அவைகளை உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளாகப் பாவிக்க வேண்டும் என்ற சட்டத் திருத்தத்தை, நாடாளுமன்றம் வழியாகச் செய்ய வேண்டும் எனக் கூறியுள்ளார்.

முதல்வர்: (மீண்டும் முதலில் கூறியதைத் திரும்பக் கூறிவிட்டு) வக்கீல் வாதம் செய்து பயனில்லை. மேலும் நம்முடைய வழக்கு பலவீனமானது. அதாவது பழைய மைசூர் சமஸ்தானத்திற்கும், சென்னை இராஜதானிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தமே செல்லாது எனக் கர்நாடகக்காரர்கள் கூறுகிறார்கள். (இது எனக்கு அதிர்ச்சியைத் தந்தது. ஏனெனில் இது முடிந்து போன பிரச்சனை. மைசூரின் மரபுரிமை கர்நாடகத்திற்கும் சென்னை இராஜதானியின் மரபுரிமை தமிழ்நாட்டுக்கும் என்பது ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட ஒன்று! எனவே கலைஞர் இப்படிக் கூறுவது தமிழ்நாட்டில் யாரும் நினைத்துப்பார்க்க முடியாத ஒரு இரண்டகமாகும்! முந்தையக் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் கூட 1924 ஒப்பந்தம் இருப்பதை ஒப்புக்கொண்டு 1974 ல் அது காலம் கடந்துவிட்டது என்றாவது உளறினார். கலைஞரோ அதுவும் செல்லாத மாதிரிச் சொல்வதைக்கேட்டு யார்தான் அதிர்ச்சி அடையாமல் இருக்க முடியும்? உண்மையில் 1924 ஒப்பந்தமும் காலம் கடக்கவில்லை. 1892 ஒப்பந்தமும் காலம் கடக்கவில்லை.

நான்: ஐயா, திரு.குகன் காவிரி பற்றி எழுதிய நூலில்கூட, அரசியல் சட்டப்பிரிவு 356 ன் கீழ் நடுவர்மன்றத் தீர்ப்பை உதாசீனப்படுத்தும் மாநில அரசைத் தூக்கி எறிந்துவிட்டு நடுவண் அரசே அந்த ஆணையை நிறைவேற்றலாம் எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் நாம் 356 வது பிரிவை பொதுவாகப் பயன்படுத்துவதையே விரும்புவதில்லை. எனவேதான், நான் முந்தைய பரிந்துரைகள் இரண்டையும் கூறினேன்.

முதல்வர்: (முன்பு கூறிய பதிலையே திரும்பக் கூறிவிட்டு மேலும் பேசியதாவது) தமிழர்களுக்கு அப்பர் ரைபேரியன், லோயர் ரைபேரியன் என்றால் என்ன தெரியப்போகிறது? எனவே நாம்தான் இராசதந்திரத்தோடு செயல்பட வேண்டும்.

(குறிப்பு: நம்மக்களுக்கு ரைபேரியன் ரைட் (சட்டப்படியான பாசன உரிமைகள்) பற்றித் தெரியாவிட்டாலும் அது குறித்து மக்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியது யாருடைய பொறுப்பு? இவருடைய கடமை அல்லவா? மேலும் ம.கோ.இரா., செயலலிதா ஆகியோரின் ஆட்சியைக் கவிழ்க்க 356 வது சட்டப் பிரிவை நடுவணரசு பயன்படுத்த வேண்டும் என கலைஞர் வற்புறுத்தினார் என்பது நாடறிந்ததே! ஆனால் காவிரிப் பிரச்சனையில் அவர் மூச்சு விடுவதில்லை. கர்நாடகம் கட்டிவந்த சட்டத்திற்கு முரணான அணைகளைக் குறித்தே இவர் வாய் திறக்கவில்லையே! அவரது 25 ஆண்டுகால நடவடிக்கைகளையும் ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு 'ஆலமத்தி' அணை குறித்து எடுக்கும் நடவடிக்கை கள் பற்றியும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மெய்யான மண்ணின் மைந்தன் யார் என்பது புரியும்!)

பிறகு கர்நாடக அணையில் உள்ள தண்ணீர் அளவு குறித்து உரிய அதிகாரிகளிடம் கேட்டார். அவர்கள் "மெக்காராவில் கடந்த 100 ஆண்டுகள் பெய்யாத மழை பெய்துள்ளது. மூன்று அணைகள் நிரம்பி வருகின்றன. தொடர்ந்து மழை பெய்கிறது" என்று கூறினர். உடனே அவர் தில்லிக்குத் தொடர்பு கொண்டு அதிகாரிகள் கூறிய விவரத்தை தன் மருமகன் முரசொலி மாறனிடம் சொல்லி தலைமையமைச்சரிடம் கூறி குறுவைக்கு நீரைத் திறந்துவிட வேண்டும் எனத் தொலைபேசியில் சொன்னார்.

ஆனால் அவருடைய அந்த வேண்டுகோளுக்கு, என்ன மதிப்பு கிடைத்தது? 13-14 நாள்கள் கழித்து, கர்நாடக முதல்வர் "இங்கே தண்ணீர் கிடையாது! ஒரு சொட்டுத் தண்ணீர்கூட கொடுக்க முடியாது!" என்று அறிவித்தார். பிறகு 24 மணி நேரத்தில் ஆடி 18க்கு நீர் வராவிட்டால், காவிரி நெடுகிலும் இலட்சக்கணக்கான மக்கள் நீராட முடியாவிட்டால், தமிழர்கள் நடுவில் காவிரி குறித்தான சிக்கல் தெரியவந்துவிடும் என்று அஞ்சி, எப்படியோ கெஞ்சி வெறும் 5 நூ.கோ.க. அடி நீர் இரண்டுங்கெட்டானாகத் திறந்து விடப்பட்டது. பிறகு நடந்த, நடந்துவரும் நிகழ்ச்சிகளை. குறிப்பாக ஆந்திராவில் நடக்கும் நிகழ்ச்சிகளை ஒப்பிட்டுத் தமிழ் மக்கள் தமிழினத் தலைவரின் தொடரும் இரண்டகத்தை நன்கு புரிந்து கொள்ளலாம்.



படிப்பகம்

www.padippakam.com

குறிப்பாக மறைவான உரையாடல் என்றதும் தமிழ்நாட்டின் எல்லா அரசியல் கட்சிகளையும் அதில் கலந்து கொள்ள அழைக்க மறுப்பதும், தமிழ்நாட்டின் காவிரி உரிமையைக் காக்க வேண்டும் என்று ஆர்வமுள்ள அனைவருக்கும் அது ஒரு கவலை தரும் செய்தியாகும். ஆனால் கலைஞர் மீண்டும் மறைத்துக் கொண்டு உரையாடல் நடத்தினார். "நடுவர் மன்ற வரம்புக்குள்தான் பேச்சு!" என்றார் இவர். கர்நாடக முதல்வரோ, "அப்படி எதுவும் நாங்கள் பேசவில்லை!" என்கிறார். இரு மாநில உழவர்களுக்கும் பாதகமில்லாமல் பேசியதாக கருணாநிதி கூறியது தமிழகத்திற்கு கேடு விளைவிப்பதேயாகும்.

### கன்னடர்களின் ஒற்றுமை

மொழி வழி மாநிலமாக கர்நாடகம் அமைக்கப்பட்ட நவம்பர் முதல் நாளை அந்த மாநிலத்தவர் "ராஜ்ய உற்சவமாகக்" கொண்டாடி வருகின்றனர். அந்த மாநிலத்தின் வேளாண்மைக்கும் மற்ற தொழில் வளர்ச்சிக்கும் இடையூறாக கட்சிகளோ சாதிகளோ குறுக்கிடுவதில்லை. அரசியலில் வெவ்வேறு அணிகள் இருந்தாலும், மாநிலத்தின் மேம்பாடு என்று வரும்போது, ஒற்றுமை உணர்வுடன் ஓரணியாகவேச் செயல்படுகின்றனர். அங்குள்ள அரசியலாளிகள் முன்னெச்சரிக்கை ஓர்மையுடன், "காவிரி"யைத் தங்களை ஒன்றுபடுத்தும் சக்தியாக ஆக்கிக் கொண்டனர்.

"காவிரி நமக்கேச் சொந்தம்! தமிழர்கள் அதைப் பிடுங்கி உரிமை கொண்டாடி வந்தார்கள். இனி ஒரு சொட்டு நீர்கூட அவர்களுக்குத் தரவேண்டியது இல்லை" என்கிற எண்ணத்தை அங்குள்ள எல்லாக் கட்சி அரசியலாளிகளுமே திட்டமிட்டு மக்களிடம் ஏற்படுத்திவிட்டனர். காவிரி ஓடிவரும் ஆசன், மாண்டியா மற்றும் மைசூர் ஆகிய தென்மாவட்டக் கன்னட மக்கள் மட்டுமல்ல. வடக்கே 600-700 கல் தொலைவில் உள்ள பீடார், பீரார், குல்பர்க்கா போன்ற இடங்களிலுள்ள கன்னட மக்களும் காவிரி தங்களுக்கே என நம்ப வைக்கப்பட்டுள்ளனர். வெறியூட்டப்பட்டுவிட்டனர்.

கர்நாடகத் திரைப்படங்களில், "காவிரி நீர் குடித்து வளர்ந்தவன்; காவிரி கன்னடர்களுக்கே!" என்பது போன்ற வசனங்களும் காட்சி அமைப்புகளும் வைக்கப்படுகின்றன. இப்படி அந்த மாநில மக்களை கர்நாடக அரசியலாளிகள், கலைபுலகினர், ஏட்டாளர்கள், இலக்கியவாதிகள் காவிரிப் பிரச்சனையைப் பொறுத்த மட்டில் அணியாமாக்கி வைத்திருக்கின்றனர்.

***காவிரியைப் பொறுத்தமட்டில் கன்னடர்கள் எந்த அணியில் இருந்தாலும் அதை மறந்து ஒன்றுபட்டு நிற்கிறார்கள்.***

காவிரிப் பிரச்சனையில் தமிழர்களுக்கு எதிராகப் பேச வேண்டிய, நடக்க வேண்டியச் சூழ்நிலை மாற்ற முடியாத வகையில் அங்கே ஏற்படுத்தப்பட்டு விட்டது. எந்த நேரத்திலும் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்கிற நிலை அங்கே உருவாகிவிட்டது. 1991 திசம்பரில் காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப் பட்டபோது, பூகம்பமே வெடித்தது. சாதி மத வேறுபாடுகள் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் எனப் பலவற்றையும் மறந்து எல்லாக் கன்னடர்களுமே தமிழர்களைத் தாக்குவதில் ஒன்றுபட்டு நின்றனர். கொலை, கற்பழிப்பு, காயப்படுத்துதல், தீவைப்பு, கொள்ளை என பலவிதமான கொடுமைகள் அப்போது நிகழ்ந்தபோது, ஒரு சிறு வழக்குகூட அன்றைய கர்நாடக அரசால் தொடுக்கப்படவில்லை. நடந்த நிகழ்வுகளுக்கு ஒப்புக்குக்கூட வருத்தம் தெரிவிக்காதவர்தான் முன்னாள் 'இந்தி'யத் தலைமையமைச்சர் தேவே கவுடா!

### தேவே கவுடாவின் தமிழரெதிர்ப்பு அரசியல்

அரசியலில் புகுந்த நாளிலிருந்து இன்றுவரை, தமிழரெதிர்ப்புப் போக்குடன் செயல்படுபவர், தேவே கவுடா! அவர் கர்நாடக முதல்வராக இருந்தபோது காவிரிச் சிக்கலில் தமிழக எதிர்ப்பை வெளிப்படையாகக் காட்டியவர்! தன்னுடையத் தலைமையமைச்சர் பதவியின் ஒவ்வொரு நாளையும் பயன்படுத்தி, கர்நாடகாவிற்கு ஒவ்வொரு நாளும் ஒரு நன்மையைச் செய்து வந்தார். எ.கா.வாக கோஜென்டரிக் மின் திட்டத்தைச் செயல்படுத்தினார். தென்னகத் தொடர்வண்டி வழிச்சாலையை இரண்டாக்கி அதைத் தென்மேற்குப் பிரிவு என்று உருவாக்கி பெங்களூரில் ஒரு தலைமையகத்தை உருவாக்கினார். ஆலமத்தி அணையின் உயரத்தை அதிகப்படுத்த மறைமுகமாக 200 கோடி உருவாவை அளித்தார். உலக வங்கியிடம் 72 கோடி உருவா பெற பரிந்துரைத்தார். இப்படி கவுடாவின் மாநில நன்மைக்கானப் பணிகளை பெரிய பட்டியலிடலாம். காவிரிப் பிரச்சனையைப் பொறுத்தவரை தமிழரெதிர்ப்புப் போக்கினை இன்றளவும் அவர் கைவிடவில்லை என்பதனை உறுதியாகக் கூறலாம்.



படிப்பகம்

www.padippakam.com

காவிரிப் பிரச்சனைப் பற்றிப் பேசிப் பேசி 27 முறை தோற்றான பிறகும் மாற்று வழிகளைப் பற்றி சிந்திக்காமல், மற்றக் கட்சிக்காரர்களின் எண்ணங்களைக் கேட்காமல் நடுவர் மன்ற வரம்புக்குட்பட்ட உரையாடல் என கலைஞர் திரும்பத் திரும்பக் கூறுகிறார். உண்மையில் கலைஞர் "உரையாடலுக்கு" கட்டாயபடுத்தப் பட்டிருக்கிறார். நடுவர் மன்றத் தலைவர் திரு. முகர்சியை பதவிவிலக கட்டாயப்படுத்திய தலைமையமைச்சரும் ஏதோ ஒரு கரணியத்தினால் தேவே கவுடா சொற்படி நடந்த கலைஞரும் முகர்சியின் பதவி விலகல் பற்றி மூடி மறைத்து விட்டார்கள். தேவே கவுடாவின் சொல்லுக்கெல்லாம் ஆடுவதற்கு கலைஞருக்கு என்ன கட்டாயம் ஏற்பட்டது?

மாநில உரிமை பாதிக்கப்படுகிறது என்கிற நிலைமை ஏற்பட்ட உடனேயே ஆந்திராவின் சந்திரபாபு நாயுடு எப்படிச் செயல்பட்டார்? ஆலமத்தி அணையின் உயரம் அதிகரிக்கப் பட்டதை எதிர்த்து, ஆந்திரத்திலுள்ள மற்ற அரசியல் கட்சிகளை ஓரணியில் திரட்டி ஆலமத்தி பிரச்சனைக்காக நடுவணரசை எச்சரித்தார். அப்போது தில்லிக்குச் சென்ற அவர் தலைமை அமைச்சரைக்கூட சந்திக்காமல் திரும்பினார். தன்னுடையச் செயல்பாடுகளின் வழியாக த(ா)ன் மானமுள்ளவன், மண்ணின் மைந்தன் என்பதை சந்திரபாபு நாயுடு அன்று ஆணித்தரமாக உறுதிப்படுத்தினார்! ஆனால் கலைஞர்?

நடுவர் மன்றம் நடக்கவே கூடாது என்ற கர்நாடக நிலைக்கு கலைஞர் ஏதோ ஒரு வகையில் நீண்ட நாட்களாக உதவிக்கரமாக இருந்து வந்திருக்கிறார். உரையாடல் என்ற பெயரில் ஏதாவது ஒரு இடத்தில் கையெழுத்து போடுங்கள் என்றால் கலைஞர் போட்டுவிடுவார். அதன் பிறகு யாராவது ஒரு (அலெக் போன்ற) ஆளை நடுவராக்கி அதன் வழியாக அதை சட்டமுடிவாக்கிவிடலாம் என்று பட்டேல் சில மாதங்களுக்கு முன்பு பேசியது, அவர்களின் சூழ்ச்சியை அம்பலப்படுத்துகிறது. ஆனால் தேவே கவுடாவோ அதைவிட ஒரு படி மேலே சென்றுவிட்டார். செய்தியாளர்கள் அவரிடம் காவிரி குறித்து கேட்டபோது, "அவர்கள் (தமிழக கர்நாடக முதல்வர்கள்) பேசி முடித்து விடுவார்கள். நாங்கள் அதை உறுதிப் படுத்துவோம்" என்றார். அப்படியானால் அந்த பேச்சின் முடிவை உச்ச நயன்மை மன்றம் வழியாகவோ நடுவர் மன்றம் வழியாகவோ தீர்ப்பாக்குவீர்களா? எனச் செய்தியாளர்கள் வினவினார்கள் அவர்களைச் சற்றுக் கோபமாகப் பார்த்துவிட்டு அவர் போய்விடுகிறார்.

இந்த உரையாடலின் தொடக்கத்திலேயே ஒரு பெயர்பெற்ற ஆங்கில நாளிதழ், "இது தமிழ்நாட்டின் உள்ளாட்சித் தேர்தலையும், தேவே கவுடாவின் நாடாளுமன்றத் தேர்தலையும் மனதில் வைத்து நடத்தப்படுவது" என்று எழுதியது. ஆனால் ஆடிப் பெருக்கிற்கு 5 கோடி கன அடி நீர் விட்டதற்கு எழுந்த எதிர்ப்பும், எக்டேயை சனதா தளத்திலிருந்து வெளியேற்றியதை அடுத்து வந்த சிக்கல்களாலும், கவுடா ஆசன் அல்லது மாண்டியா தொகுதிகளில் போட்டியிட முடியாத நிலைக்குத் தள்ளிவிட்டது. எனவே அவர் தில்லி மேலவைக்குத் தாவினார். இந்த உரையாடல் காலம் முழுவதும் இரண்டு முதல்வர்களும் கர்நாடக வேளாண்துறை அமைச்சர் நாககவுடாவும் ஒருவருக்கொருவர் முரண்பட்டு அறிக்கையைக் கொடுத்துவந்தார்கள். இருந்தாலும் கர்நாடகத் தரப்பில் சில செய்திகளைத் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார்கள்.

1. இந்த உரையாடல் நடுவர் மன்றத்திற்கோ அதன் இடைக்காலத் தீர்ப்புக்கோ உட்பட்டதல்ல.

2. ஆயிரம் ஆண்டுகளானாலும் தமிழர்நாடு நடுவர் மன்றம் வழியாக முடிவைப் பெற முடியாது.

3. இது நூறாண்டுகளாக தீர்க்கப்படாமல் இருந்துவரும் பிரச்சனை

4. தற்போதுதான் புதிதாகப் பேசுகிறோம்." போன்றவைகள் முகாமையானவை.

## கலைஞரின் அடிபணியும் இயல்பு!

குறிப்பாக, சட்டத்திற்கெதிராக கட்டப்பட்ட அணைகளுக்கு ஒப்புதல் பெறுதல் மற்றும் மேகதாது அணை கட்ட வாய்ப்பு உண்டாக்கிக் கொள்ளுதல் போன்றவை முகாமையானவைகள். இவைகளின்படி, அவர்கள் 1892, 1924 ஒப்பந்தங்களை இல்லாததாக்குகிறார்கள். 27 முறை பேசியதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. இதுவரை பல கோடி செலவில் நடந்துவரும் (பெரும்பாலும் முடிந்துவிட்ட) நடுவர் மன்ற உசாவலையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களின் இத்தகைய கெட்ட நோக்கங்களையும், செயல்பாடுகளையும் கண் திறந்து பார்த்துக் கொண்டே, அவர்கள் இழுத்த இழுப்புக்கு கலைஞர் ஏன் போனார்? அதற்குக் கரணியமே தனது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்கத்தோடு தில்லிக்கு அடிபணியும் அவரது இயல்பேயாகும்.



படிப்பகம்

www.padippakam.com

ஆரம்பத்திலிருந்தே கர்நாடக முதல்வரும், 'இந்தி'யத் தலைமையமைச்சரும், நாகே கவுடாவும், கருணாநிதியைப் புகலோ புகழ் என்று, புகழ்ந்து தள்ளுகிறார்கள். அவர் எதில் மசிவார் என்று அவர்களுக்குப் புரிந்திருக்கிறது. ஏற்கெனவே அவர்கள் சாம பேத, தான, தண்டம் அனைத்தையும் பயன்படுத்திவிட்டார்கள். அதன்பின்பு புகழ்ச்சியில் இறங்கி காரியத்தைச் சாதிக்க அதாவது கருணாநிதியிடம் கையெழுத்து பெற்றுக்கொள்ள முயற்சிக்கிறார்கள். அப்படி அவர் கையெழுத்து போட்டுவிட்டால்

- தமிழகத்தின் எதிர்காலமே இருட்டாகும்
- ஏறத்தாழ 20 இலக்கம் குறுக்கம் நிலங்கள் வானம் பார்த்த பூமியாக மாறும்
- நிலத்தடி நீர் மேலும் கீழே போகும்
- காவிரியின் இரு கரைகளிலும் மாசு படிந்த நிலையில் குடிநீருக்கே பேரிடர் வரும்.
- தமிழகத்தின் பொருளடிப்படை பெரும் நெருக்கடிக்குள்ளாகும்.
- இலக்கக்கணக்கான காவிரித் தீர ஏழை, நடுத்தர, கூலி உழவர்கள் சொல்லொண்ணாத வாழ்க்கைத் துன்பத்திற்கு ஆளாவதுமான இக்கட்டுகள் நிகழும் வாய்ப்பு பெரிதும் உள்ளன.

இந்த உரையாடல்களெல்லாம் வெங்காயத்தை தொடர்ந்து உரித்துக் கொண்டிருப்பது போலாகும். வேறு ஒரு வெங்காயமும் ஆகப் போவதில்லை. இந்தக் கருத்தை, கலைஞர் கருணாநிதியை ஆதரிக்கும் சோவும், தினமணியும், இன்னும் பல இதழ்களும், தலைவர்களும் வெளிப்படுத்தியுள்ளனர்.

உள்ளாட்சித் தேர்தல்கள் முடிந்துவிட்ட போதுதான் நடுவர் மன்றத்திற்கு தலைவர் இல்லை என்கிற "ஞானம்" உதித்தது போலும்! எனவே, "நடுவர் மன்றமே இல்லாதபோது பேசிப்பயன் என்ன?" என்று மெல்ல 'முணங்க' ஆரம்பித்தார். இவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபின்னர் நான்கு முறை கர்நாடக முதல்வருடன் உரையாடிவிட்டு "வெற்றி, வெற்றி" என்று டமாரம் அடித்த பின்னர் ஐந்தாவது உரையாடலுக்கு நாளும் குறித்துவிட்ட நிலையில், திடீரென்று இந்த ஞான எழுச்சி வந்ததற்கு என்ன கரணியமோ தெரியவில்லை!

முன்னாள் முதல்வர் செயலலிதா எப்படிப்பட்டவராக இருந்தாலும் "காவிரிச் சிக்கலில் உரையாடலுக்கு இடமேயில்லை!" என்று உறுதியாக இருந்தார். உண்ணாநோன்பு இருந்ததன் வாயிலாக 25 ஆண்டு காலமாக தமிழர்கள் நடுவில் கருணாநிதி மறைத்து வந்த காவிரிப் பிரச்சனை முதன்முதலாக தமிழகம் முழுவதும் தெரிய வந்தது. பிறகு வழக்கம்போல நடுவணரசு தமிழகத்தை ஏமாற்றிவிட்டது.

அன்றைய தலைமையமைச்சர் தேவே கவுடாவும் கர்நாடக முதல்வர் பட்டேலும் ஒரு சார்பாக தன்னலத்தோடு செயலாற்றுகிறார்கள் என்பது புரிந்தும் வெறும் பார்வையாளராக கலைஞர் ஆகிவிட்டதை நாம் கவனிக்க வேண்டும். கர்நாடக முதல்வர் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டிய பின்னர்தான் உரையாடலில் இறங்கினார். ஆனால், கலைஞரோ இதுநாள் வரை அம்மாதிரியான கூட்டத்தைக் கூட்டியதில்லை. உழவர் கழகங்களும், காவிரியைக் காப்பதில் அக்கறை கொண்ட தலைவர்களும் உரையாடல் குறித்து முதல்வரிடம் வைத்த எல்லா வேண்டுகோள்களையும் புறக்கணித்து வந்துள்ளார்.

காவிரி பிரச்சனை தீராமல் நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தின் உள்ளே செல்லக் கூடாது. நாம் அமைச்சரவையில் சேரக்கூடாது. உரையாடல் குறித்து வெள்ளை அறிக்கை வேண்டும் என்பது போன்ற கருத்துக்களை மருத்துவர் இராமதாசு போன்றவர்கள் கேட்டுக்கொண்டதையும், அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று வாழப்பாடியார் போன்றவர்களின் பரிந்துரைகளையும் கலைஞர் திட்டமிட்டே புறந்தள்ளினார்.

உச்ச நீதிமன்றம் இரு மாநில முதல்வர்களையும் பேசச் சொன்னதாகக் கூறுவது ஒரு ஏற்பாடே ஆகும். உரையாடலுக்கும் தமிழர்நாட்டில் போதுமான ஆதரவு இல்லாததால், உச்ச நயன்மை மன்றம் வழியாக அப்படியொரு ஏற்பாட்டைச் செய்து கொண்டார்கள். இது வழக்கறிஞர்களுக்குப் புரியும். உண்மையில் நதிநீர் தாவாச் சட்டம் 1956 இல் நிறைவேற்றப் பட்டபோது, இனி மாநிலங்கள் உச்ச நயன்மை மன்றத்தை நதிநீர் தாவாவுக்காக நெருங்க முடியாது என்பது அனைத்துத் தரப்பினரும் ஒப்புக் கொண்ட ஒன்றாகும்.

இப்போது கலைஞர் உரையாடலுக்கு மூட்டை கட்டிவிட்டார். இனி அவர் உச்ச நயன்மை மன்றத்தில், "உரையாடலால் பிரச்சனையைத் தீர்க்க முடியவில்லை! எனவே விரைந்து வழக்கை நடத்தி தீர்ப்பு சொல்லுங்கள்!" என்று கூறி கர்நாடகத்துக்காரன் போடும் முட்டுக்கட்டை களையும் உடைக்க வேண்டும். தேவேகவுடா சொல்வது போன்ற காகித உடன்பாடு எல்லாம் காற்றில் பறந்துவிடும்.



படிப்பகம்

www.padippakam.com

**கலைஞரும், துரைமுருகனும் ஆண்பிள்ளைகள் போல பதவியைத் துச்சமெனக் கருதி தமிழர்நாட்டு உரிமைக்காகப் போராட முன்வரவில்லை.**

தமிழ்நாட்டு முதல்வரால் குறுவைக்குத்தான் நீர் பெற முடியவில்லை என்பதல்ல. சம்பாவையும் கடைந் தேற்றுவது மிகவும் கடினம். கடந்த 15, 16 ஆண்டுகளில் கர்நாடகத்தின் சட்டத்திற்கு உட்பட்ட மற்றும் உட்படாத அணைகளின் மதகுகள் எதையும் அவர்கள் தமிழர் நாட்டிற்காகத் திறந்ததில்லை. உண்மையில் 1992 இல் கண்ணம்பாடி அணை மதகை, மிகுந்த நீர் உள்ளே வந்து கொண்டிருந்தும் தமிழர் நாட்டிற்குத் தண்ணீர் போகக் கூடாது என்ற வெறியில், திறக்காமலே பூட்டுவிட்டதால், பெருகி வந்த நீர், அருகே உள்ள உலகப் பார்வையாளர் எல்லாம் வந்து கண்ணுறும் பிருந்தாவனத்திற்குள் புகுந்து, அதை அழித்துவிட்டது. அதற்கு 4-5 கோடி செலவு செய்து, பல மாதங்களாக பார்வையாளர்களுக்கு மூடிவிட்டு, பழுது பார்த்து மரம் செடி கொடிகளை வைத்துக் கொண்டுள்ளார்கள். கடந்த 3-4 ஆண்டுகள் தமிழகம் வந்து சேர்ந்த ஓரளவு நீர், பெருமழை காரணமாக வழிந்து வந்த நீரேயாகும். தற்போதைய சம்பா மற்றும் தாளடி பரப்பளவில்கூட வழக்கமாக உள்ள பகுதியில் ஏறத்தாழ மூன்றில் ஐந்து பங்கு மட்டுமே பயிரிடப்பட்டுள்ளது. அதற்கும் கர்நாடகம் 25 முதல் 30 கோடி கனஅடி நீரைத் திறந்து விட்டாலேயே அதை இறுதிவரைக் காப்பாற்ற முடியும் என்று பொதுப்பணித்துறை அமைச்சர் கூறினார். அதாவது அந்த மாநிலங்களில் பெருமளவில் மழை பொழிந்து அங்குள்ள அணைகள் எல்லாமே நிரம்பி வழிந்தால் தான் இங்கு இவர்கள் எதிர்ப்பார்க்கும் அந்த நீர் கிடைக்கும். ஆனால் அப்படி இல்லாமல் சம்பாவும் தாளடியும் பூட்டும் புடையுமாக இருக்கும்போது கலைஞரும், துரைமுருகனும் ஆண்பிள்ளைகள் போல பதவியைத் துச்சமெனக் கருதி தமிழர்நாட்டு உரிமைக்காக போராட முன்வரவில்லை.

உண்மையில் கலைஞருக்கோ, கருப்பையா (மூப்பனார்)அவர்களுக்கோ தமிழர்நாட்டு நலனில் அக்கறை இருக்குமானால், காவிரிச் சிக்கல் ஒரு புறம் இருக்கட்டும்; 1991 திசம்பரில் பாதிக்கப்பட்டத் தமிழர்களுக்கு முழு இழப்பீடு தேடி உச்ச நயன்மை மன்றத்தில் உள்ள வழக்கை தலைமையமைச்சர் நடத்த விடுமாறு செய்திருக்க வேண்டும். கர்நாடக அரசு, தமிழர் நாட்டின் மீது காவிரிப் பிரச்சனையில் பழி போட்டு, பல மொழிகளில் அச்சிட்டு 'இந்தி'யா முழுவதும் ஒரு தவறான கருத்தைப் பரப்பி வைத்துள்ளது. ஆனால் நமது அதிகாரிகள் அதற்குத் தகுந்த முறையில் பதிலெழுதி வைத்தும் அதை நமது முதல்வர்கள் இதுநாள்வரை அச்சிடவில்லை! அல்லது குறைந்த பட்சம் வெங்காலூர் தமிழ்க் கழகத்திற்கெதிரில் சாக்குத் துணியால் சுற்றி இறுக்கக் கட்டப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலையின் கழுத்தில் சுருக்கு மாட்டுவது போல ஒரு கயிற்றைக் கட்டி அதை இழுத்துப் பிடித்துக் கொண்டிருக்க ஒரு காவலரை கர்நாடக அரசு நியமித்துள்ளதே! அதையாவது திறக்க இவர்கள் முயற்சி செய்யட்டும். அப்படியெல்லாம் செய்வார்கள் என்று எதிர்பார்த்து, எதிர்பார்த்து நாம்தான் ஏமாற்றப்பட்டு நிற்கிறோம்.

**காவிரிக்கு எமன் கவுடாவை கலைஞர் ஆதரித்தார்.**

காவிரிப் பிரச்சனையில் உரையாடலுக்கே இடமில்லை என்ற கொள்கையை முந்தைய செயலலிதா அரசு கடைபிடித்தது. ஆனால் கலைஞர் வந்தவுடன் காவிரிக்கு எமன்களில் ஒருவராக வந்த தேவேகவுடாவை இந்தி(யா)வின் தலைமையமைச்சராகத் தேர்ந்தெடுத்து தமிழர் நாட்டின் தலையில் கொள்ளியை வைத்து விட்டார் இவர். இதற்கு கருப்பையா(மூப்பனார்)வும் உடந்தை. முதற் கொள்ளி முகர்சியை மன்றத்தின் தலைமைப் பதவியிலிருந்து நீக்கியது. அடுத்த கொள்ளி உச்ச நயன்மை மன்ற வழக்கில் குளறுபடி செய்தது. இந்த இரண்டு பெருந் தவறுகளை கலைஞர் என்றுமே திருத்த முயன்றதில்லை. மாறாக நடுவணரசு இழுத்த இழுப்புக்கெல்லாம் சென்று கொண்டேயிருந்தார். உரையாடல் என்பதையே இவர் தலைமை அமைச்சரின் கட்டளையின் பேரில்தான் இவர் செய்ய ஆரம்பித்தார் என்பது தெளிவு. இப்பிரச்சனையில் (மற்ற பிரச்சனைகளைப் போலவே) நடுவணரசின் ஆணைக்குக் கீழ்படிந்து நடந்து கொள்பவராகவே இவர் எப்போதும் இருந்து வந்தார் - வருகிறார்!

முன்னணி ஆங்கில நாளிதழ் ஒன்று இதைத் தெளிவாக கீழ்க்கண்டவாறு கூறியது, "இந்த உரையாடல் நாடகம் என்பது உள்ளாட்சித் தேர்தலையும், கவுடாவின் நாடாளுமன்றத் தேர்தலையும் கருதியே மேற்கொள்ளப்பட்டதாகும்.! அதாவது, 1971 ல் இந்திரா காந்தி தனது கர்நாடக அரசியலுக்கு வாய்ப்பாக இருக்க உச்ச நயன்மை மன்றத்தில் உள்ள வழக்கை திரும்பப் பெறும்படி கலைஞர் செய்தது போலாகும்."



படிப்பகம்

www.padippakam.com

உள்ளாட்சித் தேர்தல்களும் முடிந்தன. உரையாடல் முறிந்தது என்றும் அறிவிக்கப்பட்டது. மீண்டும் நடுவர் மன்றம் செல்வோம் என கலைஞர் அறிவித்தார். இம்முறை அவர் ஆட்சிக்கு வந்ததிலிருந்து பேச்சு முறிந்தது என அறிவிக்கப்படும் வரை, காவிரி நடுவர் மன்ற உசாவல் முடக்கப்பட்டது. தேவே கவுடாவை அவர் காவிரிப் பிரச்சனையில் எவ்வளவு மோசமான தமிழக எதிரி என்று தெரிந்திருந்தும் கலைஞரும், கருப்பையாவும் அவரை தலைமையமைச்சராக கொண்டு வந்து காவிரிக்கு மிகப் பெரிய கெடுதலைச் செய்யக் காரணமானார்கள்.

நடுவர் முகர்சியை நீக்கியிருப்பதைக் 'கலைஞர் வெளியில் சொல்லவேயில்லை. பிறகு தலைமையமைச்சருக்குப் பிடித்த ஒருவரை தேடிப்பிடித்து அப்பதவியில் அமர்த்தக் காலதாமதம் ஆகியது! இல்லை தாமதம் ஆக்கப்பட்டது! கலைஞர் நடுவர் மன்ற நீதியரசரை நீக்கியது குறித்து மூச்சே விடவில்லை. மன்றத்தில் இருந்த மீதி இருவரும் மூத்தவர்களாக இருந்தும் புதிதாகப் போடப்படுபவரை, அவர்களுக்குக் கீழே போட்டு அவர்களில் ஒருவரை மன்றத்தின் தலைவராகப் போடலாம் என்றும் இவர் கேட்கவில்லை! இந்த மாற்றத்தால் மட்டும் தமிழ்நாடு 20 முதல் 30 கோடி கன அடி நீரை இழந்துவிட வாய்ப்புள்ளது என்று அறிந்தவர் பலரும் கூறுகின்றனர்.

நடுவர் மன்ற நடவடிக்கைகளை எவ்வளவு தாமதப்படுத்த முடியுமோ அவ்வளவு தாமதப்படுத்தி வருகிறது கர்நாடக அரசு. அங்கு அவர்கள் உசாவிய சான்றுகள் மிகவும் நகைப்புக்கிடமானது. ஒருவர், தமிழகத்தில் தரைக்கு மேலே தண்ணீர் ததும்பி வழிகிறது (ஆர்ட்டிசான் ஊற்றுக்கள்) என்று சொன்னார்! இன்னொருவர், "தமிழகம் குறுவை நெல் வைப்பதையே நிறுத்திவிட வேண்டும்!" என்று ஒரு போடு போட்டார். இப்படியாக உசாவல் பகடிக்கிடமாக்கப்பட்டது. எப்படிப்பட்ட தாமதப்படுத்தும் தந்திரங்களை கர்நாடகா கையாண்டாலும் அதிகபட்சமாக இன்னும் 12 மாதங்களிலோ அல்லது 1999 இறுதிக்குள்ளோ ஒரு தீர்வை நடுவர் மன்றம் வழங்கியாக வேண்டும்.

ஆனால் இடைக்காலத் தீர்ப்பானாலும் சரி அல்லது இறுதித் தீர்ப்பானாலும் சரி அதை நிறைவேற்ற தற்போதுள்ள 'இந்தி'ய அரசியலமைப்புச் சட்டம் 356வது பிரிவே போதுமானது. ஆனால் அப்படிக் கேட்க கலைஞருக்குத் தெம்பில்லை. ஆனால் சட்டத்தின் அந்தப் பிரிவை கர்நாடகத்தின் மீது ஏவுவதற்கு எல்லா ஞாயங்களும் உள்ளன. அரசியல் தன்னலத்தின் காரணமாக கலைஞரும் அக்கோரிக்கையை நடுவணரசிடம் முன்வைக்க வில்லை. நடுவணரசும் அதைப் பயன்படுத்தவில்லை.

பிறகு அத்தீர்ப்புக்களை நிறைவேற்ற வழி என்ன? அரசுகளுக்கிடையிலான நதிநீர் பிரச்சனைச் சட்டப்பிரிவு 6(ஏ) அதற்கென் வகுக்கப்பட்டதாகும். அதன் கீழ் நடைமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என இடைக்காலத் தீர்ப்பு ஏற்பட்ட பிறகும் ஆறு ஆண்டுகளுக்கு மேலாகவும் தமிழ்நாடு 6(ஏ) பிரிவின் கீழ் நிறைவேற்றும் விதிகள் வகுக்கப்பட வேண்டும் என நடுவணரசைக் கேட்கவேயில்லை! கேட்க வேண்டும் என 1996 சூனில் நாங்கள் வற்புறுத்தியபோது கலைஞர் அதை மறுத்து விட்டார். ஆனால் இடைக்காலத் தீர்ப்பின்படி தண்ணீரை விட கர்நாடக அரசைப் பணிக்க வேண்டும் என தமிழ்நாடு அரசு 1992 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உச்சநயன்மை மன்றத்தில் தொடுத்த (அ.வ.எண்.1.92) வழக்கு ஒருவாறு 1997 ன் தொடக்கத்தில் நயன்மை மன்றத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டது. முன்பே கூறியபடி நதிநீர் பிரச்சனைச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்படும் நடுவர் மன்றத் தீர்ப்பின் மீது மேல்முறையீடு கிடையாது. உச்சநயன்மை மன்றம், உசாவலில் தலையிடவும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இருந்தாலும் உச்சநயன்மை மன்றத்தில் வழக்கிட்டு, "வழக்கு உச்சநயன்மை மன்றத்திற்குச் செல்கிறது" என்று மக்களிடையே முதல்வர்கள் சொல்லிக் கொண்டு வரும் தந்திரத்தைக் கையாண்டிருந்தார்கள். குறிப்பாகக் கலைஞர் இம்மாதிரியான தந்திரங்களைக் கையாளுவதில் மிகவும் கைதேர்ந்தவர்.

எதிர்பார்த்தபடியே, உச்சநயன்மை மன்றம் அவ்வழக்கை தன் அரசியல் அமைப்புப் பிரிவுக்கு மாற்றியது. அரசியலமைப்புப் பிரிவு தனக்கு இதில் தலையிட உரிமை உள்ளதா? என அனைத்துத் தரப்பு எடுத்துரைப்புக்களையும் கேட்டு முடிவு சொல்லியிருந்த நேரத்தில் எப்படி தீர்ப்பு சொன்னாலும், கர்நாடகத்தை அது பாதிக்கும் என்று கருதிய தேவே கவுடா அப்போது தன் ஆட்சி ஆட்டம் கண்டு கொண்டிருந்தாலும் காவிரிக்கு (தமிழகத்திற்கு) எதிராக தன்னால் முடிந்த இறுதிக் கைங்கரியத்தையும் செய்து வைத்தார். இதற்கு முன்னரே காவிரி காப்புக்குழு விதி 6(ஏ) ன் கீழ் விதிகள் வகுக்கப்பட வேண்டும் என நடுவணரசுக்கு வழக்கறிஞர் வழியாக அறிக்கை கொடுத்திருந்தது. கவுடா உடனே இதோ நடுவணரசே விதிகளை வகுத்து நயன்மை



படிப்பகம்

www.padippakam.com

மன்றத்தில் கொடுக்கும் என உச்சநயன்மை மன்றத்தில் கூறி, மேற்படி வழக்கில் தீர்ப்பளிப் பதற்கு முன்னரே தீர்ப்பளிக்க விடாத வண்ணம் ஒரு குறிப்பாணையைக் கொடுத்தார். உடனே. தமிழக அரசும் அதற்கு ஒப்புக் கொண்டது.

## இழுத்தடிப்பு வேலைகள்

அந்த குறிப்பாணையின்படி நடுவணரசு விதி 6(ஏ) ன் கீழ் ஒரு திட்டமும், ஆணையமும் பற்றிய நகல் விதிகளை வகுத்து தொடர்புடைய மாநிலங்களுக்கு அனுப்பும். அவர்களுடைய கருத்துக்களைக் கேட்ட பிறகு இறுதி செய்ய நயன்மை மன்றத்தில் ஒப்படைக்கும் என்பதாகும். இதைத் தமிழக அரசும் ஒப்புக் கொண்டது. இதை ஒப்புக் கொண்டது எப்படியொரு மிகப் பெரிய தவறு என்பதை விளக்கி காவிரி காப்புக் குழு ஒரு அறிக்கை கொடுத்திருந்தது. உதாரணமாக விதிமுறைகள் வகுக்க எட்டு கிழமைகள் தேவையில்லை. மாநிலங்களைக் கேட்க வேண்டியதில்லை. நடுவணரசின் அமைச்சரவையில் வைத்து அதன் இசைவு பெற்று பின்பு நாடாளுமன்ற இசைவு பெற்று அரசிதழில் வெளியிட்டால் போதுமானது. எனவே தலைமை அமைச்சர் கொடுத்த அழுத்தத்தினால் தமிழக அரசு இதற்கு ஒப்புக் கொண்டது என்பது தெளிவாகியது. மேலே கண்ட நடுவண்ரசுக் குறிப்பாணைப்படி அந்தத் திட்டம் இறுதி வடிவம் பெற 6 அல்லது 7 மாதங்கள் பிடிக்கும். இதற்கு இடையில் வரும் குறுவைப் பயிருக்கு தண்ணீரைத் திறந்து விட நடுவணரசிடமோ அல்லது கர்நாடக அரசிடமோ தமிழக அரசு வாக்குறுதி பெறவில்லை. கர்நாடகமோ இந்த நிகழ்வுக்குப் பிறகு தமிழர்கள் மீது போர்முரசு கொட்டத் துவங்கி விட்டது. கர்நாடகத்திலுள்ள தலைவர்களும் அரண்டு மிரண்டு போனார்கள். எதிர்பார்த்தபடியே திட்டமும், ஆணைய வரைவு, நகலும் ஒருவாறு உருப்பெற ஏழெட்டு மாதங்கள் ஆகிவிட்டன. நடுவணரசும் அதன் இறுதி வரைவு நகலை அணியம் செய்துவிட்டது.

நீர்வளத்துறையின் அன்றைய அமைச்சரான திரு.வோலா கர்நாடகத்தின் கடும் எதிர்ப்பைக் குறித்துச் சொல்லும்போது, 'இந்தி'ய அரசு நயன்மை மன்றத்திற்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியாக வேண்டும். அது சட்டத்தில் உள்ள கடமையை இதில் செய்தாக வேண்டும் என்று அறிவித்தார். கர்நாடக் பாரதீய சனதாக் கட்சி, "அரத்த ஆறு ஓடும்!" என்று அறிவித்தது. உடனே கர்நாடக நீர்வளத்துறை அமைச்சர் நாகே கவுடாவும் தில்லிக்குச் சென்று தில்லி அமைச்சர் வோலாவிடம் கூச்சலிட்டுவிட்டு வந்தார்.

பின்னாலேயே கர்நாடக முதல்வர் பட்டேல் வோலாவைச் சந்தித்துப் பேசியதுடன், தலைமை அமைச்சரிடமும் வகுக்கப்பட்ட திட்டத்தை நயன்மை மன்றத்தில் கொடுக்கக்கூடாது என்று வற்புறுத்தி வந்தார். அன்று கிடப்பில் போடப்பட்டதுதான். இன்றுவரை அப்படியே கிடப்பில் உள்ளது.

பிறகு பஞ்சாப் பார்ப்பனரான ஐ.கே.குச்ரால் தலைமையமைச்சரானார். அவர் காலம்பூராவும் தன்னுடைய அமைச்சரவை கவனக்காவல் (காபந்து) அரசானதால் இத்திட்டத்திற்கு ஒப்புதலளிக்க உரிமையில்லை என்றார். ஆனால் உரிமை உண்டு என்று சட்ட வல்லுனர்கள் வெளிப்படையாகவே கருத்துத் தெரிவித்தார்கள். எடுத்துக்காட்டாக அதே கவனக்காவல் அரசு பஞ்சாபிற்குச் சார்பாக அந்த மாநில அரசு நடுவணரசுக்குத் தரவேண்டிய ஏழாயிரம் கோடி உருபாவைத் தள்ளுபடி செய்தது என்ற தகவலும் நமக்குக் கிடைத்தது. ஆனால் தமிழர்நாட்டு மக்கள்தான் நாதியற்றவர்களாயிற்றே! தமிழர்நாட்டுத் தலைவர்கள்தான் தங்கள் நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்ள எதையும் விட்டுக்கொடுக்க அணியமாயிருக்கிறார்களே!

புதிய அரசு வந்தது. கலைஞரும் புதிய அரசுக்குப் பல்லக்குத் தூக்குபவராக ஆகிவிட்டார். வாச்பேய் பதவி ஏற்ற அன்று குண்டு எதுவும் வெடிக்காமல் பார்த்துக் கொண்டதற்காகத் தமிழர்நாட்டுக் காவல் துறையினருக்கு ஏறத்தாழ 9 கோடி உருபா பெறுமான பரிசுகளை அள்ளி வழங்கினார். நடுவில் பாரதீய சனதாக் கட்சியின் ஆட்சி நீடிக்க தனது ஆட்சியையும் பலி கொடுக்க தான் அணியமாய் இருப்பதாய் அறிவித்தார். தற்போது நடுவணரசிடம் உள்ள நகல் திட்டத்தை கொண்டுவந்து நயன்மை மன்றத்தில் அளிக்க வற்புறுத்த மறுக்கிறார். இதுபற்றி உழவர் கழகங்கள் பலமுறை வற்புறுத்தி தீர்மானங்கள் போட்டும் அவர் அசையவில்லை.

எனவே காவிரி காப்புக்குழு சார்பில் தமிழர்நாட்டுச் சட்டப்பேரவையில் நடுவணரசு வகுத்தத் திட்டத்தை நயன்மை மன்றத்தில் ஒப்படைக்க வேண்டுமென்று வற்புறுத்தி ஒரு தீர்மானம் நிறைவேற்றி, அதை முதல்வரோ அல்லது சட்டமன்றத்திலுள்ள கட்சித் தலைவர்களோ கூட்டாகச் சென்று தலைமை அமைச்சரிடம் அறிவித்து வற்புறுத்திச் சொல்ல வேண்டும் என்று ஒரு மடலை கலைஞருக்கும், 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைத்தது. தீர்மானத்தை அந்தச் சட்டமன்றத் தொடரிலேயே



படிப்பகம்

www.padippakam.com

ஒரு மனதாக நிறைவேற்றிவிட வேண்டுமென காவிரி காப்புக்குழு கேட்டுக்கொண்டது.

ஆனால் கலைஞர் அவர்களை நான் நேரில் பார்த்து இதே கோரிக்கையை வைத்தபோது, "ஒரு கடிதம் எழுதுங்கள்" என்றார். ஆக, என்னுடைய கடிதம் இல்லாததால்தான் சட்டமன்றத்தில் இதுவரை ஒரு தீர்மானம் நிறைவேற்ற முடியவில்லை போலும்!

---

**கர்நாடகத்தில் அணைகள் கட்டுதல் வாய்க்கால் விரிவாக்கம் போன்றவைகள் தொடர்ந்து நடந்து வருகின்றன**

---

தேர்தலுக்குப் பிறகு செயலலிதா காவிரி உள்ளிட்ட பல கோரிக்கைகளை தமிழர் நாடடிற்காக வைத்தபோது கர்நாடகத்தில் அதற்கென சட்டமன்றத்தைக் கூட்டியே பேசினர். அதில் சில மூத்த பேராயக்கட்சித் தலைவர்கள், "அரத்த ஆறு ஓடும்" என எச்சரித்தார்கள்.

கலைஞரைக் கர்நாடகத் தல்லவர்கள் இம்முறை ஆட்சிக்கு வந்தவுடன் 'புகழோ புகழ்!' என்று புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். செயலலிதா ஒட்டுக்குக் காவிரி என்று குறிப்பிட்டவுடன், அவர் மீது சீறிப்பாய்கிறார்கள்.

ஆனால் கர்நாடகத்தில் அணைகள் கட்டுதல் வாய்க்கால் விரிவாக்கம் போன்றவைகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. எனவே, நடுவர்மன்றத்தில் இருந்து ஒரு இறுதித் தீர்ப்பையும் வாங்கி அதை நிறைவேற்ற ஒரு திட்டமும், ஆணையும் கொண்டு வந்தால்கூட, கடந்த கால பட்டறிவைப் பார்க்கும்போது அதை நிறைவேற்ற முடியுமா? என்பது ஐயமே! கர்நாடகத்தில் தமிழர்களை எதிர்த்து ஒரு அறிவிக்கப்படாத போரே நடக்கிறது! அதுகுறித்து ஒரு தனிக் கட்டுரைதான் எழுத வேண்டும். நமது நாற்காலி நாயகர்கள் காவிரியை மீட்க எந்த ஒரு உருப்படியானச் செயலையும், போராட்டத்தையும், ஈகத்தையும் செய்யப்போவதில்லை.

இதற்கிடையில் துணிச்சலாக கர்நாடக அரசு (வழக்கம்போல் ஒப்பந்தத்தை மீறி பெருமளவில் வெங்காலூர் உட்பட தன்னுடைய அனைத்து நகரங்கள் பலவற்றிற்கும்) குடிநீருக்காக 15-20 ஆயிரம் கோடிச் செலவில் திட்டம் தீட்டி செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது. குண்டுராவு காலத்திலேயே மேக்கேதாட்டு அணைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டது.

"எங்கள் ஊரில் பெய்யும் மழை நீரை, எங்கள் செலவில் அணை கட்டிக்கொள்ள நாங்கள் யாரையும் கேட்கத் தேவையில்லை!" என்று அப்போதே அவர் பேசினார். கர்நாடகத் தலைவர்கள் அனைவரும் தமிழர் நாட்டிலேயே வந்து, "உரையாடல் வழியாகத்தான் தீர்வு காண முடியும்!" என்று பலமுறை பேசிச் சென்றுள்ளனர். அதன் பொருள் என்ன என்று தெரியாதத் தமிழர்கள் கைதட்டி, மாலை அணிவித்து, மரியாதை செய்து அனுப்பி வைக்கிறார்கள். தேவே கவுடா, நாகே கவுடா, நஞ்சுண்டசாமி, என்.எசு.கிருட்டிணா இப்படி அனைவரும் இதில் அடங்குவர். உச்சத்தில் இருப்பவர் இராம கிருட்டிண எக்டெ ஆவார். அவர் கருநாடகத் தமிழர்களுக்கும், காவிரி நீருக்கும், தமிழகத்தின் காவிரி உரிமைக்கும் செய்த கேடுகள் எண்ணற்றவை. அதைத் தொகுத்து தனிக் கட்டுரையாகத்தான் எழுத வேண்டும். ஆனால் இரா.செழியன் வட்டம் (தமிழகத்தில் பல கட்சிகளையும் பிரிந்து சென்று தங்களுக்குத் தாங்களே ஊழியம் செய்து கொள்ளும் வட்டம்!) கர்நாடகச் சூழ்ச்சிகளை எதிர்ப்பதற்கு மாறாக அன்பழகன் போன்றோர் வெங்காலூர்த் தமிழ்க் கழகத்திற்குச் சென்று, "திருவள்ளுவர் சிலையைத் திறக்க ஒரு நல்ல காலம் வரும்!" என்று பேசி வருகிறார். செழியனோ ஒருபடி மேலே போய், "எக்டெ தமிழர் நாட்டிற்குக் கெடுதல் செய்வதாக செயலலிதா சொல்வது தவறு!" என்று சீறுகிறார்.

## *போராடாவிட்டால் இழப்பது திண்ணம்.*

இப்படிப்பட்டத் தலைவர்களின் பட்டியல் அதாவது கலைஞர் கருணாநிதி முதல் செழியன் வரை நீளமானது. அவர்களின் அரசியல் தலைமை நீடிக்கும் வரை காவிரிப் பிரச்சனை மட்டுமல்ல, கண்ணகிக் கோட்டம் மீட்பு, வடவர் சுரண்டல், இதுபோன்ற எத்தனையோ தமிழர்களின் உரிமைப் பிரச்சனைகள் தீரப்போவதில்லை. இவர்களை அரசியல் களத்திலிருந்து அகற்றுவதும் எளிதானதல்ல. அவர்கள் எப்படியும் ஒரு பத்தாண்டு காலம் இருப்பார்கள். அதற்குள் தமிழகத்தில் ஒற்றுமையும் குறிப்பாக மாணவர்களும் இளைஞர்களும் முன்முயற்சி எடுத்து அமைப்புக்களை உருவாக்கி அதன் வழியாக அவர்கள் தமிழின மீட்புக்குப் போராடுகின்றச் செயலை விரைவில் செய்தால் ஒழிய நாம் காவிரியை இழப்பது திண்ணம் என்றே தோன்றுகிறது. அந்த இழப்பால் தமிழகத்திற்கு ஏற்படப்போகும் இன்னல்களைக் கணக்கிட்டுப் பார்க்கவே நெஞ்சம் கனக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

தமிழகத்தைச் சேர்ந்த நடுவணரசின் கண்காணிகள் பலரும் மாநில முதல்வருக்கு ஒத்துப் பாடுபவர்களும், குறுவைக்கு நீரின்றி வாடும் பொழுதெல்லாம் குறுக்குச் சால் ஓட்டுவதும் வழக்கமாகிவிட்டது. காவிரிப் பிரச்சனையால் தமிழ்நாடு ஒன்றுபட்டு இன எழுச்சி கொண்டு போராட துவங்கிவிடக்கூடாது என்ற அடிப்படையில் நதிகளை இணைக்க வேண்டும் என்றும் தேசிய நதிகளைக் காவிரியுடன் இணைக்க வேண்டும் எனவும் அவ்வப்போது பேசி தமிழர்களை ஏய்த்து வரும் ஒரு சிலரை அடையாளம் கண்டு கொள்வதும் தமிழிளைஞர்களின் கடமையாகும். சாதி மதச் சண்டைகளைத் தாண்டித் தமிழர்களை இணைக்கும் ஒரு கருவியாக காவிரிப் பிரச்சனை மாற வேண்டும் என நாம் விரும்புகிறோம்.

### *அண்மையில் நடந்துள்ளவைகள (1998 ஆகற்று திங்களில்) தொடர்பாக....*

### *வெண்ணை திரண்டபோது தாழியை உடைத்தார்!*

காவிரி இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்றுவது தொடர்பாக; பழைய திட்டம், பழைய ஆணையம் பற்றிய விதிமுறைகள்தான் சிறந்தது என்றும், கலைஞரைக் கசக்கிப் பிழிவதன் வழியாக கர்நாடகத்தில் பாரதிய சனதாக் கட்சி தனது பலத்தைக் கூட்டலாம் என்றும் நினைத்து தமிழகத்து நலனைக் காவு கொடுக்கும் என்று நாம் நினைத்தது போலவே நடந்துள்ளது. கலைஞரும் நாம் முன்பே சொன்னது போல '356' என்கிற நோயினாலும் ஜெயின் ஆணையத்தின் தொல்லையாலும் பாதிக்கப்பட்டு மிரண்டு இருந்த வேளை இது. இதை நன்றாகப் பயன்படுத்தி கர்நாடகத்தினுடைய கோரிக்கைகள் அனைத்தையும் முற்றாக நிறைவேற்றிவிட்டது நடுவணரசு. பா.ச.க.யின் கர்நாடக அரசைப் பிடிக்கும் முயற்சிக்கு கலைஞர் மீண்டும் பலியாகிவிட்டார்.

கர்நாடக அரசியல் காரணமாக முதலில் வழக்கைத் திரும்பப் பெற்றது 1971 இல் இந்திராகாந்தியின் காலத்தில். தேவே கவுடாவின் கீழ் நடுவர் மன்றத்தைப் பந்தாடுவதற்கும், நடுவர் மன்றத்தின் நடுவர்களைக் காலி செய்வதற்கும், நடுவர் மன்றம் இரண்டு ஆண்டுகளாக இயங்காமல் இருந்ததற்கும் இவர் ஒத்துழைத்தார். இப்போது கர்நாடகத்தில் பா.ச.க. வெற்றி பெருவதற்காக இவரை மிரட்டிப் பணிய வைத்துள்ளது. ஆனால் விருப்பமாகப் பணிவது என்பது கலைஞரின் இயல்பு. காரணம், '356' வந்தால் துணிந்து பதில் சொல்வோம் என்றும் ஜெயின் ஆணையம் வந்தால் தோள்தட்டி பதில் சொல்வோம் என்று கூறி மக்களிடம் நன்மதிப்பைப் பெறாமல், அதற்கு மாறாக நடுவணரசுக்குக் குற்றேவல் செய்யும் அடிமை இயல்பின் காரணமாகவும், நாற்காலி ஆசையின் காரணமாகவும் நடுவணரசுக்கும், கர்நாடகத்திற்கும் மீண்டும் மீண்டும் வளைந்து கொடுத்து காவிரியைக் காவு கொடுக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

குச்ரால் ஆட்சிக் காலத்தில் வரையறுக்கப்பட்ட திட்டமே சிறந்தது என்று இவரே பல முறை திரும்பத் திரும்பக் கூறினார். அத் திட்டத்தைப் பலர் குலைக்க முற்பட்டபோது, "அதில் சற்றும் குறையவிட மாட்டோம், குறைக்க விடவும் மாட்டோம்" என்று இவர் பேசியிருக்கிறார். ஆகவே, அந்தத் திட்டம் சிறந்தது என்று இவருக்குத் தெரியும். அதை விடக்கூடாது என்பதும் அவரது ஆசைதான். ஆனால் அவருடைய நாற்காலி ஆசையினால் நாட்டிற்குரிய காவிரியைவிட தன்னுடைய நாற்காலிதான் பெரிது என்று செயல்பட்டுவிட்டார்.

ஆகத்து 6 ஆம் நாள் முதல்வர்கள் கூட்டத்திற்கு அவர் தில்லிக்குச் செல்ல வேண்டாம் என்று அவருக்கு நெருக்கமான சிலரே கூறியிருந்தனர். ஆனால் மூப்பனாரும் அவரது கட்சிக்காரர்களும், "அவர் தில்லிக்குச் செல்ல வேண்டும் என்றும், புதிய வரைவுத் திட்டத்தை ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும் நாங்கள்தான் சொன்னோம்" என்கிறார்கள். இந்தமுறை, தனது உளச் சான்றுக்கு எதிராகச் செய்கிறோம் என்கிற உறுத்தலோ என்னவோ கலைஞர் ஒரு அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்றைக் கூட்டுகிறார். அனைத்துக் கட்சிகள் என்றால் 'எல்லா அரசியல் கட்சிகள்' என்றுதான் பொருள். ஆனால் அதிலும் எஸ்றா சற்குணம் போன்ற, காவிரிக்குத் தொடர்பே இல்லாத, வேளாண்மைக்குத் தொடர்பில்லாத, அரசியலுக்கும் கூடத் தொடர்பில்லாத ஆட்களை யெல்லாம் கூட்டி தனக்குச் சார்பாக அதிக ஆட்கள் அந்தக் கூட்டத்தில் இருக்கும்படிப் பார்த்துக் கொண்டார்.

ஏதோ அவர் வீட்டுத் திருமணத்திற்கு வரவேற்பது போல எல்லோரையும் வாசலில் நின்று வரவேற்று, ஓடி ஆடி அதை இதைச் செய்து, "நீங்கள் போய் செய்ய நாங்கள் அதிகாரம் கொடுகிறோம்!" என்று அவர்களைச் சொல்ல வைத்து அதிகாரம் வாங்கிக் கொண்டார். தில்லிக்கும் போனார். ஆனால் மொத்தத்தில் கெட்டுப் போனது தமிழகம். கெடுக்கப்பட்டது காவிரி மீதான உரிமை.



படிப்பகம்

www.padippakam.com

தில்லிக்குச் செல்வதற்கு முன்னரே, "கூட்டத்தில் நான்கு மாநிலத் தலைமைச் செயலர்களும், நடுவணரசின் அமைச்சரவைச் செயலர்கள் 5 பேரும் கலந்து கொள்வார்கள் என்பது முறையல்ல!" என்று முணுமுணுத்தார். ஆனால் அப்படிக் கலந்து கொண்டதனால் குட்டு வெளிப்பட்டு விட்டது. முழுக்கக் காயடிக்கப்பட்ட, ஒரு அதிகாரமும் இல்லாத ஒன்றைச் செய்யப் போகிறார். நம்மிடம் கையெழுத்து வாங்கப் போகிறார் என்பதும் தெரிந்துவிட்டது. நீங்கள் போக வேண்டாம் என்ற குரல் ஒரு பக்கம் எழுகிறது. இருப்பினும் அவர் தில்லிக்குப் போகிறார். "காவிரி உழவர் களுக்கு எள்ளளவும் தீமை செய்ய மாட்டேன்!" என்று சொல்லிக் கொண்டே போனார். ஆனால் திரும்பி வரும்போது அம்மணமாக அனைத்தையும் விட்டுவிட்டு வந்து நின்றார். முதல்வர்கள் கூட்டத்திற்கு முன்னதாக நடந்த தலைமைச் செயலர்கள் கூட்டத்திலேயே ஏற்கனவே பழைய திட்டத்தில் நமக்குச் சார்பாக இருந்த அனைத்து அம்சங்களும் பாழடிக்கப்பட்டன.

முதலாவதாக அணைகளைச் சென்று ஆணையம் பார்வையிடுவது! அந்த ஆணையம் என்பது தொழில் நுணுக்க நிபுணர்களும் நிர்வாகிகளும் கலந்த ஒன்று. அவர்கள், ஆணையம் இடும் கட்டளைகளை எந்த மாநிலமாவது ஏற்காதபோது (குறிப்பாக கர்நாடகம்) கர்நாடகத்திலேயே அந்த அணைகளைக் கைக்கொண்டு நீர் நிர்வாகத்தை மேற்கொள்கிற ஒரு அதிகாரம். இப்போதைய புதிய வரைவில் இந்த அதிகாரம் இல்லை. உடனே நமது தலைமைச் செயலர் முத்துசாமி அதை ஏற்றுக் கொள்ளவில்லை. "நான் கேட்டுச் சொல்ல வேண்டும்! எனக்கு அதிகாரம் இல்லை!" என்று வந்துவிட்டார். அந்தக் கூட்டத்தையும் அந்த எத்தர்கள் எப்படிச் செய்திருக்கிறார்கள் என்றால், அப்பரிந்துரையை விடியற்காலை கடைசி நேரத்தில் கொடுக்கிறார்கள். முன் கூட்டியே கொடுக்கவில்லை.

### *கர்நாடகத்தின் தந்திரத்தில் கலைஞர் விழுந்தார்!*

கர்நாடகம் ஒரு தந்திரம் செய்தது. செயலர்கள் கூட்டத்திலேயே என்ன நடக்கிறது என்பதைக் கவனித்து, எந்த அளவுக்குக் கருணாநிதி மடங்கி வருகிறார் என்பதைக் கணித்து, என்ன முடிவு எடுப்பது என்பதை உறுதி செய்ய, கர்நாடகத் தலைமை அரசியல் குழு ஒன்று தில்லியிலேயே கூடாரம் அடித்து இருந்தது. கர்நாடக முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர்கள், சில நடுவணரசு அமைச்சர்கள் என்று எல்லோரும் அதில் அடங்குவர். ஆகஸ்டு மாதம் 4ஆம் நாள் இவர் முணுமுணுத்துக் கொண்டே தில்லிக்குச் சென்றார். "இவரை எப்படியாவது மழுங்கவைக்க வேண்டும்" என்று கர்நாடகத்தின் அந்த அரசியல் குழு முடிவெடுத்தது. 5ஆம் நாள் கர்நாடகத்தின் எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும், அனைத்துக் கட்சியினரும் தில்லியிலேயே கூடி கருணாநிதியை நமது வழிக்குக் கொண்டு வந்துவிடலாம் என்ற நம்பிக்கையோடு பேசிக் கலைகின்றனர். அதன் பிறகு அடுத்த இரண்டு நாள்கள் இவர்கள் கூடிப் பேசியதில் நமக்குச் சாதகமாக உள்ள நல்ல பிரிவுகளையெல்லாம் ஒவ்வொன்றாகக் களைந்து விட்டார்கள். எடுத்துக்காட்டுக்கு, "அணைகளைச் சென்று பார்வையிடுவதும் சட்டத்தை மீறும்போது அணையைக் கையில் எடுத்துக் கொள்வதும்!" என்பது ஒரு பிரிவாகும். அடுத்து, இறுதித் தீர்ப்பு வந்து அதைச் செயல்படுத்தும் ஒரு குழு ஏற்படுத்தும்வரை பழைய சட்டப் பிரிவுகளே பொருந்தும். இப்போதைய திட்டத்தில் இவை எல்லாவற்றையும் தொலைத்து விட்டார்கள்.

---

***மொத்தத்தில் கெட்டுப் போனது தமிழகம். கெடுக்கப்பட்டது காவிரி மீதான உரிமை.***

---

இப்போது உருவாக்கப்பட்டிருக்கிற ஆணையம் நான்கு மாநில முதல்வர்களையும், தலைமை அமைச்சரையும் கொண்ட ஒரு ஆணையமாகும். ஆனால் 5 பேரும் சேர்ந்திருக்கிற இந்த அவைக்கு "அதிகாரக் குழு" என்று பெயர் கொடுக்கிறார்கள். அதிகாரக் குழு என்றால் அதற்கு அதிகாரம் இருக்க வேண்டும். ஆனால் இது அதிகாரம் இல்லாத ஒரு "அதிகாரக் குழு"! அதையும் இவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். முந்தைய திட்டப்படி ஏற்படுத்தப்பட்டக் குழுவுக்கு அலுவலகம் உண்டு. அது தொழில் நுட்பக் குழு. புள்ளிவிவரங்களை அது தனது கையில் வைத்திருக்கும். இப்போது இந்தக் குழுவானது நடக்கவியலாத, இயங்கவியலாத ஒரு குழுதான்.

இது போக இதற்குக் கீழ் கண்காணிப்புக் குழு என்று ஒன்றைப் போட்டிருக்கிறார்கள். அது ஆலோசனைகளைச் சொல்லும், புள்ளி விவரங்களைச் சொல்லும் ஒரு குழுதான். ஆனால் அதற்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. இந்தக் குழுவிற்கான அதிகாரங்களை வரையறை செய்ய 4 மாநிலங்களின் தலைமைச் செயலர்களும் விடிய, விடிய உட்கார்ந்து பேசினார்கள். இறுதியில் பழைய திட்டத்தில் இருந்த எல்லா நல்ல அம்சங்களையும் எடுத்துவிட்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

அதிகாரம் உள்ள ஒரு குழுவும், அணைகளைச் சென்று பார்வையிடும் அதிகாரமும் பழைய திட்டத்தில் நமக்குச் சாதகமாக இருந்த இரு அம்சங்கள். இந்த இரண்டையும் கைவிட்டதுதான் நமக்கு ஏற்பட்டிருக்கிற மிகப் பெரிய இழப்பு. இது தமிழகத்திற்குச் செய்திருக்கிற இரண்டகம். தமிழகத்திற்குக் கொடுத்த மரண அடி! முதலில் 1971 இல் ஒரு மரண அடி (வழக்கைத் திரும்பப் பெற்றது)! தேவேகவுடா செய்த அக்கிரமங்களுக்கு எல்லாம் தலையாட்டியது அடுத்து அடி. இப்போது தூக்கிலே போட்ட காவிரியின் காலைப் பிடித்துத் தொங்குவது போல இந்த திட்டத் திற்குக் கையெழுத்து போட்டு வந்திருப்பது!

***தூக்கிலே போட்ட காவிரியின் காலைப் பிடித்துத் தொங்குவது போல இந்த திட்டத்திற்குக் கையெழுத்து போட்டு வந்திருப்பது!***

இத்தனை இரண்டகங்களுக்குப் பிறகும் தான் செய்தது சரி என்று காட்டுவதற்காக, தில்லியில் இருந்து கொண்டே "வெற்றி!" என்றும் "மகிழ்ச்சி!" என்றும் அறிக்கைக்கு மேல் அறிக்கை விடுகிறார். இங்கு வந்து மற்ற மாநில முதல்வர்களுக்கு நன்றி சொல்கிறார். "உழவர்களுக்குப் பொருளுள்ள பரிசு!" என்கிறார். அத்தோடு மட்டும் நில்லாமல் தனக்கு வேண்டியவர்கள், ஏடுகளை நடத்துபவர்கள், விளம்பரச் சாதனங்கள் என்று எல்லாவற்றையும் பயன்படுத்தி தனது வாழ்நாளிலேயே இல்லாத ஒரு பரப்புரைப் போரை (பிரச்சார யுத்தத்தை) நடத்துகிறார். வலது பொதுவுடைமைக் கட்சியைக் கூட்டிவந்து தனக்குப் பாராட்டுவிழா நடத்த வைக்கிறார். இது எதற்கென்றால் காவிரிக் காப்புக் குழு உண்மையான உழவர்களைக் கூட்டி வந்து அண்மையில் திருச்சியில் கூட்டம் போட்டு, உண்மைகளைப் போட்டு உடைத்து, தீர்மானங்களை வெளியிட்டதன் விளைவேயாகும்! அந்தத் தீர்மானங்கள்தான் இவருக்குப் புளியைக் கரைத்திருக்கிறது.

### *மணல் கொள்ளையனின் பணத்தில் மாநாடு!*

காவிரி மற்றும் தமிழகத்தின் ஆற்றோரங் களிலுள்ள மணலையெல்லாம் பேய்வாரி எந்திரங்களை வைத்து கொள்ளையடிக்கிறார்கள். ஆயிரக்கணக்கான சரக்கிகளில் இந்த மணலை ஏற்றிச் செல்கிறார்கள். ஆயிரக் கணக்கான கோடிகளை இவர்கள் இன்று சம்பாதித்து விட்டார்கள். இந்தக் கொள்ளைக்கான கையூட்டு எல்லாம் இவருடைய குடும்பத்துக்குத்தான் போய்ச் சேருகிறது. இந்தக் கொடிய திருட்டைத் தடுப்பதற்கு இன்று காவல்துறைக்கே அதிகாரம் இல்லை! 10, 15 தவறான ஆணைகளை இந்த கொள்ளையர்கள் பெற்று வைத்துக் கொண்டு சட்டத்தை ஏய்க்கப் பார்க்கிறார்கள். மணலைக் கொள்ளையடிப்பதனால் ஊற்று நீரெல்லாம் வறண்டு பல நூறு கேணிகள் காய்ந்து போய்விட்டன. அதை நம்பிருக்கிற இலட்சக்கணக்கான குடும்பங்களும், விளை நிலங்களும் இன்று கெட்டு நாசமாயின.

நடக்கிற இந்த மணல் கொள்ளையைத் தடுக்க அல்லது போய்ப் பார்க்கக்கூட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் இல்லை. நீதிமன்றத் தடை உள்ளது. காவல்துறைக்கு அதிகாரம் இல்லை. உயர்நீதி மன்றங்கள் தங்களது ஆட்களையே அரசு வழக்கறிஞர்களாக வைத்துக் கொண்டு தடையை உடைக்க இயலாதபடி வைத்துள்ளார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக இந்த மணல்கொள்ளையை எதிர்த்துப் போராடி வந்துள்ளோம். மணல் கொள்ளைக்கு உடந்தையாக இருக்கிற இவர் எப்படி காவிரியைக் காப்பாற்றுவார்? எனவே இவருடைய செயல்கள் எங்களைப் போன்றவர்களுக்கு வியப்பைத் தரவில்லை. இந்த மணல் கொள்ளையரின் பணத்தில்தான் இப்போது மாநாடுகளும், பொய்விளம்பரங்களும் தாராளமாக நடக்கின்றன.

கலைஞர் சொல்கிறார், "அவர்கள் 205 நூ.கோ.க. அடி (டி.எம்.சி.) நீரைத் தர ஒப்புக் கொண்டார்கள்" என்று. இது நிரம்பவும் அசிங்கமான ஒரு வாதம். 205 நூ.கோ.க.அ. நீர் என்பது உச்ச நயன்மை மன்றத்திற்கு இணையான ஒரு நடுவர் மன்றம் கொடுத்த தீர்ப்பு. அதை அரசிதழில் போட்ட உடனேயே அது அந்த மாநிலத்தைக் கட்டுப்படுத்தும். அதை அம் மாநிலம் மீறினால் அரசியலமைப்புச் சட்டத்தின்படி அந்த நிர்வாகத்தை நடுவணரசே எடுத்துக் கொள்ளலாம். அரசையே தூக்கி எறியலாம். அல்லது தண்ணீர் வழங்கும் கடமையை மட்டும் அரசு ஏற்றுக் கொள்ளலாம். இப்படி சட்டங்கள் தெளிவாக இருக்கும்போது, கர்நாடகம் திட்டத்தை ஏற்றுக் கொண்டு விட்டது என்பதை ஒரு வெற்றியாகச் சொல்வது சிறுபிள்ளைத் தனமான ஒன்று!

அடுத்து 205 நூ.கோ.க.அ. நீர் கிடைத்துவிட்டதை வெற்றியாகச் சித்தரிப்பதும் நகைப்புக்குரிய ஒன்று. 205 என்று கர்நாடகம் ஏற்றுக் கொள்வதில் அதற்கு இழப்பு ஏதும் கிடையாது. ஏனென்றால் 205 நூ.கோ.க.அ. நீர் போக மீதி உள்ள நீரைப் பிடித்து வைக்க அங்கு அணைகளுக்கு சக்தி போதாது. கடந்த ஏழு ஆண்டுகளிலும்



படிப்பகம்

www.padippakam.com

சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 205க்குப் பதிலாக 240 விட்டிருக்கிறோம் என்று புளுகுகிறார்கள். இந்த 240 ஐ இவர்கள் ஏற்றுக் கொண்ட திட்டத்தின்படி விடுவதில்லை. அவர்கள் எனக்குத் தெரிந்தவரை குறைந்தது 13 அணைகளைக் கட்டி வைத்துள்ளார்கள். நான்கு பெரிய அணைகள் இதில் உள்ளடங்கும். இவைகளில் இப்போது இவர்கள் எதிர்பார்ப்பது போல நீரைத் தேக்கி வைக்க முடியவில்லை. அடுத்து இவர்கள் இத்தனை அணைகளைக் கட்டிவிட்டார்களே தவிர அதற்கான வாய்க கால்களை இன்னும் வெட்டி முடிக்கவில்லை. இப்போதுதான் வருண் வாய்க்கால் என்று ஒரு பெரிய வாய்க்காலைக் கட்டுகிறார்கள். ஏமாவதி அணையை ஒட்டி 1000 கோடிச் செலவில் மற்றொரு வாய்க்காலை அமைத்து வருகிறார்கள்., ஆக மெல்ல மெல்ல 26 இலட்சம் குறுக்கம் நிலங்களுக்கு வேளாண் வசதிகளைச் செய்த பிறகே ஓய்வார்கள். ஆக இப்போது அணைகளில் தேக்க முடியாமல் வழிந்து வருகிற நீரைத்தான் 240 நூ.கோ.க.அ. நீர் என்று கணக்கு காட்டுகிறார்கள்.

***அணைகளில் தேக்க முடியாமல் வழிந்து வருகிற தண்ணீரைத்தான் 240 நூ.கோ.க.அ. நீர் என்று கணக்கு காட்டுகிறார்கள்.***

இப்போது அவர்கள் கட்டியுள்ள அணைகளில் பின்பு இவர்கள் எவ்வளவு நீரை வேண்டு மானாலும் தேக்கலாம். கடும் மழை பெய்தால் மட்டுமே அவை நிரம்பி வழியும். அப்போது தான் இங்கு தண்ணீர் வரும். அல்லது இங்கு குடிநீருக்குக்கூட பெரும் பஞ்சம் வரும். 205 நூ.கோ.க.அ. நீர் தருவதாகச் சொல்வது அவர்களுக்கு தலையானது அல்ல. கலைஞரிடம் கையெழுத்து வாங்குவதுதான் அவர்களுக்கு முகாமையானது. ஏனென்றால், மற்ற திட்டங்களும் சட்டப் பிரிவுகளும் அதில் அடிபட்டுப் போகும்.

11.2 இலக்கம் குறுக்கம் நிலம்தான் நீர் பாய்ச்சலாம் என்று கர்நாடகத்திற்கு நயன்மை மன்றத்தின் கட்டளை இருக்கிறது. ஆனால் 16 இலக்கம் குறுக்கத்திற்கு அதைக் கொண்டு வந்துவிட்டது. 'இது நயன்மை மன்றச் சட்ட மீறல்" என்று கர்நாடகத்தின் மீது வழக்குத் தொடுக்கக்கூட தமிழக அரசுக்கு அருகதை இல்லை. இனி அவர்களது திட்டப்படி 26 இலட்சம் குறுக்கம் நிலங்களுக்கு வேளாண்மையை அவர்கள் விரிவுபடுத்திவிட்டால் சாராசரியாக 190 நூ.கோ.க.அ. நீர் கூட இங்கு வராமல் போகலாம். இப்போதே நமக்கு 8 இலட்சம் குறுக்கம் நிலங்களில் வேளாண்மை குறைந்துவிட்டது. தமிழ்நாட்டில் மொத்த வேளாண்மையில் புதுக்கோட்டை மாவட்ட வடக்கு வட்டங்களும், கடலூரில் தெற்கு வட்டங்களும், கிழக்கே, நாகப்பட்டிணத்தில் பத்து கட்டைத் தொலைவு வரை 40 கோ.க.அ. நீர கடலுக்குள் போவதை விட்டு இப்போது ஒரு 10 கட்டைத் தொலைவுக்கு முழுவதுமாக அங்கு நீர் போவதில்லை. இப்போது அந்த நிலங்களை மலிவாக விற்று, மீன் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டு, நிலங்கள் பாழ்பட்டு. இனி உழவுத்தொழிலுக்கே பயன்படாத அளவுக்கு அது நாசமாகிவிட்டது.

அவர்கள் விரிவுபடுத்துகிற 4 இலக்கம் குறுக்கமே இங்கு 8 இலக்கம் குறுக்கங்களை பாழ்படுத்தி விட்டது என்றால் நாளை அவர்கள் 26 இலக்கம் குறுக்கத்திற்கு வேளாண்மையை விரிவுபடுத்தினால் தண்ணீர் கிடைப்பது பெரும்பாடாகும். அவர்கள் கட்டிவரும் மேக்கேதாட்டு அணையைக் கட்டி முடித்து விட்டால் அந்த மிச்ச நீர் வரத்தும் முற்றாக நின்றுவிடும். குடிநீருக்கு இங்கு பெரும் பஞ்சம் ஏற்படும். சுற்றுச் சூழல் நாசமாகும். காவிரி யின் இரு கரைகளிலும் சுமார் 300 கல்லுக்கு இருபுறமும் உழவுத் தொழிலை மேற்கொள்ளா தவர்களும் பஞ்சத்தால் அடிபடுவது மட்டுமல்ல, குடிக்கிற நீருக்கே தட்டுப்பாடு ஏற்படும்.

205 நூ.கோ.க.அ.நீரைத் தர ஒப்புக் கொண்டார்கள் என்று அப்பாவித்தனமாக மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள்! கர்நாடகக்காரர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், 205 நூ.கோ.க.அ. நீர் என்பது ஏற்கனவே வழிந்தோடும் அளவைவிடக் குறைவானதுதான்! ஆனால் இதைத் தருகிறோம் என்று இப்போது வாக்குக் கொடுத்து நிரந்தரமாக தமிழ்நாட்டை அடிமைப்படுத்தும் விதமாக ஒரு கையெழுத்தை வாங்கிக் கொண்டார்கள். நாளைக்கு இறுதித் தீர்ப்பு வந்தால்கூட அதை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று அவர்கள் சொல்லலாம்.. இந்த சூழ்ச்சி வலையில் கலைஞர் வலியப் போய் மாட்டிக் கொண்டார்.

***30 ஆண்டுகாலப் பிரச்சனைக்கு தீர்வு கிட்டிவிட்டதாகப் புளுகுகிறார்கள்!***

30 ஆண்டுகாலப் பிரச்சனைக்கு தீர்வு கிட்டிவிட்டதாகப் புளுகுகிறார்கள். 30 ஆண்டு காலமாக கர்நாடகம் செய்து வந்தது அக்கிரமம். நாம் இருவரும் சமமாக நின்று போரிடவில்லை. தமிழ்நாடு பசுமாடு போல நின்று கர்நாடகம் கொடுத்த அடியை எல்லாம் அமைதியாக வாங்கிக் கொண்டது. குறைந்தபட்சமாக, "இறுதித் தீர்ப்பு வந்ததும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்!" என்ற உறுதிமொழியையாவது நாம்



படிப்பகம்

www.padippakam.com

கர்நாடகத்திடம் வாங்கியிருக்கிறோமா, என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டும்!

1991 திசம்பர் மாதத்தில் தமிழர்கள் அடி பட்டார்களே, கொல்லப்பட்டார்களே! அதற்கு இழப்பீடாக நாலு காசு இன்றுவரை கிடைத்திருக்கிறதா? இல்லையே!

1892, 1924 ஆகிய ஆண்டுகளின் ஒப்பந்தங்கள் உயிரோடு இருக்கின்றன. எந்த நயன்மை மன்றத்திற்குப் போனாலும் நாம் வெற்றி பெறுவோம். அந்த ஒப்பந்தங்களை அவர்கள் இன்று ஏற்றுக் கொள்வார்களா?

கர்நாடகம் ஒரு பெரிய நீர்மின் திட்டத்தைக் கட்டி வருகிறது. அது வந்தால் தமிழகத்தில் குறுவைக்குப் பேரிடர் வரும் என்று கலைஞருக்கு ஆதரவான உழவர் கழகங்களின் தலைவர்களே சொல்கிறார்கள். அதை நிறுத்துமாறு கலைஞர் வாக்குறுதி வாங்கினாரா?

மேக்கேதாட்டில் அணைக்கு அடிக்கல் நாட்டி வேலையைத் தொடங்கி விட்டார்களே! அதை இவர் நிறுத்தத் துணிகிறாரா?

தமிழகத்திற்கு 205 நூ.கோ.க.அ. நீர் தருகிறோம் என்று சொல்லிவிட்ட போதிலும் 26 இலக்கம் குறுக்கத்திற்கு வேளாண்மையை விரிவுபடுத்த எல்லா ஏற்பாடுகளையும் செய்கிறார்கள். அதை நிறுத்த வாக்குறுதி வாங்கினாரா?

ஒப்பந்தத்தை மீறி தொலைவான நகரங்களுக் கெல்லாம் 20.000 கோடிச் செலவில் நான்கு திட்டங்களைப் போட்டு காவிரி நீரை உறிஞ்சி எடுத்துச் செல்கிறார்கள். சட்டபடி என்றால், தமிழ்நாட்டின் ஒப்புதலோடுதான் இதைச் செய்ய முடியும். ஆனால் கலந்து கூட ஆலோசிக்க வில்லை அவர்கள். இதை ஒழுங்குபடுத்த முடிந்ததா? இதையெல்லாம் செய்யாமல் எப்படி பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வந்ததாக இவர்கள் பேசுகிறார்கள்?

சிவசங்கர் நீர் வீழ்ச்சிக்குக் கீழே இரண்டு முறை நீர்மின் திட்டத்திற்கு முயற்சி செய்தார்கள். நான் தில்லி நயன்மை மன்றத்தில் வழக்கு பதிவு செய்ததும், "கட்டவில்லை" என்று எழுதிக் கொடுத்தார்கள். இப்போது தெற்கில் மறுபடியும் செய்கிறார்கள். இதைத் தடுக்க முடிகிறதா? ஏதாவது ஒரு சூழலை ஏற்படுத்தி காவிரியை கபளீகரம் செய்ய முயல்கிறார்கள்.

"குறுவையை விட்டுவிடுங்கள்!" என்று நம்மிடம் தைரியமாகப் பேசுகிறார்கள். ஒரு மாநிலம் மற்றொரு மாநிலத்தைப் பார்த்து இப்படிப் பேச முடியுமா? நாம் கோழைகளாகவும் போராளிகளாக இல்லாததால்தான் இப்படி நடந்து கொள்கிறார்கள். கருணாநிதியை எப்படியாவது மடக்கிவிடலாம் என்ற நம்பிக்கையில்தான் இப்படி துணிந்து பேசுகிறார்கள், செயல்படுகிறார்கள்.

இடைக்காலத் தீர்ப்பை இவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. நடுவர் மன்றத்தையே இவர்கள் முதலில் ஏற்றுக் கொள்ளவில்லை! என்று இவர்களது சட்ட மன்றத்திலேயே தீர்மானம் நிறைவேற்றினார்கள். பின்பு திடீரென அந்த நிலையை மாற்றிக் கொண்டார்கள். ஏனென்றால் தமிழகம் நடுவணரசுக்கு நெருக்கடி கொடுத்து பிரச்சனை தீவிரமாவதைத் தடுக்க நடுவர் மன்றத்தில் கலந்து கொள்கிறார்கள். ஆனால் கலந்து கொண்டு இழுத்தடிப்பது, காலம் தாழ்த்துவது, ஒத்துழையாமல் இருப்பது என்ற உத்திகளைக் கையாண்டு தங்களுக்குச் சாதகமாக அந்த இடைப்பட்ட காலத்தில் எல்லாவற்றையும் செய்து கொண்டார்கள்.

இப்படி ஏழு முகாமையான பிரச்சனைகளுக்குத் தீர்வு எட்டாமல், 30 ஆண்டு காலப் பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டோம் என்பது எவ்வளவு மோசமானது என்பதை நாமனைவரும் புரிய வேண்டும்.

### பழைய திட்டத்திற்கும் புதிய திட்டத்திற்கும் உள்ள வேறுபாடுகள்.

- முன்பு அமைக்கப்பட்ட குழுவானது தொழில் நுணுக்க வல்லுனர்களைக் கொண்ட ஒரு அமைப்பு. இப்போது இருப்பது ஒரு அரசியல் அமைப்பு.

- முன்பு உள்ளது நடைமுறைக்குச் சாத்தியமான ஒன்று. இப்போது உள்ளது சாத்தியம் இல்லாத ஒன்று. தஞ்சையில் நெல் காய்கிறது என்றால் 'பரத கண்டத்தின்' நான்கு மூலைகளிலிருந்தும் நான்கு முதல்வர்களை வரவழைத்து, ஆஸ்திரேலியாவிலோ அமெரிக்காவிலோ சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் தலைமை அமைச்சரைக் கொண்டு வந்து அதன் பிறகு கண்காணிப்புக் குழுவினுடைய பரிந்துரைகளைக் கேட்டு ஒரு முடிவு எடுப்பதற்குள் நெல், காய்ந்து கருகிப் போய்விடும்.



படிப்பகம்

❁ முந்தைய அமைப்பில் தொழில் நுணுக்க அறிஞர்கள் உடனிருப்பார்கள். இதில் தனியாக ஒரு கண்காணிப்புக் குழுவாக அதிகாரமற்ற முறையில் வெறும் பரிந்துரைகளை மட்டும் வைக்க இருப்பார்கள்.

❁ யாராவது சட்டத்தை மீறினால் அணையினைப் பராமரிக்கும் உரிமையை பழைய குழு எடுத்துக் கொள்ளலாம். இப்போது அது முடியாது. நடக்க முடியாத 5 பேரும் ஒன்றாக சேர்ந்து நடக்க முடியாது.

❁ முன்பு அமைக்கப்பட்ட குழுவுக்கு அணைகளைப் பார்வையிட அதிகாரம் இருந்தது. இப்போதையக் குழுவுக்கு அந்த அதிகாரம் கிடையாது.

❁ மிக முகாமையான வேறுபாடு என்றவென்றால் (குச்ரால் காலத்தில்) இறுதித் தீர்ப்பு வரும்வரை இடைக்காலத்தில் கொடுத்த தீர்ப்புதான் நடைமுறைப் படுத்தப்படும். இப்போது அப்படி எந்த ஒரு கட்டாயமும் இல்லை. குச்ரால் காலத்தில் 11.2 இலக்கம் குறுக்கம் நிலத்திற்கு மேல் கர்நாடகம் வேளாண்மை செய்யக் கூடாது என்று இருந்தது. ஏனெனில் கர்நாடகம் அதிகரித்தால் நிரந்தரமான தமிழர்நாட்டு ஆயக்கட்டுக்கு இடர் ஏற்படும் என்பதால்தான்!. ஆனால் இப்போது அது 16 இலக்கமாக மாற்றிவிட்டது. அதை 26 இலக்கமாக மாற்றுவோம் என்று அடித்துப் பேசுகிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த இப்போது எந்த வழியும் இல்லை.

❁ முன்பு குழுவிலுள்ளவர்களின் பெரும்பான்மை வாக்கு அடிப்படையில் நடைமுறை உறுதி செய்யப்படும். இப்போது அனைவரும் சேர்ந்துதான் ஒரு முடிவு எடுக்க முடியும். ஒருவர் மாறுபட்டாலும் கவிழ்ந்துவிடும். பாண்டிச்சேரி முதல்வர் மற்ற மூவரும் ஒப்புதல் கொடுத்த ஒரு திட்டத்தைத் தடுத்துவிடலாம். கர்நாடகம் கட்டாயம் தகர்க்கத்தான் போகிறது.

---

**கலைஞர் கையெழுத்திட்டார் என்பது, காவிரி தொடர்பாக மூன்றாவது முறையாக அவர் செய்யும் மிகப் பெரிய இரண்டகமாகும்**

---

இதுவரை எதையுமே மதிக்காத கர்நாடகம் இப்போது மட்டும் ஒத்துழைக்கவா போகிறது? கலைஞர் முந்தைய திட்டத்தில் இருந்த "பெரும்பான்மையோரின் கருத்து ஏற்கப்படும்!" என்கிற பிரிவை வெகுவாகப் பாராட்டினார். இப்போது அரவம் இல்லாமல் அதை விட்டுக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறார்.

ஆக கலைஞர் கையெழுத்திட்டுவிட்டு வந்திருக்கிறார் என்பது அவர் தான் சொன்னதற்கு மாறாகச் செய்தார் என்பது மட்டுமல்ல, தனது உளச்சான்றுக்கு எதிராகச் செய்தார் என்பது மட்டுமல்ல தமிழக மக்களுக்கு எதிராக காவிரி தொடர்பாக மூன்றாவது முறையாக அவர் செய்யும் மிகப் பெரிய இரண்டகம் என்று நாம் சொல்லலாம்.

இவ்வளவும் நடந்த பிறகு, பித்தலாட்டக்காரர்களும், விவரம் தெரியாத ஏட்டாளர்களும், கலைஞர் போன்ற பித்தலாட்டமான பரப்பலாளர்களும் பொய்களைச் சொல்லி மக்களை ஏமாற்றுகிறார்கள். கர்நாடகம் நயவஞ்சகத்தோடு நடந்து எல்லாரையும் ஏமாற்றி விட்டது. நடுவணரசு ஒருதலைப்பட்சமாக நடந்து கொண்டுள்ளது. கலைஞர் தன்னுடைய வாழ்நாளின் இறுதி காலத்திலும் தமிழகத்திற்கும், காவிரிக்கும் இரண்டகம் செய்வதை விடவில்லை என்றே ஆணித்தரமாக நாம் எடுத்துச் சொல்லலாம்.

### காவிரியும் பேராயக் கட்சியும்

பழைய பேராயக் கட்சியோ, புதிய பேராயக் கட்சியோ கர்நாடகத்திலுள்ள பேராயக் கட்சிக்காரர்கள், 1960களில் தொடங்கி நாளதுவரை காவிரி கர்நாடகத்துக்கே சொந்தம் என்ற கொள்கையை விதைத்ததன் வழியாக தற்போது கர்நாடகத்து அனைத்துக் கட்சிகளும், அமைப்புகளும் அதை ஏற்று, "தமிழ்நாட்டிற்கு ஒரு சொட்டுத் தண்ணீரும் தர மாட்டோம்!" என்பதைத் தாரக மந்திரமாக்கி விட்டார்கள்.

உலகநாடுகளுக்கு இடையிலான நயன்மைகளையெல்லாம் காற்றிலே பறக்கவிட்டு ஒப்பந்தங்களை மதியாமல் தூக்கி எறிந்துவிட்டு "அவை காலங்கடந்து விட்டன!" என்ற பொய்யையும் பரப்பி வருகிறார்கள்.

சட்டம், ஒப்பந்தம், உச்ச நயன்மை மன்றத் தீர்ப்புகள், நடுவர் மன்றக் கட்டளைகள் அனைத்தையும் மீறிக் கர்நாடகம் ஒரு தனிநாடு போலச் செயல்பட அவர்கள் தலைமை தாங்கி நிற்கிறார்கள்.

மெல்ல மெல்ல தமிழர்கள் மீது வெறுப்பை வளர்த்து இறுதியில் 1991 திசம்பர் திங்களில் ஒரு இனப்படுகொலையையும் நடத்திக் காட்டினார்கள். இவ்வளவையும், அவர்கள் தங்களைத் தேசியவாதிகள் என்றும், இந்தியர் அனைவரும்

www.padippakam.com

சமம் என்றும் தாங்கள் "அகிம்சாவாதிகள்!" என்றும் கூறிக்கொண்டு கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை, சொத்து அழிப்பு, தீ வைத்தல் போன்ற அட்டூழியங்களை நடத்திவிட்டு இறுதியில் இவைகளுக்கெதிராக ஒரு வழக்குகூடப் பதிவு செய்யாமல், கர்நாடக(ப் பேராயக்கட்சியின்) அரசு விட்டுவிட்ட நிலையையும் காண்கிறோம்.

சட்டத்தை மீறியும், ஒப்புதல் இல்லாமலும் அவர்கள் போட்டுள்ள திட்டப்படிக்கான அணைத் திட்டங்கள் முழுவதையும் நிறைவேற்றி விட்டால் கி.பி. 2000 வாக்கில் காவிரி காயக்கூடிய சூழலை பேராயக் கட்சிக்காரர்கள் செய்துள்ளனர். இதில் ஞாய ஓர்மை படைத்தவர்களோ அல்லது பிற கட்சிக்காரர்களோ மாற்று எதுவும் பேச இயலாதபடி கர்நாடக மக்களைத் தமிழர் மீது வெறி கொள்ளச் செய்யும் அளவுக்கு ஆளாக்கிவிட்டார்கள். இது கர்நாடகப் பேராயக் கட்சிக்காரர்கள் தமிழர் நாட்டிற்குச் செய்த கொடுமைகளின் சுருக்கம்.

இத்தனைக் கொடுமைகளையும் அவர்கள் செய்வதைச் சாத்தியமாக்கித் தந்தது அனைத்திந்தியப் பேராயக் கட்சித் (காங்கிரசுத்) தலைவர்களாவர். முகாமையாக இந்திராகாந்தி செய்த பழிதான் அதிகம்!. அகவை முதிர்ந்த சிண்டிகேட் நிசலிங்கப்பாவைக் கவிழ்த்துவிட்டு இண்டிகேட் ஆட்சியைக் கொண்டுவர இந்திரா காந்தியே சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டார். அணைக்கட்டுக்களுக்காக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட கர்நாடக அரசுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஏழரைக் கோடி ஒதுக்கினார். கலைஞரை நெருக்கி உச்ச நயன்மை மன்றத்தில் இருந்த காவிரி வழக்கை 1971இல் திரும்பப் பெறச் செய்தவரும் அவரே. அன்று முதல் 1990 வரை உரையாடல் நாடகம் ஆடுவதற்குப் பின்னணியில் இருந்தவரும் அவரே! கர்நாடகத்தில் தங்களது ஆட்சியை நிலைக்கச் செய்யவேண்டும் என்பதற்காகவே தமிழர் நாட்டிற்கு எதிராகத் தொடர்ந்து காவிரிப் பிரச்சனையில் கர்நாடகத்திற்கு ஆதரவாக இந்திரா முதல் இன்றையத் தலைவர்கள் வரை நடந்து வருகிறார்கள்.

இத்தனைக்கும் உறுதுணையாக, தமிழகத்திற்கு இரண்டகம் இழைத்து வருபவர்கள் தமிழர்நாட்டு பேராயக் கட்சிக்காரர்கள்தான்! காவிரிப் பிரச்சனை முற்றும் பொழுதெல்லாம் இங்கு குறுக்குச் சால் ஓட்டுவார்கள். அனைத்திந்தியக் காங்கிரசு தலைமையின் வழிகாட்டுதலோடும் உதவியோடும் அவர்கள் தமிழர்நாட்டில் காவிரி பற்றிய உரிமை ஓர்மை வராமல் தடுக்க அவ்வப்போது ஆற்றிய செயல்கள் பல!

## தமிழர்நாட்டு பேராயக் கட்சிக்காரர்கள் காவிரிச் சிக்கல் முற்றும் பொழுதெல்லாம் குறுக்குச் சால் ஓட்டுவார்கள்!

இருபது ஆண்டுக் காலம் "உரையாடல் நாடக" முடிவில், "உரையாடல் வழியாகத்தான் தீர்க்க வேண்டும். நடுவர் மன்றம் தேவையில்லை!" எனக் கூறிவந்த கருணாநிதியே மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது, கர்நாடகம் உரையாடலுக்குக் கொக்காணி காட்டுவதைப் புரிந்து கொண்டு நடுவர் மன்றம் கோரத் தொடங்கியவுடன், தமிழகத்தில் கர்நாடக மற்றும் மத்தியப் பேராயக் கட்சியின் மீது தமிழர்களுக்குக் கோபம் வராமலும், காவிரிப் பிரச்சனையைத் திசை திருப்பவும், மறைமலை அடிகள் நகர் தொடருந்து நிலையத்திற்குக் காமராசர் பெயர் சூட்ட வேண்டும் என்ற போராட்டத்தைத் தொடங்கிக் கர்நாடகத்தின் கழுத்தறுப்பை மூடி மறைத்தார்கள்.

செயலலிதா நடத்திய உண்ணாநோன்பின் போது நடுவணரசின் அமைச்சர்கள் வி.சி சுக்லா கொடுத்த வாக்குறுதி ஒன்றும் இல்லாமல் போனவுடன் தங்கள் கையாட்களை வைத்துக் கொண்டு, 'தென்னக நதிகளின் இணைப்பு, "கால்நடை"ப் பயணம், மாநாடு என்பது போன்ற ஏமாற்று நாடகங்களை ஆடினார்கள். அவ்வப்போது காவிரிப் பிரச்சனை தமிழகத்தில் தப்பித்தவறித் தலை தூக்கினால் தமிழகத்தில் பேராயக் கட்சிக்காரர்கள் குறுக்குசால் ஓட்டுவார்கள். தமிழக மக்களைத் திசை திருப்பும் முயற்சியில் இறங்குவார்கள். வெங்கடராமன் கர்நாடகத்திற்கு ஆதரவான வாசகங்களை தனது "தன் குடியரசுத் தலைவர் அண்டுகள்" என்ற நூலில் எழுதியிருந்ததைக் கண்டித்து என்றுமில்லாத் திருக்கூத்தாகத் தமிழர் நாட்டில் ஓரளவு கிளர்ச்சி வந்ததைத் திசை திருப்ப ஏதோ இராசீவ் காந்தியைப் பற்றி அவர் தவறாகச் சொல்லிவிட்டதாகக் 'குய்யோ முறையோ' எனக் கூப்பாடு போட்டுப் ஒப்பாரி பாடித் திரிகிறார்கள். இவர்களில் யாராவது ஒருவர்கூட அந்த நூலைப் படித்தார்களா என்பது ஐயமே! அதில் அவர் இராசீவைப் பற்றி நன்றாகத்தான் கூறியிருக்கிறார். பின், ஏன் இந்தக் கூப்பாடு? எல்லாம், காவிரி பற்றி தமிழர் நாட்டில் உரிமை ஓர்மை வந்துவிடக் கூடாது என்றுதான்! இதுவேதான் கடந்த 50-60 ஆண்டுகளாக தமிழர்நாட்டில் இந்திய தேசியத்தின் திருவிளையாடலாக இருந்து வந்துள்ளது.

(வேர்கள் 3:4,5 அக்.,நவ. 1998)



படிப்பகம்

www.padippakam.com

### கொயபெல்ஸ் உயிர்த்தெழுந்தார்!

"குச்ரால் காலத்துத் திட்டமே இருக்கும் சூழ்நிலையில் சிறந்தது. அதை எந்த விதத்திலும் குறையவிடக் கூடாது" என்று கலைஞர் கூறி வந்தார். உண்மை அவருக்குத் தெரியும்! தில்லிக்குப் போகுமுன் இடைக்காலத் தீர்ப்பின் வரம்புக்குள் பேசுவதாகவே அவர் கூறிவந்தார். தில்லிக்குச் சென்றவர் அவ்வாறு சொல்லிய எல்லாவற்றையும் காற்றில் பறக்க விட்டுவிட்டு 'சூழ்நிலைக் கைதியாகி' ஒரு அடிமை முறியில் கையொப்பம் போட்டுவிட்டார். இவ்வாறு தான் செய்த மாபெரும் குற்றத்தின் எதிர் விளைவுகளை அவர் அறிவார். எனவே, அதை மறைக்க தனது வாழ்நாளில் அவர் பெற்ற எல்லா பரப்பல் உத்திகளையும் கையாண்டு ஒரு பெரும் பரப்பல் புயலைக் கிளப்பினார். அது அவருக்கு நல்ல பலனைத் தந்தது. தான் ஏதோ சாதித்து விட்டதாக 6 கோடித் தமிழரையும் நம்ப வைத்தார்.

ஆனால் கன்னடர்களால் தூக்கிலே போடப்பட்டுக் குற்றுயிராய்த் தொங்கும் காவிரித்தாயின் கால்களைப் பிடித்து அவர் தொங்கி, இருந்த உயிரையும் போக்கடித்த கதைதான் அவரது தில்லிப் பயணம். இந்த மறைக்கப்பட்ட உண்மையை திருச்சியில் கூடிய உழவர்கள், தமிழகத்திற்கு வெளிச்சம் போட்டு காட்டினார்கள். "தமிழர்நாடு பிரிந்தால்தான் காவிரிப் பிரச்சனை தீரும் எனத் தமிழக உழவர்கள் கழகத் தலைவர் முனைவர் சிவசாமி முழங்கினார். பொறுப்பாரா கலைஞர்? உடனே தனது எடுபிடிகளை வைத்துத் தஞ்சையில் தனக்கு ஒரு பாராட்டு விழாவை எடுத்துக் கொண்டார். அதன் செலவு முழுவதையும் மணற் கொள்ளை அடிக்கும் ஒருவரே ஏற்றுக் கொண்டார். பார்த்தீர்களா? பசு மாட்டையடித்து செருப்புத் தானம் செய்தானாம் ஒருவன்!" அப்படி உள்ளது கதை.

ஆனால், அதன் பின்னர் தஞ்சையில் நடந்த உழவர்களின் காவிரி காப்பு மாநாடு கலைஞரின் தில்லி மோசடியை அம்பலத்திற்குக் கொண்டு வந்தது. விடுவாரா அவர்? ஏட்டிக்குப் போட்டியாக ஒன்றைச் செய்தார். காலம் கடந்துபோன செங்கல்வராயன், சி.சுப்ரமணியம், சுவாமிநாதன், வி.சி. குழந்தைசாமி ஆகியோரைச் செவ்வி கண்டு தமிழகத்திலுள்ள மூன்று தொலைக்காட்சிகளிலும் இருமுறை ஒளிபரப்பினார். அதற்கான அரசுச் செலவு ஏழு இலக்கம் உருபா!

தில்லியில் கலைஞரைப் பணிய வைத்து, புதிய திட்டத்தில் கையெழுத்து பெற்றுவிட்ட மகிழ்ச்சியில் பெங்களூருக்குத் திரும்பிச் சென்ற கர்நாடக முதல்வர் பட்டேல் மற்றும் பெரும் நீர்ப்பாசன அமைச்சர் நாகே கவுடா முதலிய அனைவரும் தங்களது தில்லி வெற்றியை பலவாறாகப் பேசி வெளிப்படையாகக் கொண்டாடினர். தமிழர்நாட்டில் காவிரிக்கு நேர்ந்த கதியை உலகுக்கு அறிவித்தனர். இனி நாங்கள் திட்டமிட்டபடி 26 இலக்கம் குறுக்கங்களுக்கு நீர் பயன்பாட்டை விரிவுபடுத்தலாம் என்றும், எஞ்சியுள்ள திட்டங்கள் அனைத்தையும் முடிக்கலாம் என்றும் சிவசமுத்திரம் புனல் மின் நிலையம், மேக்கேதாட்டு திட்டத்தை மேற்கொள்ளலாம் என்றும்; இதற்கெல்லாம் தடையாய் இருந்த நடுவர் மன்ற ஆணையமும், குச்ரால் காலத்துத் திட்டமும் கலைஞர் கையெழுத்திட்டதால் தவிடு பொடியாகிவிட்டன என்றும், நயன்மை மன்றத்தை முடிவு செய்ய விட்டிருந்தால் தமிழகத்திற்கு அதிகம் கிடைத்திருக்கும் என்றும் கொட்டி முழங்கினர். ஆனால் கலைஞரோ இவைகளில் ஒன்றைக்கூட மறுக்கவில்லை! புதிய ஆணையத்தின் முடிவு எதுவும் கர்நாடகத்தின் ஒப்புதல் இன்றி முடிவு எடுக்க முடியாது என்பதை இதழ்கள் வெளிப்படுத்தின. ஆனால், அதையும் கலைஞர் மறுக்கவில்லை. ஏனெனில் அது ஒரு கமுக்கமான உடன்பாடு!

காவிரிக் கவிழ்ப்பு அலையின் இறுதியில்; கர்நாடக முதல்வரைத் தமிழக திரைப்படக் கலைஞர்கள் கலைஞருக்கு எடுத்த பவள விழாவிற்கு அழைத்திருந்தனர். அங்கும் பட்டேல் காவிரியை மறக்கவில்லை. "கர்நாடக உழவர்களை கருணாநிதி கவனித்துக் கொள்வார்! தமிழக உழவர்களை நாங்கள் கவனித்துக் கொள்வோம்!" என்று பேசினார். இதற்கு நல்ல ஒரு எ.கா. ஏற்கெனவே உள்ளது. அதாவது தமிழராம் திருவள்ளுவரைக் கன்னடர்கள் சாக்கில் சுற்றிவைத்து திறக்கவிடாமல் செய்துவிட்டனர். கன்னடரின் சர்வக்ஞரின் சிலையை சென்னையில் கலைஞரும் அவரது மகனும் பளபளப்பாக அமைத்து வருகின்றனர். இப்படித்தான் அதுவும் ஆகிறது. ஆகும்!

குச்ரால் காலத்துத் திட்டத்தை உச்ச நயன்மை மன்றத்திற்குக் கொண்டுவந்து தாக்கல் செய்யப் படாமல் இருந்த வேளையில் தமிழக சட்டப் பேரவையில் கடந்த கூட்டத் தொடர் முடியும் தருவாயில் இருந்தது. பேராசிரியர் தீரன் "அப்போது அணியமாக இருந்த திட்டத்தை உடனடியாக உச்ச நயன்மை மன்றத்திற்குக் கொண்டுவந்து நடுவணரசு தாக்கல் செய்யாததைக் குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தார். கலைஞர் வீராச்சாமியை விட்டு, "அந்தத்



படிப்பகம்

www.padippakam.com

தீர்மானமெல்லாம் இப்போது வேண்டாம்!" எனக் கூறிப் பேராசிரியரைத் திரும்ப அனுப்பிவிட்டார்.

## காவிரி குறித்து சட்ட மன்றத்தில் பேச ஒரு காலத்திலும் கலைஞர் வாய்ப்பு அளித்ததே இல்லை!

அண்மையில் நடந்த ஒரு கூட்டத்தொடரில் ஒரு தெள்ளுமணி உறுப்பினர், "பட்டேலுக்கு நன்றி கூற வேண்டும்" என்று திருவாய் மலர்ந்தருளினாராம். இத்தொடரிலும் பேராசிரியர் தீரன் அவர்கள், "கர்நாடகம் நடுவர் மன்றம் தடை விதித்திருந்தும் 11.2 இலக்கம் குறுக்கத்திலிருந்து 16 இலக்கம் குறுக்கங்களுக்கு தனது வேளாண் நிலங்களை விரிவுபடுத்திக் கொண்டது என்றும் இப்போது புதிய திட்டத்திற்குப் பிறகு மேலும் கர்நாடகம் தனது நீர்ப்பாசன நிலப்பரப்பை அதிகப்படுத்துவதை தடை செய்ய ஏதும் இல்லை!" என அறிவித்து 26 இலக்கம் குறுக்கமாக கர்நாடகம் மாற்ற முயற்சிக்கிறது என்றார். இது குறித்து அவையை ஒத்தி வைத்து உரையாடல் நடத்த வேண்டும் என்றார். ஆனால் "சிக்கல் நயன்மை மன்றத்தில் உள்ளது!" என்றெழுதி திரும்பித் தந்துவிட்டார்கள்.

ஆக, காவிரி குறித்து சட்ட மன்றத்தில் பேச ஒரு காலத்திலும் கலைஞர் வாய்ப்பு அளித்ததே இல்லை! ஆனால் கர்நாடகத்தில், "நடுவர் மன்றத்தையே இந்த அவை ஒத்துக் கொள்ளவில்லை எனவும், அதன் தீர்ப்புகளும் கர்நாடகத்தைக் கட்டுப்படுத்தாது!" எனவும் வெளிப்படையாகவே தீர்மானம் போட்டுள்ளது அம்மாநிலத்தின் சட்டமன்றம். (வேர்கள் 3:6 டிசம்பர் 1998)

## சில ஆட்களும் சில நிகழ்வுகளும்

1980 லிருந்து 1990 வரை காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்தது சராசரி மழையே. அதனால் அதுவரை கர்நாடகம் இசைவின்றி சட்டத்திற்குப் புறம்பாக கட்டியிருந்த அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்களைத் தாண்டி தமிழர்நாட்டின் காவிரிப் பாசனப் பகுதிக்கு நீர் வந்து சேரவில்லை. காவிரி நதிநீர்ப்பரப்பு முழுவதும் மரம் செடி கொடிகள் வளர ஆரம்பித்துவிட்டன. தஞ்சையில்கூட பஞ்சமும் பட்டினிச் சாவுகளும் நிகழ்ந்தன. இருப்பினும் சராசரித் தமிழனுக்கு இது எப்படி நிகழ்ந்தது என்று கேட்கத் தெரியவில்லை. தமிழர்நாட்டின் தலைவர்கள் என்பவர்கள் அப்போதும் சரி, அதற்கு முன்னரும் சரி அதற்குப் பின்னரும் சரி தமிழக மக்களுக்கு காவிரி உரிமை பற்றிய நடப்புக்களை - உண்மைகளை - தெரிந்தும் சொல்ல முன்வந்தது இல்லை. அது நாயர் பிடித்த புலிவாலின் கதையாகிவிடும் என்பது அவர்களது அச்சம். கருணாநிதியோ பிரச்சனையைத் திசைதிருப்பி தமிழகத்தைக் குழப்புவதிலேயே அன்றிலிருந்து இன்றுவரை மும்முரமாக இருக்கின்றார்.

1990-91-92 ஆகிய ஆண்டுகளில் நாமாவது ஏதாவது செய்ய வேண்டும் என நான் சில முயற்சிகளை மேற்கொண்டபோது சந்தித்த ஏமாற்றங்களும் அதிர்ச்சிகளும் அதிகம். 1986 இல் தஞ்சைப் பகுதியில் காவிரியின் கதியைப் பற்றி நான் ஒருமுறை தொடர்வண்டியில் பேசிக் கொண்டு வந்தபோது திடீர் என ஒரு ('இந்தி'ய) தேசியவாதி, "எல்லாம் உங்கள் திராவிடக் கட்சிகளால் வந்த கேடுகள்தான்" என்று கூறி கத்திப்பேசினார். தமிழர்நாட்டின் அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை காவிரி என்பது ஒரு கட்சி அரசியல் பிரச்சனையே தவிர அது நம் நாட்டின் உரிமைப் பிரச்சனையாக இருந்ததில்லை. சில கல்லூரிகளில் குறிப்பாக அங்குள்ள ஆசிரியர்களின் நடுவில் காவிரி குறித்துப் பேச முயன்றோம். அவர்கள் யாரும் வாய்ப்பு அளிக்கவில்லை. பள்ளிகள் பலவற்றிலும் அப்படியே! கீழ்பவானி வேளாண் உழவர் கழகத்தில் இருமுறை அதிகமான விளத்தங்களோடு காவிரியைக் காக்க வேண்டிய அவசியமென்ன என்பது குறித்து உணர்ச்சியைக் கொட்டி பேசினேன். காவிரியைக் காக்காவிட்டால் கீழ்ப்பவானி பாசனத்திற்கும் சிக்கல் உள்ளது என்று எடுத்துச் சொன்னேன். அவர்கள் நான் கூறியது எதையும் காதில் வாங்கிக் கொள்ளாதது மட்டுமல்லாமல் அதில் ஒருவர் "இதையெல்லாம் போய் தஞ்சாவூர் உழவர்களிடத்திலே கூறுங்கள்" என்று கூறிவிட்டார். பிறகுதான் அவர் திரு. நா. மகாலிங்கம் என்பவரின் ஆள் என்றும், பல்ராம் சாக்கர் தலைமையில் உள்ள பாரத் கிருசிக் சமாச்யைச் சேர்ந்தவர் என்றும், காவிரிச் சிக்கல் வந்தபோதெல்லாம் தில்லியில் இருந்துகொண்டு குறுக்குச்சால் ஓட்டுபவர்களில் ஒருவர் என்பதும் தெரியவந்தது.

மன்னார்குடி இரெங்கநாதன் (ஐயங்கார்) என்பவர் காவிரி குறித்து அறிக்கை விட்டுக் கொண்டிருக்கும் ஒருவராவார். விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில மேல்தட்டு நில உடமையாளருள் அவரும் ஒருவர். வாயில் நுழையாத பெயரைக் கொண்ட ஒரு மடலேடு (லெட்டர்பேட்) அமைப்பை வைத்து இருப்பவர். மக்கள் இயக்கம் கட்டுவதிலும், போராடுவதிலும் நம்பிக்கையற்றவர் மட்டுமல்ல! அதற்கு எதிரானவரும்கூட. 1971 இல் கலைஞர் இந்திரா காந்திக்கு அடங்கி உச்ச நயன்மை மன்றத்திலிருந்த வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொண்டதற்குப் பிறகு 12 ஆண்டுகள் உரையாடல் என்பது வீணானவுடன் காவிரிப்பாசன உழவர்கள் பயந்துபோய் அரசியலாளிகளை நம்பாமல்



படிப்பகம்

www.padippakam.com

தாங்களே உச்ச நயன்மை மன்றத்தில் ஒரு வழக்குத் தொடுக்க முயன்றார்கள். அதை முன்னிட்டு திரு. பொன்னுச்சாமி என்பவர் தானாக முன்வந்து தாராளமாக 40 ஆயிரம் உருபாவை நன்கொடையாக அளித்தார். ஆங்கிலம் தெரிந்தவராதலால் திரு. இராமநாதனிடம் வழக்கிடும் பொறுப்பு ஒப்புக்கொடுக்கப்பட்டது. மற்றபடி அவர் தன் கைக்காசை செலவழித்த வரலர். கடந்த 7-8 ஆண்டுகளிலும் நடந்த காவிரி தொடர்பான குழுக்கூட்டங்களில் கர்நாடகா சார்பாகவே தந்திரமாகப் பேசுவார். கர்நாடகத் தலைவர்களின் சிறப்பையும் எடுத்துச் சொல்லாத கூட்டமில்லை. சில நேரங்களில் "தன்னைக் கர்நாடகச் சார்பானவர்!" என்று பிறர் சொல்வதாகவும் அவரே கூறுவார். இவர்தான் கலைஞருக்குக் காவிரிச் சிக்கலில் உழவர்கள் சார்பில் கிடைத்த ஒரே தலைவர்!

காவிரி பற்றிப் பேசுகின்ற இன்னொரு அமைப்பு காவிரித் தீர உழவர்கள் கழகமாகும். (காவிரி டெல்டா விவசாயிகள் சங்கம்) இதன் உறுப்பினர்கள் யாரென்றால் சில மேல்தட்டு நில உடமையாளர்களே ஆவார்கள். ஐந்து அல்லது ஆறு பேர் கூடி ஏடுகளின் உதவியோடு அறிக்கை விடுவதுமட்டுமே அவர்களது வேலை. 1993 இல் அந்தக் குழுக் கூட்டத்தில் கர்நாடக அரசு, நடுவர் மன்றத் தீர்ப்பை மீறுவது குறித்து (11.2 இலக்கம் குறுக்கம் நிலத்திற்கு மேல் பாசன விரிவாக்கம் செய்யக்கூடாது என்று நடுவர் மன்றம் தடுத்திருந்தது.) நான் பெரிதும் எடுத்துரைத்து கர்நாடக அரசுக்கு எதிராக நயன்மை மன்ற அவமதிப்பு வழக்கு ஒன்று தொடர வற்புறுத்தினேன். அது தீர்மானமாகவும் நிறைவேற்றப்பட்டது. ஆனால் செயல்படுத்தப் படாமல் கிடத்தப்பட்டது. ஆனால் தமிழக அரசுக்கும் அதன் தவறான முடிவுகளுக்கும் ஒத்துப் பாடி அறிக்கை மட்டும் தவறாமல் விடுவாகள். அநதக கழகத்தின் (சங்கத்தின்) தலைவர்கள் சிலர் காவிரி மணலை அடியோடு கொள்ளை அடிக்கும், கலைஞருக்கு வேண்டப்பட்ட ஒரு மணல் கொள்ளையனிடம் சென்று நன்கொடை பெற்று வந்தார்கள் என்றால் இவர்களின் காவிரி காப்புச் சிந்தனை எவ்வளவு ஐயத்திற்கிடமானது!

மேற்சொன்ன தலைவர்களுக்கும், அமைப்புகளுக்கும் காவிரி பற்றியச் சிக்கலில் சிறந்த ஆய்வாளர்களாகத் தென்படுபவர்கள் கலைஞரின் தனி உதவியாளர் குகனும் (இப்போது அவர் இல்லை) 'இந்து' ஏட்டின் இராம் என்பவரும்தான். திருச்சியில் 1993 இல் நடந்த காவிரி மாநாட்டில் தலைமை தாங்கிய முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதன் அவர்கள் இராம் பேசும்போது கோபமடைந்து, "என்ன பேசுகிறான் அவன்?" என்று குரலெழுப்பினார். இந்த இராமும், குகனும், இரெங்கநாதனும் கலைஞருக்கு காவிரி பற்றிய சகுனி ஆய்வாளர்கள்!

ஒரு செய்தி! காவிரி தீர உழவர் கழகத் தலைவர்களைப் பொறுத்தவரை தனிப்பட்ட முறையில் பேசும்போது காவிரிக் காப்புக் குழுவின் கருத்தை முற்றிலும் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் அவர்கள் தங்களின் தனி நலன் கருதி அரசுக்கு ஒத்து பாட வேண்டியுள்ளது. அதே சமயம், குளித்தலை திரு. கோபால தேசிகன், அரியலூர் திரு. வீரராக்வன் போன்றோர் காவிரி காப்புக் குழுவின் பாதையில் கறாராக இருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். ஆனால் மற்றவர்களையோ, ஏழு, எட்டு ஆண்டுகள் முயற்சிக்குப் பிறகும்கூட காவிரிச்சிக்கலை தமிழ்நாட்டின் உரிமை என்ற கோணத்தில் பார்க்க வைக்க முடியவில்லை. மாறாக அதை உழவர்களின் சிக்கல் என்று அழைப்பதை, விட மறுக்கிறார்கள்.

சென்னையில் 1992 இல், முதலில் காவிரி காப்பு மாநாடு நடத்துவதில் பங்கு வகிக்க திரு. சி. சுப்பிரமணியம் அவர்களை அழைக்கச் சென்றேன். இதற்காக அவருக்கும் எனக்கும் உறவுள்ள ஒரு பெரிய வழக்கறிஞரை அழைத்துச் சென்றேன். அவரோ, "இதுதான் நடுவர் மன்றத்தில் இருக்கிறதே அரசு கவனித்துக் கொள்ளும்!" என்றார். நான், "இடைக்கால ஆணையை கர்நாடகம் தூக்கி எறிந்து விட்டது! நடுவணரசும் அதற்கு வாலாக இருக்கிறது" என்றேன். "அப்புறம் இந்தியா என்று ஒன்று எதற்கு?" என்று கேட்டுவிட்டு தன்னால் வர இயலாது என்றும், ஊட்டிக்குப் போவதாகவும் கூறினார். ஆனால், காவிரி காப்புக் குழு கூட்டிய மாநாட்டிற்கு எதிராக நா.மகாலிங்கம் ஏற்பாட்டில் முனைவர் உதயமூர்த்தி கூட்டிய, காவிரி தொடர்பான ஒரு மாநாட்டில் அவர் கலந்து கொண்டார். அது நாம் கூட்டிய மாநாட்டுக்கு நான்கு நாள்கள் முன்பாக நடந்ததாகும்.

இனி, காவிரிச் சிக்கலில் தமிழர் நாட்டுக்கு எதிராகக் குறுக்குச் சால் ஓட்டும் சிலரைப் பற்றி பார்ப்போம். (வேர்கள் 3:8 மாசி 1999)

கன்னடர்கள், மிகப் பெரும் மழைக்காலம் நீங்கலாக உள்ள ஆண்டுகளில் காவிரியிலும் மற்றும் அதன் துணை நதிகளிலும் தங்கள் எல்லைக்குள் ஓடும் நீர் அனைத்தையும் முற்றாக அணைகள் கட்டித் தேக்கிவிடுவது என்ற எண்ணத்தில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்கள். தமிழகத்தில் குறுவை மகசூலை ஒழித்துவிடுவது என்பதும் அதன் திட்டம். அந்த நோக்கங்களை நோக்கி இதுவரை 50 முதல் 60 விழுக்காடுக்கு மேல் செயல்பட்டுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

தொடர்ந்து இறுதி இலக்கை நோக்கிச் செயல்படுகின்றனர்.

எனவே, 1991 முதல் இதுவரை ஓரளவு நல்ல மழையும் ஓரிரு ஆண்டுகளில் கனத்த மழையும் பெய்திருந்தும்கூட தமிழர் நாட்டில் குறுவைப் பயிருக்கு நீரில்லாமல் தடுமாற்றம் ஏற்படும் அளவிற்கு கர்நாடகத்தினால் செய்ய முடிகிறது. அம்மாதிரி நேரங்களில் காவிரிப் பாசனப் பகுதியில் எழும் கூக்குரலை திசைதிருப்பப் பலரும் தமிழகத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். அவர்களில் சிலர் தங்கள் தேசீய அரசியலுக்கு, "காவிரியில் தமிழக உரிமை" என்று குரல் எழுப்புவது கெடுதல் என நினைப்பவர்கள். வாழப்பாடி இராமமூர்த்தி அவர்களில் ஒருவர். மறைமலை அடிகள் நகர் தொடர்வண்டி நிலையத்திற்கு காமராசர் பெயரைச் சூட்ட அவர் தமிழர் நாடு பேராயக் (காங்கிரஸ்) கட்சித் தலைவராக இருந்தபோது நடத்திய கிளர்ச்சி அத்தகையச் செயல்களில் ஒன்று.

திரு. தா. பாண்டியன், காவிரிக்காகக் கால் நடைப் பயணப் பரப்பல் என்று போனது உண்டு. அதுவும் நீர்ச்சிக்கல் எழுந்த நேரத்தில்தான். சுக்காலியூரிலிருந்து சுண்டக்காம்பாளையம்வரை தமிழர்நாட்டுக்குள் கால்நடையாகப் போவது காவிரிப் பிரச்சனை தீர எவ்வகையில் உதவும்?

மருத்துவர் உதயமூர்த்தியும் அந்த ஒரு இரகத்தைச் சேர்ந்தவர்தான். அவர் காவிரி காப்புக்குழு 1993 இல் சென்னையில் நடத்திய காவிரி காப்பு மாநாட்டிற்கு சில நாள்களுக்கு முன்னதாக ஒரு போட்டி மாநாடும், நா. மகாலிங்கத்தின் தூண்டுதலால் நடந்தது என ஒரு செய்தியும் உண்டு. நடத்தியவரே பழைய நடுவணரசின் அமைச்சர் பலராம் சாக்கர்தான். அவரது அகில பாரத கிருசி சங்தான் தனது கிளை வழியாக காவிரி உரிமை உணர்வு தமிழகத்தில் தலை தூக்காவண்ணம் பார்த்துக் கொண்டனர். பழைய தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் அரூர் முத்துக் கவுண்டர் போன்றவர் களை அவர் இதற்காகப் பயன்படுத்தி வந்தார்.

மகாலிங்கம் உட்பட இன்னொரு பிரிவினர் உள்ளனர். அவர்கள் தேவையான போதெல்லாம் கங்கை காவிரி இணைப்பு, காவிரி மகாநதி இணைப்பு, காவிரி மத்திய இந்திய நதிகள் இணைப்பு என இவர்களாகப் பேசி எழுதி தற்சுகம் காண்பவர்கள். "குப்பை மேடு ஏறி கோழி பிடிக்க மாட்டாதவன் வானம் ஏறி வைகுந்தம் பார்க்கப் போகிறேன்" என்றானாம். தமிழர் நாட்டுக்குள் ளேயே வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்கு நீர் கொண்டுபோக இயலாதவர்கள் ஏதேதோ பேசுகிறார்கள்.

நதிகள் இணைப்புப் பற்றி தமிழக அரசிற்கு செயல் திட்டம் உண்டா? சம்பந்தப்பட்ட இதர மாநிலங்களுக்கு சிந்தனையாவது உண்டா? தேசியத் திட்ட ஆணையத்தில் ஏதாவது பரிந்துரைகளோ திட்டமோ உண்டா? எந்த தேசிய அல்லது பிற மாநிலக் கட்சிகள் அம்மாதிரியான பரிந்துரையைக் கூறியுள்ளார்களா? நடுவணரசுக்கு அத்தகைய கொள்கை உண்டா? ஒரு இழவும் கிடையாது. பின் ஏன் இவர்கள் இப்படி உளறி வருகிறார்கள்? தமிழகத் தலைவர்கள், குறிப்பாக கருணாநிதி காவிரிப் பிரச்சனையைச் சரியாகக் கையாளாததும், கர்நாடக அடாவடித்தனத்தையும், நடுவணரசின் ஓரவஞ்சனைப் போக்கையும் எதிர்க்காமல் தமிழக மக்களைத் திசை திருப்பும் முயற்சியிலும் அல்லது உண்மைகளை மூடி மறைத்தும் வந்ததன் காரணமாகவே; தமிழகத்தில் மேலே குறிப்பிட்ட சில 'குறுக்குச் சால்' பேர்வழிகளின் கோணல் வழிகள் எல்லாம் ஓரளவு எடுபட்டுள்ளன.

சில ஆண்டுகளுக்கு முன்னர், "தமிழகத்திற்கு ஒரு சொட்டுத் தண்ணீர்கூட தர மாட்டோம்!" என கேரளாவின் அனைத்துக் கட்சிகளும் திருவனந்த புரத்தில் கூடித் தீர்மானம் போட்டதும், அந்தக் கூட்டத்திலும் தமிழகத்திற்கு கடலுக்குள் வீணாகப் போய் விழும் 1100 கோடிக் கன அடி நீரை தமிழகத்திற்குத் தரவே கூடாது என்பதிலும், பெரியாறு அணையிலிருந்து தமிழகப் பாசனத்திற்கு நீர் வராமல் செய்வதிலும் கேரள மாக்சியக் கட்சிகள் விட்டுக் கொடுப்பதில்லை. இதுதான் அவர்கள் பேசும் உலகப் பாட்டாளிகளை மையப்படுத்திய மாக்சியம்!

கலைஞரின் வீராணம் ஊழல் காரணமாகத் தமிழகத் தலைநகர் சென்னை மக்களுக்குக் காவிரி நீர் கிடைக்கவில்லை. கலைஞர் காவிரி உரிமையை விட்டுக் கொடுக்காமல் காத்து நின்றிருந்தால் சென்னைக்கு 15 கோ.க.அடி நீரை காவிரியிலிருந்தே கொண்டு சென்றிருக்கலாம். இப்போது காவிரியின் இயல்பு வேளாண்மையைக் காப்பதே அரிதாகப் போகப் போகிறதே!

**சென்னையின் தாகம் தீர்க்க ஆந்திராவை நம்பியிருக்கும்படி நேரிட்ட அவலத்திற்கு கலைஞருக்கு மிகப்பெரும் பங்கு உண்டு.**

அல்லாமலும் இரண்டு மூன்று முறை ம.கோ.இரா. தமிழகத்தின் இரண்டாம் தலைநகராகத்



படிப்பகம்

www.padippakam.com

திருச்சியை ஆக்கத் தீவிர முயற்சியை மேற்கொண்ட ஒவ்வொரு முறையும் கலைஞர் அதை மிகக் கடுமையாகச் சாடி முறியடித்தார். ம.கோ.இராவின் திட்டப்படி திருச்சியை இரண்டாம் தலைநகராக மாற்றியிருந்தால் ஏறத்தாழ 10 முதல் 15 இலக்கம் மக்கள் தொகை சென்னையில் குறைந்திருக்கும். தென் தமிழர்நாட்டு மக்களுக்கும் தலைநகர் ஒன்று அருகில் அமைந்திருக்கும்.

மாறாக மேற்கண்ட சூழ்நிலையில் ம.கோ.இரா. தனது தொழிற் தோழன் என்.டி.இராமராவுகாருவை சென்னைக்குக் குடி நீர் கேட்கும் நிலை வந்தது. (சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகட்கு நீர் கொணரும் ஆறான நகரி ஆற்றின் குறுக்கே ஆந்திர எல்லைக்குள் தமிழகத்திற்குத் தகவல் இல்லாமலேயே ஆந்திர அரசு ஒரு அணையைக் கட்டி நீரைத் தேக்கி விட்டதும் சென்னை நகரின் நீர்ப் பிரச்சனைக்கு ஒரு கரணியம் என்பர்.)

தலைநகர் சென்னையின் தாகம் தீர்க்க ஆந்திராவை நம்பியிருக்கும்படி நேரிட்ட அவலத்திற்கு கலைஞருக்கு மிகப்பெரும் பங்கு உண்டு. எதிர்காலத்தில் சென்னை மக்கள் பல துன்பங்கட்கு ஆளாக நேரிடும் என்பதற்கான அறிகுறிகள் இப்போதே உண்டாகிவிட்டன.

1. செயலலிதாவின் கடைசி ஆண்டு அதிகார காலத்தில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, தமிழகத்திடம் மின்சாரம் கேட்டார். "தமிழகத்திற்கே பற்றாக்குறை உள்ளது" எனக் கூறி, செயலலிதா, ஆந்திராவுக்கு மின்சாரம் தர மறுத்துவிட்டார். "அப்படியானால், நான் சென்னைக்கு நீர் தர மாட்டேன்!" என்று நாயுடு கூறினார். (அப்போது, மூன்று கோடிக் கன அடி தண்ணீர் வெள்ளோட்டமாகத் தருவதாக இருந்தது.)

2. சென்ற மாதம் ஐதராபாத்தில் நடந்த ஆந்திரப் பிரதேச இந்திரா பேராயக்கட்சியின் (காங்கிரசுவின்) மாநிலக் குழுக் கூட்டத்தில், "இராயலசீமா நீரின்றி வாடும்போது, தமிழர்நாட்டிற்கு எதற்காக கிருஷ்ணா நதியிலிருந்து நீர் தர வேண்டும்? பேராயக்கட்சி ஆட்சிக்கு வந்தால் சென்னைக்குத் தரும் நீரை நிறுத்திவிடும்" என பல மூத்தத் தலைவர்கள் உரக்கப் பேசினர்.

இவ்வாறாக, கலைஞரின் வீராணம் ஊழலும் காவிரி இரண்டகமும் தமிழகத் தலைநகர் மக்களின் தாகத்திற்கு நீரின்றி செய்துவிட முடியும். ஆந்திரர்கள் நினைத்தால், என்ற நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. (மேலும் வீராணத்திலிருந்து சென்னைக்கு தண்ணீர் எடுத்திருந்தால், வீராணம் பழைய நிலைக்குத் தூர் வாரப்பட்டு அதன் பழைய ஆயக்கட்டுகளைப் பாசனத்திற்குப் கொண்டு வந்து இருக்கலாம்.)

நதிகள் இணைப்புக் குறித்து நாட்டின் நடப்பு நிலையை கவனிக்காமலோ அல்லது உள்நோக்கத்தோடோ பலர் மீண்டும் மீண்டும் கூறி வருகின்றனர். (தமிழர் நாட்டின் எல்லைக்குள்!) அவர்கள் நம்மைச் சுற்றியுள்ள கேரளரும், கன்னடரும், ஆந்திரரும் நீர்ப் பிரச்சனையில் எப்படி நடந்து வருகின்றனர் என்பதை அறியமாட்டாரா? குறிப்பாக, பெரியாறு அணை, காவிரிப் பிரச்சனை குறித்து வரும் செய்திகள் அவர்களின் கண்களுக்கு படாதா? இப்போது நமக்கு முன்னுள்ள பிரச்சனை என்னவென்றால் நாம் எப்படி சட்டப்படியாக காவிரி நீர் மற்றும் பெரியாறு நீர் உரிமைகளைத் தக்க வைத்துக் கொள்வது என்பதுதான்.

கங்கை-காவிரி இணைப்பு என்பது என்ன? அதில் உள்ள சட்டச் சிக்கல் அரசியல் சிக்கல், திட்டமிடல், மாநிலங்களின் ஒத்துழைப்பு நிலவியல் பிரச்சனைகள் இப்படி ஆயிரம் சிக்கல்கள் உள்ளன. தமிழகத்தைச் சேர்ந்த சிலர் பேத்திக் கொண்டு இருப்பதைத் தவிர எங்கும் இது பற்றிய ஒரு அதிர்வும் கிடையாது.

நேரு காலத்தில், ஒரு புகழ் பெற்றப் பொறியாளர், (முனைவர் அகர்வால் என்று நினைக்கிறேன்) நேருவிடம், கங்கை-காவிரி இணைப்புப் பற்றிப் பேசியுள்ளார். இது குறித்து அறிந்த அண்ணா அவர்கள், "கங்கை-காவிரி இணைப்பு வந்தால் நான் திராவிட நாடு கோரிக்கையையே கைவிடத் தயார்!" என அறிவித்தார். ஆனால், இந்தி வட்டார நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் இணைந்து கையொப்பமிட்டு நேருவிடம், "தூய கங்கை நீரை திராவிடர்கட்குத் தரக்கூடாது" எனக் கூறிவிட்டதால், நேரு கப்சிப் ஆகிவிட்டார்.

அன்று பீடாதிபதிகள் மிரட்டியவுடன் நேரு பேச்சை நம்பி, "இந்துக்கள் அனைவருக்கும் ஒரே சட்டம்." முன்வடிவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற அறிவர் அம்பேத்கர் கொண்டுவந்த பின் அம்பேத்கரிடம் கொடுத்த உறுதியைக் காற்றிலே பறக்க விட்டுவிட்டு முன்வடிவுக்கான ஆதரவை பின்வாங்கி அறிவர் அவர்களின் காலை வாரி விட்டவர்தானே நேரு! எனவே, அறிவர் அவர்கள் சினம் கொண்டு தன் அமைச்சர் பொறுப்பைத் துறக்க வேண்டிய நிலை வரவில்லையா? அப்படிப்பட்ட நேருதான் காலமாகும்வரை அந்தப்பிரச்சனையை தொடவேயில்லை.

நேரு குடும்பம் அன்றிலிருந்து இன்று வரை தமிழகத்திற்கு இழைத்துள்ள கேடுகள் அனைத்தையும் தொகுத்தால் அதுவே ஒரு 'மகாபாரதம்' ஆகிவிடுமே! எனவே நேரு காலத்தில், புகழ் பெற்ற பொறியாளர் கே. எல்.



படிப்பகம்

www.padippakam.com

இராவு என்பவர் மீண்டும் இத் திட்டம் குறித்துப் பேசிப் பார்த்துத் தோற்றார். பிறகு 1980 இல் நந்தா அவர்கள் மாநிலங்களுக்கு **இடையேயான** நீர்த் தகராறு சட்டத்(1956)தின் **6வது விதிக்கு ஒரு** துணை விதி 6.ஏ வைச் (தற்போது நாளிதழ்களில் அடிபடும் 6 ஏ விதிதான்) **சேர்க்க** நாடாளுமன்றத்தில் ஒரு சட்ட முன்வடிவை நுழைத்துப் பேசும் போது, ஒரு தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர், கங்கை-காவிரி இணைப்பு பற்றி குறிப்பிட்டார். உடனே அமைச்சர் திரு. நந்தா, "அது அறிவியல் அடிப்படையில் நடைமுறைப்படுத்தக் கூடியது அல்ல." என்று அடித்துச் சொல்லிவிட்டார். மூன்று ஆண்டுகளுக்கு முன் கும்பகோணத்தில் பேசிய ஒரு நிலவியல் அறிஞர், இத் திட்டம் நில நூல் அறிவியல்படி நிறைவேற்ற இயலாத ஒன்று என்று கூறினார்.

சில திங்கள்களுக்கு முன்பு கரூர் வந்து, "நேருக்கு நேர்" என்ற ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அன்றைய நடுவணரசின் நிதியமைச்சர் திரு.ப.சிதம்பரத்திடம் இதுபற்றி நான் கேட்டபோது, அரங்கம் நிறைந்திருந்த கூட்டத்தாரின் முன்னே, "இது ஒரு கற்பனை!" என்று வெளிப்படையாக அறிவித்தாரே! இப்படி எத்தனையோ. ஆனால் காவிரிப் பிரச்சனையில், "போகாத ஊருக்கு இல்லாத பாதையைக் கூறும்" தமிழக நலனில் அக்கரையில்லாத கசடர்களுக்கு அதைப் பற்றியெல்லாம் என்ன கவலை?

அது சரி!, "தமிழினக் காவலர்" கருணாநிதி இதுபற்றி என்ன கூறுகிறார்? யாருக்குத் தெரியும்! அவர்தான் அது பற்றி வாயே திறப்பதில்லையே!) (வேர்கள் 3:9 பங்குனி 1999)

---

**நேரு குடும்பம் அன்றிலிருந்து இன்று வரை தமிழகத்திற்கு இழைத்துள்ள கேடுகள் அனைத்தையும் தொகுத்தால் அதுவே ஒரு மகாபாரதம். ஆகிவிடும்!**

---

கங்கை காவிரி இணைப்பு, மகாநதி காவிரி இணைப்பு முதலிய இணைப்புப் பேச்சுக் கச்சேரிகளைத் தமிழ்நாட்டில் நடத்துபவர்கள், இந்நாட்டின் காவிரி உரிமை பறிபோய்க் கொண்டிருப்பது பற்றி வாயே திறப்பதில்லை. இவர்களின் இத்தகைய பேச்சுகள் தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கு ஒரு தவறான கற்பனை ஓர்மையை ஏற்படுத்துகின்றது! காவிரி பற்றி கொஞ்ச நஞ்சம் சிந்திப்பதும் அற்றுப் போகிறது! இத்தகைய இணைப்பு குறித்து பரப்பலில் ஈடுபடுவதில் தொழில் அதிபர் மகாலிங்கம் முதன்மை வகிக்கிறார்.

கன்னடர்கள் 1991 இல் தமிழர்களைத் தாக்கிய போது வாயே திறக்காதவர். தன்னுடைய 5 கோடி உரூபா மதிப்புள்ள ஆலையைக் கன்னடர்கள் தாக்கி நொறுக்கித் தரை மட்டமாக்கிய போதும் மூச்சே விடாதவர். அண்மையில் சென்னையில் நடந்த நதி இணைப்புக் கருத்தரங்கமே முதல்வர் கலைஞரின் தூண்டுதலால் நடந்து இருக்கலாம் என்று கருதுவதில் தவறில்லை. அதில் திரு. மகாலிங்கம் முகாமையான பங்கு வகித்ததிலும் பொருள் உண்டு. அவர்தான் கலைஞருக்கு மிகவும் நெருக்கமானவர் ஆயிற்றே. கலைஞரின் பெயரால் "கலைஞர் இன்டர்நேஷனல்" என்ற ஆங்கில ஏட்டை நடத்தியவராயிற்றே அவர்! கங்கை காவிரி இணைப்பு சாத்தியம் இல்லை என்று நடுவணரசின் அமைச்சர் சோம்பா தமிழக அரசிடம் தெளிவாகக் கூறிவிட்டதைத் தமிழகச் சட்ட மன்றத்திலேயே வேளாண்துறை அமைச்சர் அறிவித்துள்ளார். இருப்பினும் இவர்கள் இந்த இணைப்பு குறித்த ஒப்பாரியை விடமாட்டார்கள். தில்லியில் கடந்த ஆகத்து திங்களில் காவிரி குறித்த ஓர் அடிமைச் சாசனத்தில் பயந்த சூழ்நிலையில் கலைஞர் கையெழுத்து இட்டு வந்ததை ஞாயப்படுத்தவும், அதைத் தமிழர்கள் மறக்க வேண்டியும் தொடர்ந்து அவர் சில பரப்பல் உத்திகளைக் கையாளுகிறார். காவிரி நடுவர் மன்ற ஆணை சூன் முதல் அடுத்த மே வரை 12 மாதத்திலும், மாத வாரியாகவும் கிழமை(வார) வாரியாகவும், கர்நாடகம் தமிழகத்திற்கு நீர் விட வேண்டும் என்பதாகும். கருணாநிதியோ சென்ற திசம்பரிலேயே "205 நூ.கோ.க.அடி நீர் வந்துவிட்டது" என்று காவிரி தொழில் நுணுக்க அமைப்பின் தலைவர் பொறியாளர் மோகன கிருட்டிணனை விட்டுப் பேசச் செய்தார். அது அவருடைய வேலை அல்ல. மாறாக இது கலைஞரின் தூண்டுதல் வேலை என்பது தெளிவு.

அதே போல பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் திரு. பொன்னுச்சாமியை விட்டு, இந்த ஆண்டு மேட்டூரிலிருந்து பாசனத்திற்காகக் கூடுதல் நீர் விடப்பட்டுள்ளது என பேட்டி கொடுக்கச் செய்கிறார். உண்மையில் இந்த ஆண்டுகூட காவிரியின் இயல்பான பாசனப் பரப்பு முழுவதும் தண்ணீர் பாய்ந்ததா என்று இவர்கள் சொல்ல அணியமாக இல்லை.

சென்ற ஆகற்றுத் திங்களில் தில்லியில் அறிவித்த புதிய காவிரித் திட்டம், காவிரிக்கு முடிவு கட்டிவிட்டது என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். ஆனாலும் கர்நாடக முதல்வர் பட்டேலும், தானும் கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய இரண்டையும் இணைக்கிறவர்களாக இருப்பதாக கலைஞர் கூறுகிறார். அந்த இணைப்பு ஏற்படக் காவிரி கை கொடுத்து இருக்கிறதாம். அது என்ன உதயா தொலைக்காட்சி இணைப்பா என்று தெரியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

கடந்த ஓராண்டுக்கு மேல் காவிரி நடுவர் மன்றத்தில் உசாவல் நடந்ததாகவேத் தெரிய வில்லை. இதற்கிடையில் நடுவர் மன்ற எல்லைக்கு அப்பால் காவிரியில் நான்கு நீர் மின் நிலையங்கள் அமைக்கப்போவதாக அறிவித்து நடுவர் மன்றத்தின் மீதுள்ள நம்பிக்கையைப் பாழடிக்கிறார்கள்.

காவிரி பற்றிய புதிய திட்டமோ நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் சின்னா பின்னமாக்கி விட்டது. எந்த கட்டத்திலும் தமிழர்கள் விழிப்படையக் கூடாது என்பதில் கலைஞர் மிக விழிப்பாக இருந்து வருகிறார்.

திரு. குச்ரால் தலைமையமைச்சராக இருந்த காலத்தில் உருவாக்கப்பட்ட வரைவுத் திட்டத்தை நடுவணரசு அறிவிக்காவிட்டால் மோசமான பின்விளைவுகள் ஏற்படும் என்று சென்ற சூலை மாதத்தில் செயலலிதா எச்சரித்தார். நடுவணரசு அவருடன் பேச்சு நடத்தியது. ஆகத்து திங்களில் (தினமணி 7.4.99 ன் படி), செயலலிதா காவிரி தொடர்பான புதிய ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்தார். 13.8.98 இல் நடுவணரசிற்கான ஆதரவை அவர் திரும்பப் பெற இருந்தார். ஆனால் வாச்பேய்க்கு ஆதரவைத் தொடர்வதாக அ.தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் கூறியதை அடுத்து தனது முடிவை மாற்றிக் கொண்டார். இவ்வாறாகக் காவிரியைக் காட்டிக் கொடுப்பதில் தமிழர் நாட்டில் எந்த அரசியல் கட்சியும் ஒன்றுக்கொன்று சளைத்ததாக இல்லை என்பதுதான் பெரும் வருத்தத்திற்குரியதாகும்.

### அரசியல் கிளப்!

இறுதியாக ஒன்று! இரு மாநிலங்களுக்கு இடையில் எழும் சிக்கல்களைத் தீர்ப்பதற்காகவும், நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்றுவதில் எழும் சிக்கல்களுக்குத் தீர்வு காணவும், அரசுகளுக்கிடையான (ராஜ்யங்களுக்கு இடையேயான) நதி நீர்ப் பிரச்சனைச் (1956) சட்டத்தின் விதி 6அ வின் படி ஒரு குழு போடப்பட வேண்டும். அது பொறியாளர்களும், நிர்வாகிகளும் கொண்டதாக இருக்க வேண்டும். ஆனால் எப்படி குச்ரால் காலத் திட்டத்தை - தமிழகத்திற்கு ஞாயம் வழங்கும் ஒரு திட்டத்தை - கர்நாடகம் நடுவணரசின் உதவியோடு தூக்கியெறிந்து விட்டு உப்புக் கந்தைக்குப் பயனில்லாத தமிழகத்தின் எதிர்காலத்தைப் பாழாக்கும் புதிய திட்டத்திற்கு எப்படி கலைஞரை ஒப்புதல் அளிக்கச் செய்தார்களோ அது போல, மேற் சொன்ன குழுவும் தலைமையமைச்சர் தலைமையில் நான்கு மாநில முதல்வர்களும் கொண்ட "அரசியல் கிளப்" ஆக அமைத்துத் தமிழகத்திற்கு அநீதி செய்து விட்டனர். எதிர்பார்த்த மாதிரியே அந்தக் குழு செயல்படவில்லை. செயல்படவும் முடியாது.

அதன் முன் வந்த முதல் பிரச்சனையே நீரின் அளவை மேட்டூர் அணையில் எடுப்பதா அல்லது காவிரி நீர் தமிழக எல்லையில் நுழையும் பில்லிகுண்டுவில் எடுப்பதா என்ற பிரச்சனையில் ஒற்றுமையாகக் கருத்து ஏற்படாததால் அதை முடிவு செய்யும் பொறுப்பை அக் குழுவின் தலைவரான தலைமையமைச்சரிடம் விடப்பட்டது. அப்படி விட்டு 6 மாதங்களாகியும் ஒரு முடிவும் அவர் கூறவில்லை. இவ்வாறாக கருணாநிதி அரசியல் சட்டம் 356க்கும், ஜெயின் ஆணையத்தின் அறிக்கைக்கும் பயந்து கொண்டு கையெழுத்திட்ட திட்டமும், உருவாக்கிய ஆணையமும் இதுவரை இயங்காத ஒன்றாகவே முடிந்து விட்டது.
(வேர்கள் 3:10 சித்திரை 1999)

8.01.99 அன்று மேட்டூர் அணை மூடப்பட்டது. அப்போது அணையிலிருந்த நீரின் அளவு 74 முதல் 80 அடிகள் மட்டுமே! மேட்டூருக்கு மேலே உள்ள நீர்ப்பிடிப்புப் பகுதியில்பெய்த மழையால் சில அடி நீர் உயர்ந்துள்ளது. இன்றும் அதே அளவுடன்தான் உள்ளது! அதாவது கடந்த 4 மாதங்களாக கர்நாடகத்தின் கண்ணம்பாடி அணை மற்றும் சட்டத்திற்குப் புறம்பாகக் கட்டிய எந்த அணையிலிருந்தும் நீர் திறந்துவிடப்படவில்லை என்பது தெளிவு.

கலைஞரோ தொடர்ந்து தனது தில்லிச் "சாதனையை" உலகுக்கு அறிவிக்க, கடந்த சனவரி தொடக்கத்தில், ஒரு அதிகாரியைவிட்டு 205 நூ.கோ.க.அ. நீர் மேட்டூருக்கு வந்துவிட்டதாக அறிக்கை வெளியிடச் செய்தார். தில்லி ஒப்பந்தப்படி கன்னடர்கள் தண்ணீர் தந்தாயிற்று என்று அணைக் கதவுகளையெல்லாம் அடைத்து விட்டனர்.

நடுவர் மன்றம் நடக்கிறதாக எந்தத் தகவலும் இல்லை. கர்நாடகத்தின் சார்பாக வருகிற முதல் சான்றாளர், "காவிரி தீரம் முழுவதும் நில மட்டத்திற்கு மேல் நீர் பொங்கி வழிகிறது!" என்றார். இரண்டாவது ஆள், "காவிரி நீர் வீணாக ஆண்டொன்றுக்கு 150 நூ.கோ.க.அடி நீர் சென்று கடலில் கலக்கிறது!" என்றார். ஆக, இப்படி நடுவர் மன்றத்தில் கர்நாடகம் கண்ணாமுச்சு விளையாட்டு விளையாடுகிறது.

### தமிழர்களுக்காக கலைஞர் என்ன செய்தார்?

சிலர் வெகுளித்தனமாக, "கலைஞருக்கு மட்டும் அக்கறை இருக்காதா? அவர் தெரியாமலா எதையும் செய்வார்" என்று வினவுகிறார்கள். பாவம், அவர்கள் அறியார்கள்!, தமிழர்நாட்டின் எந்த ஒரு முகாமையான சிக்கல்களிலும் அவர்



படிப்பகம்

www.padippakam.com

எப்படிச் சில நுண்ணுத்திகளைக் கையாண்டு வருகிறார் என்பதை. எப்பொழுதுமே சில முகாமையானப் பிரச்சனைகளை மூடி மறைப்பார். அது வெளியே வந்துவிட்டால் உடனே திசை மாற்றுவார். மாநாடு நடத்தினால், போராடினால், உடனே தடை செய்வார். காவல்துறையை ஏவி விட்டு காட்டாட்சி நடத்துவார்!

தமிழ்க் காப்பு முயற்சியானாலும் சரி, கண்ணகி கோட்ட உரிமையானாலும் சரி, வள்ளுவர் சிலைச் சிக்கலானாலும் சரி, மணல் கொள்ளையானாலும் சரி, நீலமலையில் நடக்கும் மலையாளிகளின் நிலச் சுருட்டலானாலும் சரி, தென் பகுதியில் அவர்களின் வன்கவர்வானாலும் சரி, தலைநகர் சென்னையில் குடிநீர் தேவைக்கு ஆந்திரத்திடம் தமிழர்நாட்டைச் சிக்க வைப்பதிலும் சரி, திருச்சியை 2வது தலைநகராக ஆக்குவதானாலும் சரி, கச்சத்தீவு சிக்கலானாலும் சரி, சிங்களக் காடைகளால் தமிழக மீனவர்கள் நடுக்கடலில் கொல்லப்பட்டாலும் சரி, பெரியாறு அணைப் பிரச்சனையானாலும் சரி, தமிழரின் உரிமைகளைக் காக்க இவர் என்ன செய்தார்? இப்படி எத்தனையோ எடுத்துக் காட்டுக்களைச் அடுக்கிக் கொண்டே போகலாம்.

குமரி மாவட்டத்தைப் புறக்கணித்து, "நெல்லை எங்கள் எல்லை. அதற்கு அப்பால் எல்லாம் எமக்குத் தொல்லை!" என்று வறட்டுத்தனமாகப் பேசி குமரி மாவட்ட மக்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டவர். இவரின் இந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு மலையாளிகள், குமரி மக்களை, "வாருங்கள் மீண்டும் கேரளத்துடன் சேருங்கள்!" என வெளிப்படையாக அழைப்பு விடுக்கின்றனர்.

ஏன், பெரியார், பெரியார் என்று உச்சரித்துக் கொண்டே, பார்ப்பானுக்கு நல்ல பிள்ளையாக நடந்து கொள்கிறாரே! தமிழர் நாடெங்கும் பார்ப்பனீய இந்து மதத்தைத் தோலுரித்து வந்த, "கடவுள் கொள்கையைப் பரப்ப காமச்சுவையை அதிகம் பயன்படுத்தியது சைவமா? வைணவமா?" என்ற பட்டிமன்றத்தை ம.கோ.இரா (எம்.ஜி.ஆர்.) தடை செய்யவில்லை. ஆனால் பகுத்தறிவாளி தடை செய்தார். 100 தமிழறிஞர்கள் தமிழுக்காகப் பட்டினிப் போர் நடத்தியபோது இங்கிருக்கிற மொழிச் சிறுபான்மையினரைத் தூண்டிவிட்டுப் பேசினார். பதவிக்காக எந்தப் பாவத்தையும், மனச் சான்றையும், அடகு வைத்துவிட்டு, கொள்கை இரண்டகத்தைச் செய்யத் துணியும் ஒரு கோழை அவர். வீர வசனம் மட்டுமே அவருக்கு எழுதத் தெரியும். ஆனால் வீரரல்லர் அவர். தமிழகத்தின் எதிர்காலத்தை உள்ளத்தில் இருத்தித் திட்டமிட்டு செயலாற்றும் ஆற்றல் மிக்கவரல்லர் அவர். வெறும் பதவி வெறிபிடித்த, அதிகார அரசியலாளி மட்டுமே அவர்! என்பதை ஆயிரம் முறை உறுதி செய்து விட்டார். அப்புறம் என்ன, காவிரியைக் காப்பதில் மட்டும் முன் நிற்பவரா அவர்?

சென்ற ஆகஸ்து மாதத்தில் தமிழகத்திற்கு ஞாயம் வழங்கும் குச்ரால் காலத்திட்டம் மற்றும் ஆணையம் பற்றிய வரைவுத் திட்டத்தைக் கலைஞர் கைவிட்டு, கர்நாடகத்தின் விருப்பப்படியான, தமிழக நலனுக்கு முற்றிலும் எதிரான ஒரு திட்டத்தை ஒப்புக்கொண்டு வந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து; இதற்கு காரணமாக இருந்த தலைமையமைச்சர் வாச்பேயின் செயல்பாடுகளைக் கண்டித்து, நடுவணரசிற்குத் தான் அளித்துவந்த உதவியை விலக்கிக் கொள்ளும் முடிவை செயலலிதா மேற்கொள்ள இருந்தார், என்பதையும், அதை அவருடையக் கூட்டணிக் கட்சிகள் எதிர்த்து, அவர் அப்படிச் செய்யாமல் தடுத்து விட்டன என்பதையும் உறுதிப்படுத்துகிற வகையில் சென்ற கிழமை மருத்துவர் இராமதாசு அவர்கள் துக்ளக் இதழுக்கு அளித்த பேட்டியில் கூறியது வெளியாகியுள்ளது.

மேக்கேதாட்டு அணை என்பது மின் உற்பத்திக்காகக் கட்டப்பட்டதுதான் என்று கர்நாடகத்தார் சொல்வர். ஆனால், பின்னர் அதை வேளாண் அணையாக மாற்றிவிடுவர்" என்று கலைஞர் கூறியுள்ளார். ஆனால் தற்போது அந்த அணை கட்டப்படுகிறது என்ற செய்திகள் வந்த வண்ணமுள்ளன. ஆனால் இப்போது இவர் முதலமைச்சராக இருக்கும்போது எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் வரவேற்றுள்ளது அவரது தொடர் இரண்டகத்தையே காட்டுகிறது.

## இரண்டகத்திற்கே இருப்பிடம் தந்தார்!

தமிழகத்திற்குத் தான் செய்த மாபெரும் இரண்டகத்தை மறைக்க கடந்த ஆகஸ்து மாதத்தில் தில்லியிலிருந்து திரும்பியதும், மிகப் பெரிய அளவில் ஒரு பரப்பல் புயலையே உருவாக்கினார். ஏதோ பிரச்சனையே தீர்ந்து விட்டதாக 6 கோடித் தமிழர்களை நம்ப வைத்துவிட்டார். அதன் விளைவாகத்தான், பல உழவர் கழகங்களும் (விவசாயச் சங்கங்களும்) திருச்சியில் அண்மையில் நடந்த நாம் தமிழர் இயக்க மாநாடும் காவிரி குறித்து எந்த ஒரு தீர்மானமும் போடவில்லை.

கலைஞரின் இரண்டகத்திற்குச் சப்பைக்கட்டுக் கட்டும் முனைவர் வி.சி. குழந்தைசாமிக்குத்



படிப்பகம்

www.padippakam.com

திருவள்ளுவர் விருது, மன்னார்குடி இரங்க நாதனுக்கு புதுவை அரசு அமைத்துள்ள காவிரிச் சுற்றாய்வுக் (ஆலோசனைக்) குழுவில் உறுப்பினர் தகுதி என்று "விருது டிப்ளோமசி" தொடரும். இது கலைஞருக்குக் கைவந்த கலை!

எப்படியோ தில்லியில் நடந்த மோசடியை மறைத்து, "அது நல்லதே!" என ஆறு கோடி தமிழர்களையும் நம்ப வைத்துவிட்டோம் என்ற நம்பிக்கையில் கலைஞர் இப்போது, "நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமலிருந்த காவிரிச் சிக்கலை வாச்பேயி 99 விழுக்காடு தீர்த்துவிட்டார்!" என வெளிப்படையாக, துணிச்சலுடன் பொய் கூறுகிறார். (வேர்கள் 3:11 வைகாசி 1999)

## இரண்டகம் போதாதென்று அடக்குமுறையையும் கையாண்டார்!

"வாச்பேய் காவிரிப் பிரச்சனையை முற்றாகத் தீர்த்துவிட்டார்" என்று கலைஞர் விட்ட சரடு சீக்கிரமே அடங்கிவிட்டது. காவிரி காப்புக் குழுவின் முயற்சியால், காவிரி தீர உழவர்கள் கழகக்(சங்கக்) கூட்டத்தில் ஒருமனதாக, "அப்படிக் கலைஞர் கூறியது தவறு" என்று கண்டனத் தீர்மானம் போடப்பட்டது. இதழ்கள், "கலைஞரின் வாச்பேயி பற்றிய இந்தக் கருத்து கண்டு அதிருப்தி" என முகாமைத்துவம் கொடுத்துப் போட்டன. வெகுண்டெழுந்தார் முதல்வர். தன் காவல்துறையை முடுக்கிவிட்டார். கழகத்(சங்கத்) தலைவரை உளவுத்துறை அதிகாரிகள் சென்று, "எப்படி இப்படியொரு தீர்மானம் போடலாம்?" என்று மிரட்டியுள்ளனர்.

இம்முறை காவிரி தொடர்பான உழவர் அமைப்புக் கள் மற்றும் பல அரசியல் தலைவர்கள் "கர்நாடகம், இடைக்காலத் தீர்ப்புப்படி தண்ணீர் விடவில்லை. விட்டிருந்தால் குறுவைக்கு சூன் 12இல் முறையாக மேட்டூர் அணையைத் திறந்திருக்க முடியும்" என ஒரே குரலில் ஒலித்தனர். பல ஆண்டுகளாக நாம் எடுத்த முயற்சிக்கு கொஞ்சம் பலன் கிடைத்திருப்பதாக எண்ணி நாம் சற்று மகிழ்ச்சியடைந்தோம்.

மேலும் முதல்முறையாக (இதுவரை முதல்வருக்கு அஞ்சிக் கொண்டிருந்த) உழவர் அமைப்புக்கள் "கர்நாடகம், தமிழகம் குறுவை மகசூலைக் கைவிட வேண்டும் என்ற தனது அக்கிரமமான தனது விடாப்பிடியான கொள்கையின் அடிப்படையில்தான் 4-5 மாதங்களாக சட்டத்திற்குப் புறம்பாகக் கட்டிய அணைகளிலிருந்து தண்ணீரைத் திறந்து விடவில்லை!" என்ற செய்தியை தங்கள் மனக்குமுறலை வெளிப்படையாகத் தெரிவித்தனர்.

எனவே, இம்முறை கலைஞர் தனது பொதுப்பணித் துறை அமைச்சரையும், மன்னார்குடியாரையும், அதிகாரிகளையும் ஏவிவிட்டு கடந்த 15 நாட்களாக நாளொன்றுக்கு ஒரு அறிக்கை விட்டு உண்மைக்கு மாறான தகவல்களை பரப்பி வருகின்றார். அதுவும் திருச்சியில் உள்ள ஒரு பொதுப்பணித் துறை அதிகாரி, "அரசனுக்கு மிஞ்சிய அரசு விசுவாசியாக" நடந்து கொள்கிறார். தன் தகுதியை மீறி முதல்வரின் "மக்களைக் குழப்பும்" எண்ணத்தை நிறைவேற்றும் வேலை களைச் செய்து வருகின்றார். பாவம், அவர் கருணாநிதியிடம் என்ன வரம் கேட்டுள்ளாரோ!

பொதுப்பணித்துறை அமைச்சர் 1996 இல் இதுவரை 39 கோ.க.அடி நீர் வந்துவிட்டது என உளறி, அதை உடைத்துக் கர்நாடக அரசு, "இல்லை, இல்லை வெறும் 5 நூ.கோ.க.அடி நீர்தான் திறந்து விடப்பட்டுள்ளது!" என்று மண்டையில் அடித்தமாதிரி பதில் தந்துள்ளனர். எனவே, இம்முறை உளறுவதையும் ஒரு ஒழுங்கு முறையோடு செய்கிறார் அவர். ஆனால், அந்தோ! சராசரித் தமிழனுக்கு அமைச்சரும், அதிகாரிகளும் கூறுவதன் உட்பொருள் என்னவென்பது எப்படிப் புரியும்?

தமிழர்நாட்டு இதழாளர்களும் உண்மை நடப்பைப் பெரும்பாலும் அறியாதவர்களாகவே இருக்கிறார்கள். நடுவண் நீர்வள ஆணைய அதிகாரிகள் வழக்கமான முறையில் மேட்டூர் அணைக்கு வந்தனர். ஆண்டுக்கு 20 அணைகளை இவர்கள் பார்வையிட வேண்டும். ஆனால் தமிழக ஏடுகளோ, "இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்றுகிறார்களா என்று கண்டறியவே வந்தார்கள்!" என்று செய்தி களைப் போட்டு குழப்பினார்கள்.

அரசு தரப்பில் தொடர்ச்சியாக பல அறிக்கைகள், பேட்டிகளில்:

1. இந்த ஆண்டு முன்கூட்டியே கர்நாடகத்தில் பெய்த பருவ மழையால் அங்குள்ள அனைத்து அணைகளிலும் -சட்டத்திற்குப் புறம்பாகக் கட்டிய அணைகள் உட்பட- நீர் ததும்பி வழிகிறது என்பதையும்.

2. கடந்த ஐந்து மாதங்களாக இடைக்காலத் தீர்ப்பையொட்டி நீர் கர்நாடக அணைகளிலிருந்து திறந்துவிடப்படவில்லை என்பதையும் அப்படி விட்டிருந்தால் மேட்டூரில் மிகையாகவே நீர் இருக்கும் என்பதையும் முற்றாக மறைத்து வருகிறது. அத்தோடு தஞ்சையில் உழவர்கள் சந்திப்பு என ஒரு நாடகத்தை நிறைவேற்றி ஏதோ உழவர்களே சூலையில் குறுவைக்கு மேட்டூர் அணையைத் திறந்து விட்டால் போதும் என்று கேட்டுக் கொண்டதாக அறிவிப்பு விடுகிறார்கள்.



படிப்பகம்

ஆனால் இம்முறை உழவர்கள் கலைஞரின் இந்த தாமதத் திறப்பு முயற்சியை முறியடித்து சூலை ஒன்றாம் நாள் திறக்க முடிவு எடுக்கும்படி செய்துவிட்டனர். எனினும் கர்நாடகத்தாரால் செய்யப்பட்ட குறுவைக்கு எதிரான சீர்குலைவு வேலைகளை மூடி மறைத்து தமிழக அரசின் சார்பில் பேசுவோர் அனைவரும் கர்நாடகத்தின் ஊதுகுழலாக நடந்து கொள்கின்ற அவலத்தையே காண்கின்றோம். மழைக்குறைவால் நீர்வரத்து இல்லை என்று இவர்கள் கதை கட்டுகிறார்கள்.

1960க்கு முன்பு தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் நீர் இறைப்புக்கு மின் இயந்திரங் களே இல்லை என்கிற நிலை இருந்தது. காவிரி நீர்வரத்தும், பருவ மழையும் சேர்ந்து பாசனத்திற் குப் போதுமானதாக இருந்தது. ஆனால் கர்நாடகத்தில் சட்டத்திற்குப் புறம்பாக அவர்கள் கட்டிய அணைகளின் எண்ணிக்கை பெருகப் பெருக நீர்வரத்துக் குறைந்து பயிர்களைக் காக்க நீர் வேண்டி, நீர் இறைப்புக்கு மின் இயந்திரங்கள் பெருக ஆரம்பித்தன. இன்று அப்பகுதியில் 14 இலக்கம் இயந்திரங்கள் இயங்குகின்றன. அதனால், நிலத்தடிநீர் வெகுவாகக் கீழே போய்க் கொண்டுள்ளது. நிலம் பல இடங்களில் விரிசல்விடும் காட்சியைக் காண முடிகிறது. வயல்வெளிகளில் மின் கம்பங்களும், கம்பிவடங்களும் குறுக்கும் நெடுக்குமாக இருப்பதால் வயல் வரப்புக்களில் வைத்து வளர்க்கப்படும் கருவை மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன. அம்மரங்கள் தான் இதுநாள் வரை ஏழை மக்களுக்கு அடுப்பெரிக்க உதவிய எரிபொருளாகும். குடி நீர் பற்றாக்குறை ஏற்பட்டு மக்கள் ஆலாய்ப் பறக்கும் காட்சியை இப்போது எங்கும் காணமுடிகிறது. கடல் உவர்நீர் உட்பகுதிகளுக்குப் புகுந்து கடலை ஒட்டிய பாசனப் பகுதிகளில் இப்போது பயிரிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தனைக் கேடுகளுக்கும் கரணியமான கர்நாடகத்தின் சட்டத்தை மதியாத போக்கும், அதற்குத் துணைபோகும் நடுவணரசினையும் எதிர்த்து ஒரு ஈனக்குரல்கூட எழுப்ப இயலாத நிலையை எண்ணி எண்ணி வருந்த வேண்டிய நிலையில் உள்ளோம். (வேர்கள் 3:12 இரட்டை 2030)

அண்மையில் நடந்த நிகழ்ச்சிகள், 1998 ஆகற்றுத் திங்களில் தில்லியில் கலைஞர் கையெழுத்திட்ட இரண்டக (துரோக) ஒப்பந்தத்தால் தமிழகத்திற்கு நிகழ்ந்த கேடுகளை வெளிச்சமிட்டுக் காட்டின. "அது நல்லதே!" எனத் தமிழக மக்களை நம்ப வைக்க அவர் செய்த 'கோயபெல்சு' பரப்புரையில் மயங்கியவர்களே ஏராளம். வேளாண் அரங்கத்தில் உள்ளவர்கள் பலரும் விட்ட அறிக்கைகளே அவர்கள் கலைஞரின் பொய்ப் பரப்புரையால் பாதிக்கப் பட்டவர்களாகவே உள்ளார்கள் என்பதைக் காட்டின. இவர்களைப் போலவே இன்னும் ஒரு சில காவிரிப் பாசன உழவர் கழகத் (விவசாயச் சங்கத்) தலைவர்களும் உள்ளனர். அவர்கள் எது உண்மை என்பதை நன்கு அறிந்தவர்கள்தான். ஆனால் சொந்தக் கரணியங்களுக்காக அரசைப் பகைத்துக் கொள்ளப் பயந்து அரைகுறை உண்மைகளோடு அறிக்கைகள் விடுகின்றனர். தீர்மானங்களை நிறைவேற்றுகின்றனர்.

### சென்ற ஆகற்று இரண்டகத்தின் முகாமையான தன்மைகள்.

1. காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையின் முகாமையான அதாவது தமிழகத்திற்கு உதவிகரமான பகுதிகளை திரும்பப் பெற்றுவிட்டது.

2. ஐ. கே. குச்ரால் காலத்தில் தீட்டப்பட்ட முன்வரைவுத் திட்டமே தமிழகத்தின் நன்மைகளைக் காப்பதாக இருந்தது. அதையும் கன்னடர் மற்றும் வாச்பேயர் கொடுத்த அழுத்தத்தால் கைவிடப்பட்டது.

3. கன்னடருக்குச் சார்பானத் திட்டத்தில் கையெழுத்திட்டு தமிழகத்தின் எதிர்காலத்தை இருளடையச் செய்தது.

4. கர்நாடகம் தொடர்ந்து அணைகளைக் கட்டவும், அதிகபட்சமாக வேளாண்மையை விரிவு செய்யவும் உரிமை வழங்கியது. இப்படிப் பலவற்றைக் கூறலாம்.

எனவே கர்நாடகம் 1999 பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் இடைக்கால ஆணையின்படி தண்ணீர் விடவில்லை. இதைக் கருணாநிதியின் ஆதரவாளர்களே மறைக்க முடியவில்லை. பின்னர், சூன் மாதத்தில் விட வேண்டிய நீரைப் பெற்றுவிட்டதாக அறிவித்தனர். ஆனால் சூலை 5ஆம் நாள் நடந்த கண்காணிப்புக் குழுக்கூட்டத்தில் கர்நாடக அதிகாரிகள், "இனி நாங்கள் (சூலை 1 முதல்) தண்ணீர் விடமாட்டோம்!" என வெளிப்படையாகக் கூறி விட்டனர்.

கலைஞர் ஏற்றுக் கொண்ட புதிய திட்டம் மற்றும் ஆணைய விதிகளின்படி அவர்களை ஒன்றும் செய்ய இயலாது. அதன் பலன் இன்று பொறுப்பானவர்கள் தரும் புள்ளிவிளத்தங்களின்படி 5 இலக்கம் டன் நெல்விளைச்சல் இழப்பு ஏற்படவுள்ளது. அதாவது ஏறத்தாழ இது 200 கோடி உரூபா இழப்பாகும்.

உண்மைச் செய்திகளை மறைத்துவரும் அனைவரும் தேர்ந்தெடுத்து மறந்துவிடும்

www.padippakam.com

செய்திகள் என்னவென்றால், இந்தப் பருவத்தில் கர்நாடக மற்றும் குடகு பகுதிகளில் காலத்திற்கு முன்னரே நிறைய மழை பெய்தது என்பதையும் கர்நாடகம் கட்டிய சட்டத்திற்குப் புறம்பான அணைகள் அனைத்திலும் நீர் நிரம்ப உள்ளது என்பதும்தான்.

---

**கலைஞர், தமிழகத்தின் உயிர்நாடியான எந்தச் சிக்கலையும் தன் கட்சி அரசியலுக்கும், அதிகார அரசியலுக்கும், தன்னல அரசியலுக்கும் பயன்படுத்துவதில் கெட்டிக்காரர்!**

---

"அங்கு மழை இல்லை! என்ன செய்வது? என்று வெகுளித்தனமாகக் கேட்பவர்களும் உண்டு. நீர் இருப்பதை அறிந்தே நேர்மையற்ற முறையில் கேட்பவர்களும் உண்டு. மழை பெய்தால்தான் வெள்ளாமை உண்டு என்றால் மேட்டூர் அணையைக் கட்டியதன் நோக்கமே பாழாய்ப் போய்விடும்! குறுவை மகசூலை உறுதிப்படுத்தவே மேட்டூர் அணை கட்டப்பட்டது. அதை நிலைப்படுத்த முடியாத நிலை வருமானால், மேட்டூர் அணை சுற்றுலாப் பயணிகள் பார்க்க மட்டுமே பயன்படும்.

இப்போதும்கூட மேட்டூரின் உயர்மட்டக் கால்வாயிலும், புதிய கட்டளை உயர்மட்டக் கால்வாயிலும், புள்ளம்பாடிக் கால்வாயிலும் பயிர் செய்ய தண்ணீர் விடப்படவில்லை. நீர் விடப்பட்டக் கிழக்குப் பகுதியிலும் முறை போடப்பட்டு விட்டது.

கலைஞர், தமிழகத்தின் உயிர்நாடியான எந்தப் பிரச்சனையையும் தன் கட்சி அரசியலுக்கும், அதிகார அரசியலுக்கும், தன்னல அரசியலுக்கும் மட்டுமே பயன்படுத்துவதில் கெட்டிக்காரர். சிக்கல்களைக் கையாளுவதில் தமிழகத்தின் நலனை மனதில் வைத்து அவர் செயல்பட்டதே இல்லை. தப்பித்தவறி நல்லது ஏதாவது செய்தால் அது, தன் கட்சி, அதிகார அரசியலுக்குக் கேடு இல்லை என்று தெரிந்தால்தான் செய்வார்.

---

**இந்தப் பருவத்தில் கர்நாடக மற்றும் குடகு பகுதிகளில் காலத்திற்கு முன்னரே நிறைய மழை பெய்தது கர்நாடகம் கட்டிய சட்டத்திற்குப் புறம்பான அணைகள் அனைத்திலும் நீர் நிரம்ப உள்ளது. ஆனாலும் தரவேண்டிய தண்ணீரை கர்நாடகம் தரவில்லை!**

---

கடந்த 20 ஆண்டுகளாகப் பெரியாறு அணையில் இருந்து மலையாளிகள் தமிழகப் பாசனத்திற்கு தண்ணீர் விடுவதில்லை. அப்படி விடாமல் இருப்பதில் மார்க்சிஸ்டுக் கட்சிகளுக்கு அதிகப் பங்கு உண்டு. அதைவிட மோசம் என்னவென்றால், சி. பி. எம். கட்சி முன்னிருந்து ஒரு அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தி அதில் கேரளாவில் மேற்கு நோக்கிச் சென்று கடலில் வீணாகக் கலக்கும் ஏறத்தாழ 1100 நூ.கோ.க.அடி நீரில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூடத் தமிழர் நாட்டிற்குத் தரமாட்டோம் எனத் தீர்மானம் போட்டபோதெல்லாம் கலைஞர் மூச்சு விடவில்லை. மார்க்சிஸ்டு கட்சியினர் தமது கூட்டணியில் இருந்ததால் அப்போது எதிர்த்து ஒரு வினா எழுப்பவில்லை. ஆனால் இன்று அவர்கள் எதிரணிக்குப் போனவுடன், தண்ணீர் தர மறுக்கும் அவர்கள் தேசியவாதிகள் தானா? என்று திறனாய்வு செய்கிறார்.

ஆந்திராவிடம் தமிழகத் தலைநகரின் தாகம் தீர்க்க நீர் கேட்டு நிற்கும் நிலையைத் தமிழகத்திற்கு உருவாக்கினதே இந்தச் 'செம்மல்'தானே! முன்பு செயலலிதா முதல்வராக இருந்தபோது, "தமிழ்நாடு தெலுங்கு நாட்டுக்கு மின்சாரம் தராவிட்டால், ஆந்திரா சென்னைக்குக் குடிநீர் தராது" என்று ஆந்திர முதல்வர் என்ற முறையில் அறிவித்தாரே! (அப்போது அத் திட்டம் முடிவு பெறவில்லை) அந்த நேரத்தில், இடர்பாடு செயலலிதாவுக்குத்தானே என்று கருணாநிதி சும்மா இருந்துவிட்டார்! ஆனால் இன்று ஆந்திரப் பேராயக் கட்சியினர் எதிரணியில் இருப்பதால், அவர்கள் சென்னைக்கு வரும் குடிநீரைத் தடை செய்வதால், அவர்களின் தேசியவாதம் என்னவாயிற்று எனக் கேட்கிறார்.

கன்னடர்கள் காவிரிச் சிக்கலில் மட்டுமல்ல, தமிழர் நாட்டிற்கும், தமிழர்கட்கும் செய்யும் கேடுகள் எதையும் குறித்துப் பேசவே மறுத்து வாய் மூடியே இருந்து வருகிறார். அதே சமயம் கன்னட வெறியன், தமிழரினப் பகையாளி தேவே கௌடாவை இந்தியத் தேசியத்திற்குத் தலைமையமைச்சராக்க உதவி செய்தார். கர்நாடக முதல்வர் பட்டிலை அருயிர் நண்பனாகச் சித்தரிக்கிறார். இவையெல்லா வற்றையும் வைத்துப் பார்த்தால் இவரின் பூர்வீகம் என்ன? இவர் யார்? என்ற வினாக்கள் எழாமல் இல்லை. (வேர்கள் 4:1 ஆடி 1999)

சென்ற ஆண்டு ஆகத்துத் திங்களில் தமிழக முதல்வர் தனது ஆட்சியைக் காப்பாற்ற, கர்நாடகம் கூறியபடி, தலைமையமைச்சர் எழுதிக் கொடுத்ததில் கையெழுத்திட்டு வந்த இரண்டகத்தை மறைக்க அற்றிலிருந்து விடாமல், "வாச்பேய், தீராத காவிரிச் சிக்கலைத் தீர்த்து விட்டார்" என மனம் நடுங்காமல், நா கூசாமல், பொய் சொல்லி வந்தார். தன் குட்டி அமைச்சர்களையும், அதிகாரிகளையும் அதே ஒப்பாரியைப் பல்வேறு பாணிகளில் பாட வைத்தார். ஆனால் கெட்டிக்காரன் புளுகு 8



படிப்பகம்

www.padippakam.com

நாள்தானே! சூன் 12ல் மேட்டூர் அணையைத் திறக்கப் போதுமான நீரைக், கர்நாடகம் சட்டத்திற்கு எதிராகக் கட்டப்பட்ட அணைகளில் இருந்து திறக்கவேயில்லை. முன்னரே பெய்த பருவமழைநீர் முழுவதையும் அந்த அணைகளில் அடைத்து வைத்துவிட்டது கர்நாடகம்.

எனவே இயல்பான தமிழக குறுவைச் சாகுபடியில் பாதியளவே பயிரிட முடிந்தது. அதுவும் தாமதமாக, தெளிப்பு முறையைக் கையாண்டு எழுப்பப்பட்ட குறுவை அடுத்துவரும் வடகிழக்குப் பருவமழையினால் பாதிக்கப்படும் என உழவர்கள் அஞ்சிக் கிடக்கின்றனர்.

நடுவர் மன்ற இடைக்கால ஆணையும் நடைமுறையாகவில்லை. 98 ஆம் ஆண்டு ஆகஸ்து மாதம் உருவாக்கப்பட்டதாகக் கூறப்பட்ட கண்காணிப்புக் குழுவும் செயல்படவில்லை. ஏன்!, நடுவர்மன்ற உசாவலையே அது முடக்கிப் போட்டுவிட்டது.

குறுவை மகசூலைக் காக்கவே இடைக்காலத் தீர்ப்பில் சூலையில் 42.79 நூ.கோ.க.அ. நீரையும், ஆகத்து மாதத்தில் 54.72 நூ.கோ.க.அ. நீரையும் செப்டம்பரில் 29.36 நூ.கோ.க.அ. நீரையும், அக்டோபரில் 30.17 நூ.கோ.க.அ. நீரையும் கர்நாடகம் திறந்துவிட வேண்டும் என்கிறது. ஆனால் சென்ற மே திங்களில் கர்நாடக அரசு சார்பில், "இனி மழை பெய்தால்தான் நீர் வரும்" என வெளிப்படையாக அறிவிக்கப்பட்டது. அதாவது எங்கள் அணைகளிலிருந்து ஒரு துளி நீரையும் விடமாட்டோம் என்கின்றனர். தண்ணீரும் விடவில்லை.

குறுவை நடவுக்கு இல்லாத நீர் தாமத மழை காரணமாக ஓரளவு வந்தது. பிறகு வடிந்துவிட்டது. அது குறுவைச் சாகுபடிப் பரப்பைக் அதிகரிக்கப் பயன்படவில்லை. எனவே காவிரித்தீரு உழவர்கள், குறிப்பாக கிழக்கு தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்ட உழவர்கள் கிளர்ச்சிப் பாதையில் இறங்க நேரிட்டது.

இதழ்களில், "மேட்டூர் அணைக்கு நீர்வரத்துக் குறைவு. காவிரிப் பாசன உழவர்கள் அச்சம்"

"நீர்வரத்துக் குறைவால் உழவர்கள் குழப்பம்."

"நீர்வரத்துக் குறைவால் குறுவை விளைச்சலின் அளவு கணிசமாகச் சரியும்."

"முறை வைத்து நீர் விடுவதைக் கைவிட வேண்டும்."

"சீர்காழி வட்டத்தில் பயிரிட தண்ணீர் இன்றி வேளாண் பணிகள் பாதிப்பு"

"முழு அளவு நீர் விட வேண்டும்"

"உழவுக்குப் போதுமான நீர்விடக் கோரி வேதாரணியம் அருகே உழவர்கள் மறியல்"

"போதிய நீர் விட உழவர்கள் கோரிக்கை"

"பொட்டல் காடாகக் காட்சியளிக்கிறது! வந்த நீரும் பருவம் செய்யப் பயன்படவில்லை. பாவநாசம் உழவர்கள் வேதனை."

"நடுவர் மன்றத் தீர்ப்புப்படி கர்நாடகாவிலிருந்து பாசன நீரைக் கேட்டுப் பெற வலியுறுத்தல்!"

"கடைமடைப்பகுதிக்கு நீர் வராததைக் கண்டித்து திருத்துறைப்பூண்டி உழவர்கள் சாலை மறியல்!"

"குறுவைச் சாகுபடிக்கு நீர்வரவில்லை எனப் பரவலாகக் குரல் எழுவதால் அந்த இடங்களைப் பார்வையிட மாவட்ட ஆட்சியர் சென்றார்!"

"சிதம்பரம், காட்டுமன்னார் கோயில் வட்டங்களில் குறுவைக்கு நீர் இல்லை!"

"தண்ணீர் தட்டுப்பாட்டினால், இவ்வாண்டு குறுவைச் சாகுபடி பாதியாகக் குறைவு!"
(இந்தச் செய்திகளெல்லாம் அண்மையில் உழவர் கழகங்களின் தீர்மானங்களாகவும், அறிக்கைகளாகவும் வெளிவந்தவைகளாகும்)

மிகுந்த இடருக்குள்ளானவை நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களே! ஆனால், இத் தீர்மானங்களும், அறிக்கைகளும் ஒன்றே ஒன்றை நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. அதாவது, மூன்று வினாக்கள் மனதில் வருகின்றன. 1) உழவுக்கு ஏன் நீர் வரத்துக் குறைந்தது?, 2) ஏன் மழை நீர் மட்டும் வருகிறது?, 3) இடைக்காலத் தீர்ப்பு என்னவாயிற்று?

### *ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்!*

சென்ற ஆண்டு ஆகத்து திங்களில் கருணாநிதியிடம் வாச்பேயி வாங்கிய கையெழுத்தின் விளைவாக, 1) நடுவர் மன்றம் நடக்கிறதா இல்லையா என்றோ, 2) இறுதித் தீர்ப்பு கிடைக்குமா கிடைக்காதா என்றோ 3) அப்படியே ஒரு இறுதித் தீர்ப்பு கிடைக்குமானால் அதை நிறைவேற்றும் திட்டம் என்ன (அதாவது தமிழகத்தின் உரிமையைக் காக்கும் வண்ணம்) 4) இறுதித் தீர்ப்பைக் கொடுக்க ஏன் தாமதிக்கிறார்கள்? போன்ற அடிப்படையான வினாக்கள் பற்றி அவர்களுக்கு ஒன்றுமே தெரியவில்லை என்றே கூறவேண்டும்.

இது குறித்து முழு வரலாற்றையும் அறிந்த ஒரு சில ஆட்சியாளர்களோ, அரசியலாளர்களோ



படிப்பகம்

www.padippakam.com

குறிப்பாக கருணாநிதி தனது திரைப்படத்தனத்தில் ஊறிய பித்தலாட்டப் பொய்ப்பரப்பலினால் உண்மைகளை அப்பட்டமாக மறைக்கிறார். காவிரிச் சிக்கலை ஓரளவு தொடர்ந்து கவனித்து வருகிறவர்களுக்கு இது புரியும். ஆனால் ஐயகோ, பெரும்பாலான தமிழர்களுக்கு இது குறித்து என்ன தெரியும்? அல்லது உண்மைகளைத் தெரியத்தான் விடுவார்களா? உண்மைச் செய்திகளை தமிழர்களுக்குத் தெரிவிக்க தமிழக உரிமைக்காகப் போராடும் சிறு சிறு அமைப்புகளும் இதழ்களும் முன்வருமா? அவர்களுக்கு இதில் ஆர்வம் உண்டா?

காவிரியை நாம் இழந்து வருவது தொடர்பான உண்மைகளைத் தமிழக மக்கள் அறியும் காலம் வருமுன் இழப்புக்குக் கரணியமாக இருந்த ஆட்களின் காலமும் முடிந்துவிடும்! பிறகு நாம் அவர்களை எப்படித் தண்டிப்பது? ஐரோப்பிய வரலாற்றில் இறந்துபோன ஒரு கொடுங்கோலனின் பிணத்தைத் தோண்டியெடுத்து அவனது எலும்புக் கூட்டைத் தூக்கில் போட்டார்களாம் மக்கள்! அப்படிச் செய்தாலும்கூட தமிழகத்தைச் சுடுகாடாக்க கர்நாடகத்தவர்கள் கட்டிய, சட்டத்திற்குப் புறம்பான அணைகள் தானாக உடைந்துவிடுமா?

மக்களை ஏமாற்றும் நோக்கத்துடன் காவிரிக் கால்வாய்கள் தூர் எடுக்கப்படும் செய்தி மிகப் பெரிதுபடுத்திப் போடப்படுகின்றன. முகாமையான கால்வாய்களில் படிந்த மண்ணை அகற்றி ஆழப்படுத்தினால் அவை மண் சேர்ந்து மூடிடும் போது கிளைக் கால்வாய்களும் மூடியிருக்கும் அல்லவா? அப்படியானால் அவற்றையும் சேர்த்துச் சீர் செய்யாமல் விட்டால் தண்ணீர் எப்படி ஏறிப் பாய்ந்து வயல்வெளிகளை எட்டும்?

கன்னடர்கள் வெளிப்படையாக அறிவித்து வருகிறபடி காவிரிப் பாயும் பகுதியெங்கும் பண வருவாய் தரும் குறுவைச் சாகுபடியே இல்லாமல் ஆக்கிவரும் முயற்சியில் அவர்கள் பாதிக்கு மேல் வெற்றிபெற்று விட்டனர். ஏற்கெனவே நாம் குறிப்பிட்ட படி மேட்டூர் அணையின் அவ்சியமே அடிபட்டுப் போகும்.

தமிழ்நாட்டின் குறிப்பிட்ட பகுதிகள் அதாவது கோவை மாவட்டத்தின் தென்பகுதி, காவிரிப் பகுதி நீங்கலாக உள்ள பிரிக்கப்படாத சேலம் மாவட்டம் (அதாவது நாமக்கல், சேலம், தர்மபுரி), பிரிவு படாத இராமநாதபுரம், பிரிவுபடாத திருநெல்வேலி மாவட்டம் (தாமிரபரணி நீங்கலாக) ஆகிய மாவட்டங்கள் வேகமாக பாலை நிலமாக மாறும் அறிகுறிகள் உள்ளன என்றும் இன்னும் ஒரு 50-60 ஆண்டுகளில்

இப்பகுதி பாலை நிலமாகவே மாறிவிடும் என்றும் முனைவர் வா. செ. குழந்தைசாமி உட்பட நீர் இயல் அறிஞர்கள் பலரும் தொடர்ந்து எச்சரிக்கை விடுத்துவருகின்றனர்.

கட்சிகளுக்கும், தலைவர்களுக்கும் பஞ்சமில்லாத தமிழகத்தில் நாற்காலிக் கனவுகளிலும் விளையாட்டுகளிலும் காலத்தை விரயமாக்கும் அரசியலாளிகள் இதையெல்லாம் எங்கே கருத்தில் கொள்ளப் போகிறார்கள்?

## *வளங்கள் இழப்பு, வருவாய் இழப்பு! அடித்தட்டு மக்களுக்கு வாழ்வு இழப்பு!!*

காவிரி நீர் என்பது நேரிடையான வெள்ளாமைக்கு மட்டுமல்ல, நிலத்தடி நீரைக் காக்கவும் அது பயன்படுகிறது. நீர் வரத்து குறையக் குறைய நிலத்தடி நீரும் கீழே இறங்கி வருகிறது. பொதுவாக மேற்கே இருந்து கிழக்கே பாயும் தமிழக ஆறுகளில் மெல்ல மெல்ல நீர் வரத்து குறைந்து வருகிறது. நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தால் ஏற்கெனவே நில மட்டத்திற்கு மேல் பீச்சி அடித்துவந்த நீரூற்றுக்களெல்லாம் பாழாகி அந்த வட்டாரம் முழுவதும் உள்ள நிலத்தடி நீர்மட்டம் படிப்படியாகக் கீழே போய்க் கொண்டு இருக்கிறது. நிலத்தடி நீர் மட்டம் கீழே போய்க் கொண்டிருப்பது, தமிழகம் பாலை நிலமாக மாறிவருவதற்கு ஒரு முகாமையான காரணியாகும். காவிரியையும், பெரியாறையும் இழந்து வருவது தமிழகம் பாலை நிலம் ஆவதை விரைவுபடுத்தும் செயலேயாகும்.

காவிரி தீரத்தில் குறுவை பணப்பயிராகவும், சம்பா சாப்பாட்டிற்காகவும் பயன்பட்டு வருகின்றன. குறுவை நன்றாக விளைந்தால் தீபாவளிப் பண்டிகை நன்றாகக் கொண்டாடப்படும். சம்பா வரவால் பொங்கல் சிறப்பாகக் கொண்டாடப்படும். சென்ற பல ஆண்டுகளாக இவ்விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படாமலேயே சென்றுவிட்டன.

சம்பா விளைச்சலையாவது உறுதியாக எடுத்துவிடலாம் என்கிற நிலையும் இப்போது இல்லை. கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏற்பட்ட இயற்கையின் சீற்றத்தால் (வங்காளக் கடலில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தின் கரணியமாக) சம்பாவில் உழவர்கட்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு ஏறத்தாழ 2000 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதுவெல்லாம் கலைஞருக்குத் தெரியாதா? தெரியும். அவருக்கு ஆட்சிக் கட்டிலைவிடக் காவிரியொன்றும், பெரிதல்ல. அதனால்தான் இத்தனை வினாக்களுக்கும் அவர் தருகிற ஒரே விடை என்ன தெரியுமா? "நான் காவிரித் தண்ணீரைக் குடித்து வளர்ந்தவன்!" என்பதுதான்.

(வேர்கள் 4:2 ஆவணி 1999)



படிப்பகம்

www.padippakam.com

கன்னடர்கள் தமிழ்நாட்டிற்கும், கர்நாடகத்திலுள்ள தமிழர்கட்கும், தமிழ் மொழிக்கும், காவிரிக்கும் எதிராக வரிந்துகட்டிச் செயல்படத் தொடங்கி 43 ஆண்டுகளாகின்றன. இப்படிச் செயல்படுவதில் அவர்களுக்குள், ஒரு கட்சிக்கு மற்றொரு கட்சி போட்டி போடுகின்றன.

## நடுவணரசின் நயவஞ்சகம், கன்னட அரசின் எதிர்ப்பு, தமிழக ஆட்சியாளர்களின் இரண்டகம் இவை மூன்றும்தான் காவிரி காய்ந்ததற்கான காரணியங்கள்

நடுவணரசைப் பொருத்தவரை தொடர்ந்து கர்நாடகத்திற்குச் சார்பாகவும் தமிழகத்திற்கு இரண்டகமும் இழைத்துவந்த கதையே அன்றும் இன்றும்! நேரு காலம் தொடங்கி அனைத்து தலைமையமைச்சர்களும் (வி. பி. சிங் நீங்கலாக) இரண்டகம் இழைத்தவர்களே. அவர்களின் அரசியல், அதிகார வரும்படிக்காக தமிழகத்தைப் பலி கொடுத்தே வந்தார்கள், வருகிறார்கள். அவர்களில் இந்திராகாந்தியும், வாச்பேயும் தமிழக முதல்வரை மிரட்டியே பணிய வைத்தனர். நேரு குடும்பம் தமிழகத்திற்குச் செய்த கேடுகள் குறித்துப் பெரிய ஆய்வே நிகழ்த்த வேண்டும். இலால்பகதூர் சாத்திரி இங்குள்ள தமிழர்களுக்கு மட்டுமல்லாமல் 200 ஆண்டுகளுக்கு முன்பாக இலங்கைக்குப் பிழைக்கப் போன தமிழர்களுக்கும் சேர்த்தே கேடு விளைவித்தார்.

தமிழகத்திற்குத் தலைமையேற்ற இந்தி(ய) தேசியக் கட்சிகளின் தலைவர்களும் சரி, மாநிலக்கட்சிகளின் தலைமைகளானாலும் சரி, தெரியாமலும் தெரிந்தும் கர்நாடக மற்றும் நடுவணரசுகளின் தமிழக எதிர்ப்புச் செயல்களுக்கு இணக்கமாகவே செயல்பட்டு வந்துள்ளனர். காமராசர், "காவிரி கர்நாடகத்தில் பாய்ந்தாலென்ன, தமிழகத்தில் பாய்ந்தாலென்ன? எல்லாம் பாரதத்தில்தானே உள்ளன!" என்கிற மாதிரியான கருத்தில்செயல்பட்டவர். (இறுதி காலத்தில் விழித்துக் கொண்டார். காலம் கடந்து போயின!)

பக்தவச்சலம் மட்டுமே காவிரிச் சிக்கலில் ஒரு உறுதியான திடமான சித்தத்தைக் காட்டினார். அண்ணா நடுவணரசுக்கு மனுப்போட்ட நிலையில் மரணமெய்திவிட்டார். பின்னர் கலைஞர் "காவியம்"தான் நாளதுவரை! ஆம் ம.கோ.இரா. ஆட்சிக்கு வந்தபோது கலைஞர் தொடங்கிய பேச்சுவார்த்தை அத்தியாயம் தொடர்ந்தது. அது சரிப்படாது என அவருக்குப் பட்டபோது, "நடுவர் மன்றம்" வேண்டும்! என மைய அரசைக் கேட்டார். நடுவணரசு அதை மறுத்துவிட்டது.

அதனை மீறிச் செயல்பட அவருக்குத் துணிவு இல்லை. இடையில் செயலலிதா ஆண்ட ஐந்து ஆண்டும் நடுவர் மன்றம் நடந்தது. கர்நாடகமும், நடுவணரசும், "மீண்டும் பேசலாம்" என நெருக்கிப் பார்த்தன. "முடியாது, நடுவர் மன்றமே முடிவு செய்யட்டும்!" என்று கூறிவிட்டார். அதில் அவர் உறுதியாக இருந்தார். ஆனால், இடைக்காலத் தீர்ப்பில் நடுவர் மன்றம் இழைத்த ஒரு தவறை, தமிழக மக்களுக்கு எடுத்துரைப்பதற்குப் பதிலாக, - அதாவது, தமிழகத்திற்கு ஆண்டுக்கு 205 நூ.கோ.க. அடிதான் என்பதை வரவேற்றது தவறு. அன்றிலிருந்து இன்றுவரை ஏதோ தமிழ்நாட்டுக்கு உரிய பங்கே 205 நூ.கோ.க. அடி நீர்தான் என தமிழக மக்கள் அனைவரும் எண்ணும்படித் தமிழகத் தலைவர்களும் இதழ்களும் ஒரு தவறான எண்ணம் ஏற்படக் காரணமாயினர். ஆண்டுக்கு 400 நூ.கோ.க. நீருக்கு மேல் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பெற்று வந்துள்ளோம். (காண்க பட்டியல்.2) ஏன் 1990 வரை கர்நாடகாவே 360 முதல் 412 நூ.கோ.க. அடி வரை ஒத்துக் கொண்டிருந்தது. பின் ஏன் 205 என்ற எண்ணம் ஏற்பட்டது? அதைப் பிறகு பார்ப்போம்.

ஆனால் காவிரி இழப்பில் தமிழகத் தலைமை இழைத்த தவறுகளில்; இல்லை இல்லை குற்றங்களில் பெரும்பங்கு கலைஞரையேச் சாரும், என்பதால் இத்தொடரை முதலில் எழுதினோம்.

1998 ஆகற்றுத் திங்களில் தில்லிக்கு வரவழைக்கப்பட்ட கலைஞரிடம், 1991 .ல் நடுவர் மன்றம் தந்த இடைக்கால ஆணையிலும், அதை நிறைவேற்ற நடுவணரசு - குச்ரால் காலத்தில் - இயற்றியிருந்த திட்டம் மற்றும் ஆணைய வரைவிலும் இருந்த தமிழகக் காவிரி உரிமைக்கு பாதுகாப்பு தரும் அம்சங்கள் அனைத்தையும் அடியோடு கைவிட்டு - ரத்து செய்து கர்நாடகம் தந்த திட்டத்தில் வாச்பேயி கலைஞரை மிரட்டி கையெழுத்து வாங்கிவிட்ட விளத்தங்களை முன்பே விவரித்திருக்கின்றோம்.

ஆனால் இப்போது அதைவிடப் பெரிய மோசடி ஒன்றை வாச்பேயி தமிழகத்திற்குச் செய்துள்ளார் என்பது வெளிப்பட்டுள்ளது. அதாவது, மாகாணங்களுக்கு இடையிலான நதி நீர்த் தாவாச் சட்டம் விதி 6 ஏ(7) ன் படி வகுக்கப்பட்ட திட்டம் நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால், 1998 ஆகற்று திங்களுக்குப் பிறகு தொடர்ந்து நடந்த எந்த நாடாளுமன்றக் கூட்டத்திலும் அந்த ஓட்டைத் திட்டத்தையும்கூட நாடாளுமன்றத்தின் முன் வைத்து அதை நிறைவேற்றவில்லை. எனவே, பெரிதாக பேசப்பட்ட ஆகற்று ஒப்பந்தம் "ஒரு முற்றுப் பெறாத முயற்சி" என கர்நாடக உயர் நீதி மன்ற முன்னாள் தலைமை நடுவர் சுட்டிக் காட்டுகிறார். இது உண்மையிலேயே மிகப் பெரிய மோசடியாகும்.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் கடந்த ஓராண்டு காலமாக கலைஞர் காவிரிப் பிரச்சனையைத் தீர்த்துவிட்டதாக கதை அளந்து கொண்டு இருக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக தேர்தல் காலம் முழுவதும் கலைஞர் கட்சி சார்பிலும், வாச்பாய் கட்சி சார்பிலும் காவிரி பற்றி செய்த விளம்பரங்கள் மோசடியின் உச்சாணிக்குப் போய்விட்டன. இத்தனையும் செய்துவிட்டு, "ஆணையம் அமைத்தது சட்ட ரீதியாகத்தான்!" என அளக்கிறார். "இச் சிக்கலை, கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டுச் சிந்திக்க வேண்டும்!" என கீதாபதேசம் செய்கிறார். தனது செயல்களைத் திறனாய்வு செய்கிறவர்கள் மீது எரிந்து விழுகிறார்.

சென்ற ஆண்டு ஓரளவு நல்ல மழை பெய்து விட்டதால் இவருடைய தில்லி மோசடி வெளிப்படாமல் போய்விட்டது. ஆனால் இந்த ஆண்டு (1999) அப்படி அல்ல! கர்நாடகத்தில் சூன் முதல் செப்டம்பர் வரை நல்ல மழை என வானிலை ஆய்வகம் வெளியிட்டுள்ளது. சற்று முன் கூட்டிப் பெய்த மழை நீர் முழுவதையும் கர்நாடகம் தான் கட்டிய சட்டத்திற்குப் புறம்பான அணைகளில் நிரப்பி வைத்துக் கொண்டது. அதை அடுத்து மேட்டூர் அணை சூன் 12இல் திறக்கப்பட வேண்டும். ஆனால் கர்நாடகம் செய்த பழியால் மேட்டூர் அணை திறக்கப் படுவதற்கு உரிய அளவு நீர் இல்லாததால் திறப்பு தாமதப்படுத்தப்பட்டது.

ஆனால் உழவர்கள் மிகத் தாமதமாகக் குறுவை பயிரிட்டால் பிறகு அறுவடைக் காலத்தில் அடைமழையில் பயிர் பாழாகுமே எனப் பயந்து அணையை உடனே திறக்க வேண்டும் என்று உரத்துக் குரல்கொடுத்தனர். எனவே, சூன் 1ல் அணையைத் திறந்து வைக்க வேண்டியதாயிற்று. தாமதமாகத் திறந்ததால் குறுவைப் பயிரிடும் பரப்பில் மிகக் குறைவாகவே உழவர்கள் பயிரிட்டனர். திறந்துவிட்ட நீர், நாகை, திருவாரூர் மாவட்டங்களில் பல இடங்களுக்குக் குறிப்பாக கடைமடைப் பகுதிகளுக்குச் சென்றடையவில்லை. முறை போட்டதும் ஒத்து வரவில்லை. எனவே, மதகுகளுக்குக் காவல் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையில் மேட்டூர் மேட்டு வாய்க்கால் திறக்கப்படவே இல்லை.

புள்ளம்பாடிக் கால்வாய் திறக்கப்பட்ட சில நாட்களில் மீண்டும் அடைக்கப்பட்டது. கட்டளை உயர்மட்டக் கால்வாயும்திறந்த சில நாட்களில் அடைக்க வேண்டியதாயிற்று. எனவே, புதுகை மாவட்டம் (வடபகுதி) கடலூர் மாவட்டம் (தென்பகுதி), தஞ்சை (கீழ்பகுதி) நாகை, திருவாரூர் மற்றும் காரைக்கால் பகுதிகளில் வைக்கப்பட்ட ஒரு பகுதி குறுவை பயிர்களும் நாசமாகும் நிலைமை ஏற்பட்டது.

---

***இந்திரா காந்தியும், வாச்பேயும் கலைஞரை மிரட்டிப் பணிய வைத்தனர். மற்றவர்கள் ஏமாற்றிப் பணிய வைத்தனர். இவர் எப்போதும் பணிந்தார்!***

---

இடையில் தாமதமாக கர்நாடக மாநில காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த மழைநீர் மேட்டூர் அணைக்கு வந்தாலும் பிறகு அடங்கிவிட்டது. எனவே, பூட்டையும், புடையுமாக இருந்த குறுவையைக் காக்க அதிக நீர் வேண்டுமென்று உழவர்கள் கிளர்ந்து எழுந்தார்கள். தேர்தல் முடியும்வரை சிக்கலைக் கமுக்கமாக வைத்திருந்த கலைஞரால், பின்னர் வெடித்துக் கிளம்பிய உழவர்களின் கோரிக்கைக்குப் பணிய வேண்டியது வந்தது. எனவே நிமையத்திற்கு 15000 கன அடி நீர் என்பதை 17000 கன அடியாக மேட்டூரிலிருந்து விடுவிக்கும்படி ஆணையிட்டார். நீர்மட்டம் மளமளவெனக் குறையத் தொடங்கியது. பயிரைப் பாதுகாக்க வழியறியாது உழவர்கள் பலவிதமான கிளர்ச்சிகளில் ஈடுபட்டார்கள். தொடர்வண்டி நிறுத்தம், சாலை மறியல், கொடும்பாவி எரிப்பு, மண்வெட்டிப் போராட்டம், என பல நடந்தன. அமைச்சர்களின் ஊர்திகளும் மறிக்கப்பட்டன.

## *பூசிக் கொண்ட சாயமெல்லாம் கரைந்தது!*

ஆகஸ்டு 98ன் ஏற்பாடு போலியானது என்பது உழவர்களுக்கும், இதழாளர்களுக்கும்கூட விளங்கத் தொடங்கியது. இவ்வாண்டு கலைஞரின் செயல் சாகசங்கள், சூழ்ச்சி நிறைந்த பரப்பல் உத்திகள் எதுவும் எடுபடவில்லை. தொடக்கத்திலேயே காவிரி தீரப் பகுதி உழவர்கள் - அதிகாரிகள் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து ஏதோ அதில், "மேட்டூரைத் தாமதமாகத் திறக்கலாம்!" என்று முடிவு செய்யப்பட்டதாக அறிவித்தார். வறட்சி தாண்டவமாடத் தொடங்கியதும், பொறியாளர்கள் 60 பேரை நதித் தீரத்திற்கு அனுப்பி அவர்கள் நீர்ப்பாசனத்தை ஒழுங்கு செய்வார்கள் என அறிவித்தார். பொதுப்பணித்துறை அமைச்சரையும், பாசனத்துறை அதிகாரிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் விட்டு உண்மைக்கு மாறான செய்திகளைக் கொண்ட அறிக்கைகளை விடச் செய்தார். அமைச்சர்களை வறண்ட வட்டாரங்களைப் பார்வையிட அனுப்பி வைத்தார். அவரது நோக்கம் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ளவர்களைத் தவிர இதர பகுதித் தமிழர்களை ஏமாற்ற வேண்டும் என்பதே ஆகும். இல்லையென்றால் தேர்தல் முடிந்ததும் மருமகனுக்கும் தன் கட்சிக்கும் அமைச்சரவையில் அதிகம் இடம் பிடிக்க தில்லிக்கு ஓடியவர், ஏன் காவிரிக்காக தில்லி பக்கம் போகாமல் குத்துக்கல்லாக தில்லியிலேயே இருந்துவிட்டார்? ஆனால் மேட்டூர் அணை நீர்மட்டம் 33 அடிக்குக் குறைந்து விட்டது. மழையும் கைகொடுக்கவில்லை. அணை இரண்டு மலைகளுக்கு இடையே கட்டப்பட்டதால் கீழே உள்ள 33 அடி நீரும் மேல்மட்டத்தில் நிற்கும் ஒரு அடி நீருக்கு சமம் ஆகாது. அணை காலியாகி மக்களும், பள்ளிப் பிள்ளைகளும் சுற்றுலா சென்று பார்க்கும் காட்சிப் பொருளாகிவிட்டது. 360 மெகாவாட் மின்சார உற்பத்திப் பொறிகள் செயலிழந்து நின்றுவிட்டன.

இத்தனைக்கும் காவிரி ஆணையம் கூடவே இல்லை. கலைஞரும் தலைமை அமைச்சரிடம் பேசிப்பார்த்தார். கண்காணிப்புக் குழு மட்டுமே செயல்பட்டது. அவர்கள் கர்நாடக அணைகளையும் தமிழகத்தின் காவிரித் தீரப் பகுதியில் உள்ள காய்ந்த பகுதிகளையும் சுற்றிப் பார்த்துவிட்டு செப்டம்பர் மாதத்தில் கர்நாடகம் தரவேண்டிய மீதமுள்ள 3



படிப்பகம்

www.padippakam.com

நூ.கோ.க.அடி நீரையும் அக்டோபரில் ஒரு 6 நூ.கோ.க.அடி நீரையும் உடனே கர்நாடகம் தன் அணைகளிலிருந்து திறந்துவிட வேண்டும் எனவும் தொடர்ந்து அக்டோபர் உட்பட மாதவாரி நீரை விட்டுவர வேண்டும் எனவும் பரிந்துரை செய்தனர். அவர்களது அதிகாரம் பரிந்துரை என்கிற அளவுக்குத்தான் உண்டு. அதையேத் தாளாமல் கர்நாடகம் தாண்டிக் குதித்தது. கர்நாடக முதல் அமைச்சரும் இதரத் தலைவர்களும் போர் முரசு கொட்டினர். கண்காணிப்புக் குழுவின் செயல் அதிகாரம் அற்றது எனவும், அதன் பரிந்துரை சட்டத்திற்கு எதிரானது எனவும் கூறினர். முதலில் கண்காணிப்புக் குழு முடிவை ஏற்கிறேன் எனக் கூறிய கர்நாடக முதல்வர் பிறகு ஒரு சொட்டு நீர்கூடக் கொடுக்க முடியாது எனக் கூறி விட்டார். வழக்கம்போல பெங்களூரில், குசராத்தி, மார்வாடிப் பணத்தில் தின்று கொழுத்துத் திரியும் காலிக் கும்பல்கள் தமிழக முதல்வரின் கொடும்பாவியை எரித்தனர். இந்தக் காட்சி அங்கே! ஆனால், தமிழகத்தில் திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் நீர் கேட்டு கிளர்ச்சி செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று திமிரோடு அறிவித்தார்.

ஆனால் வீறு கொண்டு எழுந்த உழவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை எச்சரித்தனர். கலைஞர் ஏற்பாடு செய்து தஞ்சையில் 22.09.99இல் நடந்த ஓர் உழவர்கள் கூட்டத்தில் கலைஞரின் கையாளாகச் செயல்படும் - கர்நாடகத்தின் முகவராகச் செயல்படும் ஒரு ஆளை எதிர்த்து உழவர்கள் அவருடைய இரண்டகத்தைத் தோலுரித்துக் குரல் கொடுத்தனர். எனவே, அவரால் தமிழக அரசுக்குச் சார்பான தீர்மானம் எதையும் அன்று போட முடியவில்லை.

## பகுத்தறிவு உத்திகள்!

கலைஞர் தன் தந்திரங்களை மாற்றினார். அரசு அறநிலையத் துறை வழியாக மழை வேண்டி சிறப்புப் பூசைகள், வருணசெபம், மகா சாந்தி ஹோமம் முதலியனவற்றைச் செய்ய அறிக்கைகள் விடப்பட்டன. பூசைகளும் நடந்தன. பொதுப்பணித்துறை சார்ந்த அதிகாரிகள் தஞ்சை பெரிய கோயிலில் உள்ள நந்திக்கு மிளகுப் பொழிவு செய்தனர். பொதுப்பணித் துறை அமைச்சரோ, "எப்போதும் எங்களுக்குள்ள தண்ணீர் ராசி இந்த ஆண்டும் கைவிடாது!" என தன் "பகுத்தறிவுப் பூர்வமான" நம்பிக்கையை வெளியிட்டார்.

தமிழக முதல்வர் நடப்பில் உள்ள பயிரைக் காக்க தாமதப்படும் சம்பா நடவைத் துவங்க 36 நூ.கோ.க. அடி தண்ணீர் வேண்டும் என தலைமையமைச்சருக்கும், கர்நாடக முதல்வருக்கும் செய்தி அனுப்பினார். கர்நாடக முதல்வர் அதற்கு ஒத்துக் கொண்டதாக கலைஞர் அறிவித்தார். ஆனால் பட்டேலோ தான் ஒன்றும் அப்படிக் கூறவில்லை என்று மறுத்துவிட்டார். தமிழ்நாடு தன் தண்ணீர்த் தேவையை மிகைப்படுத்திக் கூறுவதாகவும் பட்டேல் கூறினார். தலைமையமைச்சரோ தன் தேர்தல் பயணத்தில் தீவிரமாக இருந்தார். அதனிடையே அவர் கர்நாடக முதல்வரைத் தமிழகத்திற்குத் தண்ணீர் விடும்படிக் கூறியதாக செய்தி வந்தது. கர்நாடக முதல்வரோ அவருக்கும் "முடியாது" என்ற பதிலையே அடித்துக் கூறினார்.

நஞ்செகவுடா என்ற ஒரு கர்நாடகத் தலைவர், "காவிரி ஒன்றும் தலைமையமைச்சரின் அப்பன் வீட்டுச் சொத்து அல்ல!" என்று இடக்காகவேக் கூறினார். "தலைமையமைச்சர் கர்நாடகத்தின் உள்விவகாரங்களில் எல்லாம் தலையிடக்கூடாது!" என்று இன்னொரு கர்நாடகத் தலைவர் வாச்பாயை எச்சரித்தார். இந்த வளர்ச்சி எல்லாம் கண்டு பெங்களூர்த் தமிழர்கள் பயந்த ஒரு நிலைக்கு ஆளாக்கப்பட்டனர். மைசூர்த் தமிழ்ச் சங்க ஏடு, "மைசூர் முரசு"-ம் அப்படிப்பட்ட பய உணர்ச்சி தங்கள் வட்டாரத்திலும் ஏற்பட்டதாக எழுதுகிறது. இந்த நிலையில் தமிழக அரசு சம்பா நடவைத் தள்ளிப் போடும்படி உழவர்களை கேட்டுக் கொண்டது.

தலைமையமைச்சர் 29.09.99 அன்று காவிரி ஆணையத்தைக் கூட்டுவதாக கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு, புதுச்சேரி முதல்வர்களுக்கு அழைப்பு அனுப்பினார். ஆனால் கர்நாடக முதல்வர், ஆணையிட இயலாத அந்த ஆணையக் கூட்டத்திற்கு செல்ல மறுத்து "மருத்துவ விடுமுறைச் சீட்டு" அனுப்பி விட்டார். உண்மையில் இந்த ஆணையமே ஏற்கெனவே குறிப்பிட்ட மாதிரி சட்டப்படி உருப்பெற வில்லை. கடந்த 14 மாதங்களில் ஆணையத்திற்கு முன்னால் கொண்டு வரப்பட்டச் சிக்கல்களை ஒன்றே ஒன்றுதான். அதாவது நீர் அளவை எங்கே எடுப்பது?, எல்லை ஊரான பில்லி குண்டுவிலா அல்லது மேட்டூரிலா என்பதையே ஆணையம் இன்னும் முடிவு செய்யவில்லை.

கர்நாடக அணைகளில் இருந்துதான் இடைக்கால ஆணையின்படி மாத வாரியாகவும், கிழமைவாரியாகவும் நீர் விடப்பட வேண்டும், என்பது நடுவர் மன்றத் தீர்ப்பு. ஆனால், கர்நாடகமோ இந்த ஆண்டு சனவரிக்குப் பிறகு சூன் முடிய அவர்களின் அணைகளில் நிரம்பி வழிந்த நீரை மட்டும் விட்டுக் கொண்டிருந்தது. அதற்குப் பிறகு பட்டேல், "மழை பெய்தால் அதை எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று தமிழ்நாட்டைப் பார்த்து திமிரோடு பேசினார். அவர்கள் இவ்வாண்டு மழை குறைவு எனக்கூறுவது பொய்! சூலை, ஆகற்று, செப்டம்பர் மாதங்களில் வந்த கொஞ்சம் நீரும் அவர்கள் அணை கொள்ளாத மழை நீரே ஆகும்.

தமிழகத்திலுள்ள மக்களில் ஒரு பகுதியினருக்காவது தற்போது 1998 ஆகற்று மோசடி விளங்கியுள்ளது. கண்காணிப்புக் குழு தன் பரிந்துரை அறிக்கையைத் தலைமையமைச்சரின் செயலரிடம்தான் கொடுக்க முடிந்தது. தலைமையமைச்சரைச் சந்திக்க முடியவில்லை.

வறட்சியின் உச்சத்தின்போது சமுதாயத்தின் அடித்தட்டு மக்கள் உழவுக் கூலிகள் தேநீர் குடிக்கக்கூட காசு இல்லாமல் அல்லலுற வேண்டியதாயிற்று. சிலர் திருடுவதிலும், கொள்ளையடிப்பதிலும் ஈடுபட்டதாகச் செய்தி வந்தது. சில சிற்றூர்களில் மக்கள் தங்கள் வாழ்விடங்களைக் காலி செய்துவிட்டு வெளியேறிவிட்டார்கள். காரைக்காலில் அரசு நிலவரியை ரத்து செய்துவிட்டது.

இந்த ஆண்டு தமிழகத்தில் மழை பொய்த்துள்ளது. வானம் பார்த்த வேளாண்மையே என்கிற நிலை கிட்டதட்ட உருவாகிவிட்டது. கருநாடகம் செய்த



படிப்பகம்

www.padippakam.com

கொடுமையால் தமிழ்நாட்டு உழவர்களுக்கு 1000 கோடி உரூபா நட்டம் என ஒரு உழவர் கழகத் தலைவர் கூறுகிறார்.

இந்த நெருக்கடி தமிழர்நாட்டு தலைவர்களில் சிலரைக் கொஞ்சம் உறுதியோடு பேச வைத்துள்ளது. கர்நாடகத்தின்மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்றும், அங்கு படைகளை அனுப்ப வேண்டும் என்றும், அரசியல் சட்டம் 356யைப் பயன்படுத்தி கர்நாடக அரசைக் கலைக்க வேண்டும் என்றும் இவ்வாறெல்லாம் பேசுகிற அளவுக்கு நிலை வளர்ந்துள்ளது.

கர்நாடகம் தலைமையமைச்சரின் அழைப்பையே உதாசீனம் செய்யும் நிலை எப்படி ஏற்பட்டது? தமிழகம் காவிரியை வேகமாக இழக்கும் நிலையும் எப்படி வந்தது? உண்மையில் கர்நாடகம் நடுவர்மன்ற இடைக்கால ஆணையை நிறைவேற்ற முடியவில்லை என்றால் தன்னை அணுக வேண்டும் என இடைக்காலத் தீர்ப்பில் நடுவர் மன்றம் கூறியுள்ளது. மெய்யாகவே தன் அணைகளில் நீர் குறைவு என்றால் கர்நாடகம் ஏன் நடுவர் மன்றத்தை அணுகவில்லை? மாறாக, தலைமை அமைச்சரையே மிரட்டும் அளவிற்கு எப்படி அவர்களால் போக முடிகிறது என்பதையெல்லாம் எழுதிவந்துள்ள கட்டுரைகள் அனைத்தையும் காய்ப்பு உவர்ப்பு இன்றி படித்துப் பார்ப்பவர்களுக்குப் புரியும்.

மேட்டூரிலிருந்து நீர் விடுவதை நிறுத்தியாக வேண்டுமென்ற நிலை ஏற்பட்டபோது எங்கேயோ கொஞ்சம் மழை பெய்துவிட்டதை வைத்து அணை, 30.09.99 அன்று மூடப்பட்டது. தற்போது பெய்துள்ள மழையால் மேட்டூருக்கு கொஞ்சம் நீர் வந்துள்ளது. காவிரிக் கடைமடைப் பகுதியில் பெய்துவரும் ஓரளவு மழை சில பகுதிகளில் குறுவையைச் காப்பாற்றவும், சம்பா நடவு ஓரளவு நடைபெறவும் சாத்தியமாகி உள்ளது. ஆனால் ஏதோ மழை கொட்டோ கொட்டு எனக் கொட்டுவது மாதிரியும் குறுவையும், சம்பாவும், தாளடியும் நீக்கமறப் பயிராவது போலவும் அரசு தன் முயற்சியால் செய்திகளைப் பரப்பி மக்கள் நடுவில் ஒரு தவறான எண்ணத்தை விதைத்துவிட்டது.

ஆக, கர்நாடக அரசின் தொடரும் காவிரி தொடர்பான அணைத்திட்ட வேலைகளும், கால்வாய் விரிவாக்கம் முதலிய வேலைகளும், நடுவணரசின் ஓரவஞ்சனைப் போக்கும், தமிழகத்தினுள் ஒற்றுமையின்மையும், கலைஞர் போன்றவர்களின் இரண்டகமும் தமிழகம் தன் காவிரி உரிமையை இழக்கும் நிலைக்கு வேகமாக இட்டுச் செல்லும் நிலையை உருவாகியுள்ளது.

### *இந்த நிலை மாற!*

இந்த நிலையை மாற்றி தமிழகம் காவிரி உரிமையை நிலைநாட்ட கட்சிப் பற்றும், சாதிப் பற்றும் தன்னல ஓர்மையும் இல்லாத தமிழ் இன ஓர்மை கொண்ட இலக்கக்கணக்கான இளைஞர்கள் ஆர்த்தெழ வேண்டும். காவிரி உரிமை மட்டுமல்ல,

பெரியாறு உட்பட தமிழர்நாடு இழந்துவரும் நீர் உரிமைகளை காக்கவும் மற்றும் மண்ணுரிமை, பொருளாதார உரிமைகளைக் காக்கவும் தற்போது உள்ள தமிழகத் தலைமைகள் அகற்றப்பட வேண்டும்.

தமிழர்நாட்டைக் காக்க என்றே கங்கணம் கட்டிப் புறப்படும் இளைஞர்கள் தமிழகத்தை வாழவைக்கும் உரியைத் தங்கள் கையில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கான அறிகுறிகளும் தோன்றியுள்ள நிலையைத் தற்போது காண்கின்றோம். அன்னை காவிரியை நம் செந்நீர் சிந்தியும், சென்னி கொடுத்தும் காப்போம். வாரீர், வாரீர் என அழைக்கிறோம்.

### *பின்னுரையாகச் சில...*

தமிழகத்தைப் பொறுத்தவரையில் காவிரி நம் கையை விட்டுச் சென்று தமிழகத்தின் எதிர்காலம் இருட்டாகி விடுமோ என்று அச்சம் கொள்கிற நிலைக்கு நாம் ஆளாக்கப்பட்டச் செயல்களில், கலைஞரின் பங்கு மிக அதிகம். அவருடைய கெட்ட வாய்ப்பு, காவிரி தொடர்பான முகாமையான முடிவுகள் எடுக்க வேண்டிய நேரங்களில் எல்லாம் அவர் தமிழக முதல்வராக இருந்ததும், இருப்பதும்தான்.

காவிரி மட்டுமல்ல, இதர தமிழகத்தின் தலையாயச் சிக்கல்களில் எல்லாமே, தமிழக உரிமையா அல்லது அவரது ஆட்சியா என்கிற வினா எழும்போதெல்லாம் அவர் ஆட்சியையே அதிகம் நேசித்துவிட்டதால் தமிழகத்திற்கு நேர்ந்துவிட்ட இழப்புக்கள் காவிரி மட்டுமல்ல. இன்னும் பலப்பல உண்டு.

மற்றபடி தமிழகம் காவிரியை இழந்து வருவதில் இந்தி(ய) தேசியக் கட்சிகள், அவைகளின் தமிழ்நாட்டுக் கிளைகள், தமிழ்நாடு அளவிலானக் கட்சிகள் ஆகியவற்றின் பங்கும் சில தில்லித் தலைவர்கள், தமிழகத்தின் பிற முதல்வர்கள் மற்றும் தமிழர்நாட்டிலேயே உள்ள தில்லி மற்றும் கர்நாடகத்தின் கையாட்கள் ஆகியோரின் செயல்பாடுகள் குறித்தும் எழுத இருக்கிறோம்.☐



படிப்பகம்

www.padippakam.com

### பட்டியல் 2

## காவிரியில் நாம் பெறவேண்டியது வெறும் 205 நூ.கோ.க.அடி (டி.எம்.சி) தண்ணீர்தானா?

*கடந்த ஆண்டுகளில் தமிழர்நாடு பெற்ற நீரின் பங்கு எப்போது படிப்படியாகக் குறைக்கப்பட்டது என்பதைப் பாருங்கள்.*

| ஆண்டு | ஒப்பந்தம் | த.நா. பங்கு | குறிப்புகள் |
|---|---|---|---|
| 1924 | ஆங்கில அரசாட்சியின் கீழ் சென்னையும் மைசூரும் செய்து கொண்ட ஒப்பந்தம் | 575.68 நூறு கோடி கன அடி நீர் | நைல் ஆற்று ஒப்பந்தத்தை முன்னுதாரணமாகக் கொண்டு இவ்வொப்பந்தம் உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு சராசரியாக ஆண்டிற்கு 489 நூறு கோ. க. அ. நீரைப் பெற்றது. |
| 1972 | ஜி. ஆர். பட்டேல் குழு அறிக்கை | 489 நூ.கோ.க. அ. நீர் | த.நா., கர்நாடகம், கேரளா ஆகிய மாநில முதல்வர்கள் இந்த அறிக்கையை ஏற்றுக் கொண்டனர். இம்மாநிலங்களுக்கு முறையே 489, 177, 5 நூறு கோ. க. அடி நீரைப் பயன்படுத்தலாம் என்றது அவ்வறிக்கை |
| 31-5-72 | மைய அமைச்சர் கே.எல் ராவ் முன்னிலையில் மூன்று மாநிலங்களுக்கு இடையில் செய்து கொண்ட ஒப்பந்தம் | 489 நூ.கோ.க. அ நீர் | இருக்கும் நிலையை அப்படியே தொடர்வது என ஏற்றுக் கொள்ளப்பட்டது |
| 1974 | நீர்வளத்துறை அமைச்சர் செகசீவன்ராம் ஏற்பாடு செய்த கூட்டம் | 489 நூ.கோ.க. அ. நீர் | இக்கூட்டத்தில் நடப்பில் உள்ள பங்குகள் தீர்மானிக்கப்பட்டன. |
| 1976 | நெருக்கடி காலத்தின் போது முன்வைக்கப்பட்ட சமரசத் திட்டம் | 489-100 = 389 நூ. கோ.க.அ. நீர் | இது நெருக்கடி காலத்தின்போது அறிவிக்கப்பட்டதால் எந்த ஒரு மாநிலமும் இதற்கு ஏற்பளிக்கவில்லை. |
| 1980 | முந்தைய 75 ஆண்டுகளை கணக்கிட்டு கர்நாடகம் முன்வைத்த திட்டம் | 375 நூறு கோ.க.அ. நீர் | காவிரியின் ஒட்டு மொத்த நீரோட்டத்தில் தமிழ்நாடு, கர்நாடகம், புதுச்சேரி, கேரளா ஆகியவை முறையே 47%, 47%, 5%, 1% நீரைப் பகிர்ந்து கொள்ளலாம் என இத்திட்டம் முன்மொழிந்தது. |
| 22-4-90 | கர்நாடக முதல்வர் வீரேந்திர பட்டேலின் அறிக்கை | 489-73 = 416 நூறு கோ.க.அ. நீர் | 250 நூறு கோ.க.அ. நீரை கர்நாடகம் பயன்படுத்திக் கொள்ளலாம். த.நா. அதற்கு ஒத்துக் கொள்ளும் என்று பட்டேல் நிறைவடைந்தார். முன்பு 177 நூறு கோ.க.அ. நீரைப் பயன்படுத்திக் கொள்ள மறைமுகமாக ஒத்துக்கொண்டது என்றார். (ஒட்டு மொத்த நீரோட்டத்தில் 177 நூறு கோ.க.அடி நீரைப் பயன்படுத்திக் கொள்வதையே அவர் குறிப்பிடுகிறார்) |
| 23-6-91 | காவிரி ஆற்று நீர்ச்சிக்கல் நடுவர் மன்றம் | 205 நூறு கோ.க.அ. நீர் | 1. மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவைக் கொண்டே த.நா.வுக்கு வழங்கப்பட வேண்டிய நீரின் அளவு தீர்மானிக்கப்பட்டது. காவிரியின் சராசரி ஒட்டு மொத்த நீரின் அளவைக் கொண்டு தீர்மானிக்கப்படவில்லை.<br>2. அதுவும்கூட அண்மைக்காலமாகிய 1980-81 முதல் 1989-90 வரையிலான அளவைக் கொண்டே தீர்மானிக்கப்பட்டது.<br>3. நடுவர் மன்றத்தின்படி இது ஏற்றுக் கொள்ளக்கூடிய அறிவார்ந்த அடிப்படையாகும்<br>4. 1972ம் ஆண்டு முதலமைச்சர்கள் கூட்டத்தில் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதை நடுவர் மன்றம் புறக்கணித்தது.<br>5. இந்தக் கட்டத்தில் கட்டப்பட்ட அணைகள் சட்டத்திற்கு உட்பட்டவையா அல்லவா என்பது ஆராயப்படவில்லை.<br>6. மேட்டூர் அணையின் நீர்வரத்து குறைந்து போனதற்கான கரணியம் கர்நாடகம் சட்டத்திற்குப் புறம்பாகக் கட்டிய அணைகளேயாகும்! ஆனால் அதிர்ச்சி என்னவென்றால், இந்த அணைகளில் இருந்து கிடைக்கும் பயன்களைப் பெறுவதற்கு கர்நாடகத்திற்கு இசைவு தந்ததுதான். எனவே, கர்நாடகம் தொடர்ந்து பயன்களை அறுவடை செய்து கொண்டே வருகிறது.<br>7. இப்பத்தாண்டுகளில் பெய்த மழையின் அளவு மிக மிகக் குறைந்தது என்பது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. |

*ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆண்டுக்குச் சராசரியாக 400 நூறு. கோ. க. அடி காவிரி நீரைப் பெற்றுவந்த தமிழர்நாட்டுக்கு. ஆண்டுக்கு 205 நூ.கோ.க.அடி என (இடைக்காலத் தீர்ப்பினாலும்) நடுவர் மன்றம் முடிவு செய்ததும் இமாலயத் தவறாகும். ஆனால் அதற்கு மறு முறையீடு கிடையாது. எனவே. காவிரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பைப் பெற அதன் உசாவலை மிக விரைவாக நடத்தி முடக்கிவிட வேண்டும்!*

படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரையாக சில...



30-40 ஆண்டுகளுக்கு முன்பாக "ஏ தாழ்ந்த தமிழினமே!" எனத் தமிழகத்தைப் பார்த்து விளித்து வந்தனர் தமிழகத் தலைவர்கள். ஒரு தலைமுறைக்குப் பின், "தமிழகம் வீழ்ந்தது எதனால்?" என்று எடுத்துரைப்புக்களில் இறங்கியுள்ளனர் சில அறிவுஜீவிகள்.

சரி, எழுவது எப்படி? என்ற வினாவுக்குச் சிலர், "திராவிடத்தால் வீழ்ந்தோம், தமிழால் எழுவோம்" என்பதில் இருக்கின்றனர்.

தாழ்ந்தவிதம் எப்படி? வீழ்ந்தவிதம் எங்ஙனம்? இழந்து கொண்டே இருப்போமா, எழுந்து நிற்க மாட்டோமா என்ற வினாக்களுக்கெல்லாம் விடை வேண்டாமா?

தாழவும், வீழவுமான நிலைகளை ஏற்படுத்திய, நிலைநிறுத்தச் செய்ய முயலும் உட்பகைகள் என்னென்ன? வெளிப்பகைகள் யாவை? என்பதைப் பற்றியெல்லாம் தமிழன் சிந்திக்கத் தொடங்க வேண்டாமா?

தமிழகத்தில் அத்தகையச் சிந்தனைகள் ஏற்கெனவே தொடங்கிவிட்ட அறிகுறிகள் தெளிவாகத் தெரிகின்றன. எந்த விடுதலைக்கு என்ன விலை கொடுக்க வேண்டும் என்பதையறிந்து செயலாற்றும் அரிமாத் தமிழ் இளைஞர்கள் ஆங்காங்கே சிலிர்த்தெழுந்து வருகின்றனர்.

ஏற்த்தாழ ஆயிரம் ஆண்டு தமிழக அடிமை வரலாற்றை மாற்ற ஒரு நூறு ஆண்டு முயற்சிகள் தமிழ்நாட்டின் விடியலுக்குக் கட்டியம் கூறின. அதன் உச்சாணியாக, துமுக்கிகளுக்கு (துப்பாக்கிகளுக்கு) முன்னால் நெஞ்சைக் காட்டி நின்ற தமிழ் அடலேறுகளை இந்தி எதிர்ப்புப் போரில் கண்டோம்.

ஆனால், இந்து, இந்தியவாதிகள் வகுத்த பார்ப்பன பனியா சக்திகள் தங்கள் ஆதிக்கத்தைத் தொடர வகுத்த "வாக்கு மோகினி வலையில்" விழுந்து தமிழகத்தின் உரிமைகளை ஒவ்வொன்றாக இழக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது.

அப்படி இழந்துவரும் தமிழக உரிமைகளில் தலையானது, காவிரி நீர் உரிமை. எனவே அது பற்றிய ஒரு பகுதியை இந்த நூலில் கூறுகிறோம். அதன் முழுமையையும் இதர உரிமைகள் பறிப்புகள் பற்றியும் எழுதுவது தொடர உடல் தளர்ந்தாலும் உள்ளந்தளராத நிலையைத் தரும் ஈழ விடுதலைப் போரும், தோழர் சீவா, கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. போன்றோரின் ஈக வாழ்வு நினைவுகளும் எமக்கு ஈயுமாக.

எழுதுவதும், பேசுவதும், பாடுவதும் தமிழக உரிமைப் போராட்டத்தின் ஒவ்வொரு பகுதிகள்தான். செயல் .... செயல் .... செயல் அதுவே எதிரிகளை வீழ்த்துவதும், வெற்றியை நோக்கி நம்மை இட்டுச் செல்வதும் ஆகும்.

அத்தகையச் செயலுக்கு இந்நூலைப் படிக்கும் தமிழ் இளைஞனுக்கு இது ஒரு தூண்டு கருவியாகப் பயன்பட வேண்டும் எனப் பெரிதும் விரும்புகிறோம்.

தமிழர்கள், அதிகார அரசியல், கட்சிப்பற்று, தலைவர் பக்தி, சாதிப்பற்று ஆகியவை நீக்கிச் சிந்திக்கப் பழகும் காலம் கடிதே வரும் என்ற நம்பிக்கையுடன்

**அன்பன் பூ. அர. குப்புசாமி**

கரூர்
31.10.99

## காவிரியும் கலைஞரும்!

வேர்கள் மாத இதழில் 18 கட்டுரைகளாக வெளிவந்த ஒரு தொடரின் தோர்வைதான் இந்த நூல்.

காவிரி ஆற்றுரிமையை நாம் எப்படி இழந்தோம் என்பது பற்றிய ஒரு வரலாற்றுப் பதிப்பு இது!

தன் வரலாற்றை அறியாத எந்த இனமும் மீண்டதாகச் சான்று கிடையாது.

இழந்த வரலாற்றைச் சொல்வதன் நோக்கமே அதை மீட்டெடுக்கத்தான்.

தாங்கவியாலாத உடல் நோக்காட்டுக் கிடையிலும் தன் பேச்சிலும் மூச்சிலும், சொல்லிலும் செயலிலும் தமிழினத்தின் விடுதலையைத் தாங்கி நடை போடும் மதிப்பிற்குரிய குப்புசாமி அவர்களை தமிழினத்தின் சார்பில் வாழ்த்தி வணங்குகிறோம்.

வேர்கள் ஆசிரியர் குழு

புத்தகத்தின் விலை
10 உருபா

கிடைக்குமிடங்கள்

வழக்கறிஞர் பூ.அர.குப்புசாமி.
19 மேற்கு மடவளாகம்.
கரூர் — 6390001

அரிமாவளவன்.
10அ3 வாத்துக்காரத் தெரு.
உறையூர். திருச்சி 620003